பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

பிப்ரவரி 2025



## மலையகத்தின் பெண் ஆளுமை

# அஸ்மா டீன்



வடிவமைப்பு சேவைகள்
கல்வி
பாடத்திட்டம்
கையேடுகள்
மீள் பதிப்பு
மொழிபெயர்ப்பு
சஞ்சிகைகள்
மலர்கள்
நூல்
மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப தட்டச்சு மற்றும் வடிவமைப்பு வேலைகளை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் செய்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு..
+94 70 377 0731
designglitz123@gmail.com
DESIGN GLITZ

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – பிப்ரவரி 2025

638

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறுாக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு உதவி :

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

நேச நெஞ்சங்களுக்கு இனிய வந்தனங்கள்!

ஒரு சிறிய இடைவேளையின் பின்னர் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நண்பனின் திருமண அழைப்பை ஏற்று அயல் நாட்டு விஜயம் சென்றமை காரணமாக உரிய நேரத்தில் இதழை உங்களுக்கு வழங்காமையையிட்டு வருந்துகிறேன். உங்களின் வாசிப்புத் தேடலை நிவர்த்தி செய்வதற்காக இதழ் பல சுவாரஷ்ய மான அம்சங்களை இம்முறையும் சுமந்து வந்துள்ளது.

நண்பனின் திருமணம், பல புதிய உறவுகளின் என கடந்த மாதம் மிகவும் சிறப்பாக சென்அறிமுகம், இலக்கிய ஆளுமைகளுடனானசந்திப்புக்கள்றது. அத்துடன் இலங்கையில் உள்ள மறைந்திருக்கும் கலைஞர்களை வெளிக்கொணடர்வதற்கான அமைப்பான ஏட்டுலா கனவாக்கத்தின் மூன்றாவது கவிதை நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததோடு பல இலக்கிய உறவுகளையும் சந்தித்து புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைந்தது. இதழில் வெளியீட்டு அனுபவங்களையும் உங்களுடன் பகிர்ந்துள்ளேன்.

வாசித்துப் பயன்பெறுமாறு வாசகப்பெருமக்களை வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி!

என்றென்றும் அன்புடன்

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# விழித்திரையிலே



நிஜமறியா எதிர்பார்ப்புக்கள் கோடி
கற்பனைச் சிந்தையில் உலாப் பயணம்...
எண்ணறியா எண்ண அலைகள் யாவும்
காட்சிப் படலங்களாய் விழித்திரையிலே

இறந்த கால விதியின் இருப்பதில்
சகலமுமே நீங்கா நினைவுகளன்றே...
உணர்வுகளின் உச்சங்கள் ஜனிக்கும் தருணங்களே
மனத் தடயங்களாய் இருப்பாகின்றன விழித்திரையிலே

ஒன்றின் மீதான கண்மூடித்தனமான நம்பிக்கையது
சற்றும் யோசிக்காமல் ஏமாற்றமெனும் பரிசளித்து
தன்னிலே இயல்பாய் செல்கையில்
வடுப்பதித்த வலிகளவை விழித்திரையிலே

நடப்பன யாவும் நலவென நடந்த வண்ணமிருக்க
கைகூடல்களின் திருப்தியில் மனமும் அமைதிகாக்க
ஈற்று நொடியெனும் சீரான முற்றுப்புள்ளியோ
சிதறலாகும் அத்தருணம் ஆழமாய் விழித்திரையிலே

அடிமன அவாவின் வேரூன்றலது
அயரா முயற்சியில் கிளைகள் பல தாங்கியும்
வீழ்ச்சிகள் பலவின் அனுபவிப்பின் பின்பு
ஜயம் எனும் உச்சி தொடும் கண்ணீரோ விழித்திரையிலே

துயரின் ஆழத்தில் புதையுண்டு
வெறுமையென தனித்திருக்கையில்
ஆறுதலெனும் ஔடத மொழி பேசிய
வார்த்தைகளும், வதனங்களும் விழித்திரையிலே

வஞ்சகமெனும் இரட்டை முகங்களிற்கு மத்தியில்
எவ்வித எதிர்பார்ப்புக்களும் இன்றி
தாமாகவே எம்மையும் தாங்கிடும்
அவ்வரிய மனங்கள் என்றும் விழித்திரையிலே

விதி விட்ட வழி வாழ்க்கையை
விருப்பத்தோடும் விரக்தியோடும்
கடந்திட்ட சில பொழுதுகளை
மீளெண்ணி புரட்டிப் பார்க்கையில்
அக்காட்சிகள் என்றென்றும் விழித்திரையிலே


பேனா முனைக் காதலி
**ஹாஸ்மியா தாஹா**
கெக்கிராவ-கலாவெவ, இலங்கை



# காதலாகிக் கசிந்துருகி...

---இரஜகை நிலவன்---

வயல்காட்டில் அறுவடை வரச் சொல்லி தலையாரி சொல்லி அனுப்பியிருந் தார். மருக்கொழுத்து 'சரி, நான் காலையிலே நேரே வயலுக்கு வந்துடறேன். வயக்காடு ஆற்றங்கரையிலேயிருந்து எவ்வளவு தூரம்' என்று கேட்டாள் வந்திருந்த பெண்ணிடம்.

'ஆத்துக்கு அடுத்தாப்பலதான் வயக்காடு. அதனால சொமக்கறதுக்கு அவ்வளவு தூரமி ருக்காது. அறுத்து வயலிலேயிருந்து வண்டிக்கு ஏற்றிவிட்டு மத்தியானம் கஞ்சிக் குடிக்க வீட்டுக்கு வந்துடலாம்' என்றாள், வந்தவள்.

'சரி. காலையில வந்துடுறேன்' என்று சொல்லி, வந்த பெண்ணை அனுப்பி விட்டு, உள்ளே வந் தாள், மருக்கொழுந்து.

மண் அடுப்பில் பொங்கிய சோற்றுப் பானை மூடியைத் திறந்து கீழே வைத்து விட்டு மர அகப் பையில் சோற்றைக் கோரி வெந்துவிட்டதா எனப் பார்த்தாள்.

'அம்மா... நான்தான் ஸ்கூலிலே பர்ஸ்ட் ராங்க், பாரு கப் வாங்கிட்டு வந்திருக்கேன்' என்றவாறு மகள் கனிமொழி புத்தகப் பையோடு உள்ளே வந்தாள்.

'என் ராசாத்தி!' மகளை அணைத் கொண் டாள். 'நெறையப் படிச்சு நீ கலெக்டராகணும்! அதுக்குத்தானே இப்படி வேகாத வெயிலே வேலைக்குப் போறேன். சரி சரி. போய் இஸ்கூல் துணியை மாத்திட்டு வா. கஞ்சி குடி, என் பொண்ணுக்குச் சுத்திப்போடணும்'.

மகளை அனுப்பிவிட்டு அடுப்பில் இருந்த சோற்றில் தண்ணீர் வடித்தாள்.

திரும்பிக் கனிமொழியைப் பார்த்த போது

‘எட்டாங்கிளாஸ் படிக்கிற புள்ளையவிட உடம்பு வளந்தாச்சு. இவள் எப்ப சமைஞ்சு இன் னும் செலவை இழுத்து வைக்கப் போறாளோ?’ என்று மருக்கொழுந்து பெருமூச்சுவிட்டாள்.

துணி மாற்றிவிட்டு வந்த கனிமொழி ‘எல்லாப் பிள்ளைகளும் இன்னைக்கு அப்பா அம்மாவோட ஸ்கூலுக்கு வந்திருந் தாங்க. நான் பரிசு வாங்கறதைப் பார்க்க நீயும் வரலே. எனக்கு அப்பாவும் இல்லே‘ என்று கையை விரித்தாள்.

ஆவேசம்வந்தவளாக ‘கனி, அப்பாவைப் பத்திப் பேசக்கூடாதுன்னு எத்தனை தடவை உனக்குச் சொல்லியிருக்கேன்’ என்று அதட் டினாள். ‘போய்க் கஞ்சி குடி‘ என்றவாறு செம்பை எடுத்து தண்ணீர் குடித்துவிட்டு படபடப்பு வந்தவளாக கயித்துக் கட்டிலில் வந்தமர்ந்தாள். அவள் மனதில் டி.வி. ஓடியது.

’நான் இவளை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கும்போது எவளையோ இழுத்துக்கொண்டு போனவன், என் புருசன்.. சே... இவனையெல்லாம் என் புரு சன் என்றே சொல்லக் கூடாது.

ஆனாலும் எனக்கு திருமணம் முடித்து இரண்டு ஆண்டு என்னோடு எத்தனை பாசமாக இருந்தான். என்னை எப்படித் தாங்கினான். கனிமொழியைத் தரித்த போதுகூட எத்தனை குதூகலத்தில் எனக்குப் பட்டுச்சேலை வாங்கிக் கொடுத்தான், காதலிச்சாகூட அவ்வளவு பேசியிருப்பமோ, என்னவோ, தெரி யாது. என்னோடு எத்தனை அன் பாகப் பேசி பழகியிருந்தான்.

அப்படிப்பட்டவன் எவளோ ஒருத்தி கிட்ட மயங்கிப்போனான். எவளோ என்ன... எதிர்த்த வீட்டு தாலியறுத்த முண்டைதான். அவளோட ஊரைவிட்டே ஓடிட்டான். எவ்வளவோ தேடியும் கிடைக்காமல், நான் கனிமொழியைப் பெற்று வளர்த்து... எப்பப்பா எத்தனை கஷ்டம்? இப்பப் போய் அப்பனை கேட்டா, நான் எங்க போய் தேடுவேன்?

அவன் என்கூடவே இருந்திருந்தா இன் னும் நல்ல வீட்டிலே இருந்திருக்கலாம். நெல்லுச்சோறு போட்டு மகளை செல் லமா வளர்க்கலாம். இப்பகூட தலையாரி என்னை ஒரு மாதிரி பார்க்கிற பார்வையை தடுத்திருக்கலாம். பாவி மனுசன், எதிர்த்த வீட்டுக்காரி முந்தானையைப் புடிச்சிகிட் டுப் போனவன் திரும்பி வராமலே போய் விட்டான்.

மருக்கொழுந்தின் மலரும் நினைவு களை எண்ணியபோது... ‘யம்மா! நான் பக்கத்து வீட்டு முத்து அக்காகிட்ட இங்கி லீஷ் படிச்சிகிட்டு வரேம்மா‘ என்ற குரல் கலைத்தது.

அவள் திரும்பிப் பார்ப்பதற்குள் கனிமொழி சிட்டாகப் பறந்து போய் விட்டாள்.

‘மெதுவாக படுத்து தலை சாய்க்கலாம். இவ படிக்கப்போனா வரதுக்கு ரெண்டு மணி நேரமாகும்’ என்று எண்ணி எழுந்து கதவைச் சாத்த வந்தவள், வாசலில் நிழ லாடியதைப் பார்த்து ‘யாரு?‘ என்றாள்.

‘மருக்கொழுந்து’ என்றான் அந்த கோர மான உடையில் தாடியும் பரட் டையுமாக நின்றவன்.

முதலில் புரிய மறுத்தாலும், குரல் கேட்டு அடையாளம் தெரிந்துகொண்ட மருக்கொழுந்து சிலிர்த்துப்போனாள். ’என் புருஷன்... என்னை விட்டுவிட்டுப் போன கணவன் திரும்பி வந்துவிட்டான்’ என்று மனம் குளிர்ந்தது. இருந்தாலும் ‘ஆரது?‘ என்றாள்.

‘மருக்கொழுந்து, என்னைத் தெரியல் லையா? நான்தான் உன் புருசன் கணேசன். திரும்பி உங்கிட்டே அடைக்கலம் தேடி வந்திருக்கேன். மருக்கொழுந்து‘ என்றான் உள்ளே வர எத்தனித்தவாறு.

கொஞ்சம் கோபமாக ‘எங்க வந்தீக?’ என்றாள், மருக்கொழுந்து.

‘என்னை வாயும் வயிறுமாக விட்டு விட்டுப் போன இவன் பன்னிரண்டு வருசத்திற்குப் பொறவு தேடி வந்திருக்கான். அதுவும் வேற வழியில்லாமல். இவனில்லாமல் இத்தனை நாள் வாழ்ந்தாச்சு. இனி இவன் எனக்குத் தேவையா?’

உடம்பின் இளமை கொஞ்சம் கெஞ்சியபோதும் அதை அதட்டிவிட்டு ‘இங்க எதுக்கு வந்தீக?’ என்றாள்.

‘நான் உனக்கு செஞ்ச பாவத்துக்கு பிராயச்சித்தம் தேடி வந்திருக்கேன், மருக்கொழுந்து’ என்றவாறு உள்ளே நுழைய கணேசன் மீண்டும் முயற்சித்தான்.

‘உள்ளே வராதீக!’ அவள் தடுத்தாள்.

‘உங்களுக்கும் எனக்கும் இருந்த உறவெல்லாம் அறுந்துபோச்சு. என்னை பிள்ளைத்தாச்சியா உட்டுப் போட்டு உங்கள் உடம்பு சொகத்துக்கு இன்னொருத்தியை இழுத்துட்டுப் போனியளே... அன்னைக்கே நம்ம உறவு முறிஞ்சி போயாச்சு. நீங்க இல்லாமலே பத்துப் பதினைஞ்சு வருசத்தை ஓட்டிட்டேன். இனி நீங்க எனக்கு வேண்டியதில்லே. வெளியே போங்கோ’ என்று கத்தினாள் மருக்கொழுந்து.

‘நான் நொந்து போய் வந்திருக்கேன் மருக்கொழுந்து. நாம வாழ்ந்த ரெண்டு வருச வாழ்க்கையை நெனைச்சு எத்தனை நாள் கண்ணீர் விட்டிருக்கேன் தெரியுமா? அந்த வாழ்க்கையை திரும்ப வாழணும்னு தான் உன்னைத் தேடி வந்திருக்கேன், மருக்கொழுந்து‘ ஏக்கமாக அவளைப் பார்த்தான், கணேசன்.

‘நான் எத்தனையோ கஷ்டப்பட்டு நீ இல்லாமலே நாளைக் கடத்தியாச்சு. நீ போ. இனியும் நான் இப்படியே தனியே வாழ்ந்துக்கிறேன். நீ போய்யா’ என்று கத்தினாள், அவள்.

‘ஏன் மருக்கொழுந்து இப்படி கத்தறே? நாலு பேரு பார்த்தா தப்பா நினைப்பாங்க.’

‘எதிர்த்த வீட்டுக்காரியை இழுத்துக்கிட்டு ஓடினியே, அப்ப உனக்கு இது தெரிஞ்சிருக்கணும். அன்னைக்கு இந்த மாதிரி கவலைப்பட்டிருந்தா, என்னை அம்போன்னு உட்டுட்டுப் போயிருப்பியா? போ... போயிடு‘ திரும்பவும் மார்பு ஏறி இறங்க வேகமாகக் கூச்சலிட்டாள், மருக்கொழுந்து.

கணேசன் ஏதோ சொல்ல வாயெடுக்க, அவன் முகத்திலடித்தது போல ‘படார்’ என்று கதவை சாத்திவிட்டு, வீட்டுக்குள்ளே வந்த மருக்கொழுந்து, முந்தானையை எடுத்து வாயை மூடிக்கொண்டு விம்மினாள்.

---

# தாயுமானவள்

**லிமரைக்கூ**
**(இரட்டைக் கிளவி)**

மளமளவெனும் பொங்கும் கண்ணீர்
தளதளவென வளர்ந்து நிற்கும் பெண்
கலகலவென சிரிக்கையில் கண்ணீர்
*

மினுமினுவென மினுங்கும் கண்
பட படவென கண் சிமிட்டலுடன்
பளபளக்கும் கண்ணாடி கண்
*

துடி துடிக்கும் வலியில் என்மின்
அம்மம்மா எனக் கதற நான்
தாயும் ஆவேன் என்பேன்

**– சசிகலா விஸ்வநாதன்**




# நீ உதிர்த்த சிறகின் பறவை

**ஆசிரியர்:** மீ.யூசுப் ஜாகிர்
**பக்கங்கள்:** 134
**விலை:** ₹150
மௌவல் பதிப்பகம், வலங்கைமான்
**தொடர்பு எண்:** 9787709687

‘நீ உதிர்த்த சிறகின் பறவை‘ எனும் மீ. யூசுப் ஜாகிர் எழுதிய கவிதைத் தொகுப்பு காதல் கவிதைகளைக் கொண்டு வெளியாகியுள்ளது. ஏற்கனவே இவரது முதல் கவிதைத் தொகுப்பும் காதல் கவிதைகள் தான். மீளவும் காதல் கவிதைகள் கொண்ட தொகுப்பு வெளியாகியுள்ளது.

இளைஞர்களுக்கென்றே இருக்கும் பாலினக் கவர்ச்சியும் காதல் வயப்படுதலும் கவிஞர்களுக்கு கவிதைகள் வடிக்க வலுசேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

முதல் தொகுப்பு ‘நினைவுகளின் நதி’ என்ற பெயரிலும் இரண்டாம் தொகுப்பு ‘நீ உதிர்த்த சிறகின் பறவை’ என்ற பெயரிலும் நூலாகியுள்ளன.

‘கவிதை நூலுக்கு எப்போதுமே தலைப்பு மிக சிறப்பாக அமைய வேண்டும். அந்தத் தலைப்பு நூலில் இடம் பெற்றுள்ள மொத்த தலைப்புகளுக்கும் ஓர் அறிமுக வரியாக இடம் பெற்றிருக்க வேண்டும். அதே நேரத்தில் இந்த நூலை வாசித்தே ஆகவேண்டும் என்ற எண்ணத்தை தலைப்பைப் படித்தவுடன் வாசகர்களுக்கத் தோற்றுவிக்க வேண்டும்.‘ என்று அணிந்துரையில் கவிஞர் பிரபுசங்கர் குறிப்பிட்டுள்ளது பொருத்தமானது. நூலுக் குத் தலைப்பு வைப்பதில் கவிஞர் யூசுப் ஜாகிர் இரண்டாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

ஆணும் பெண்ணும் சமம் என்றாலும் அனைத்து அம்சங்களிலும் ஆணாதிக்கமே ஓங்கி நிற்கிறது. காதல் மட்டும் விதிவிலக்கா என்ன?

காதலி குறித்த இலக்கியங்கள் சங்க காலந் தொட்டு இன்றளவும் விரவி நிற்கின்றன. தலைவன் தலைவி குறித்துக் காட்சிப் படுத்தும் தொல்காப்பியர் கூட,

**‘தன்னுறு வேட்கை கிழவன் முன்கிளத்தல்**
**எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை’**

என்கிறார்.

பெண்ணானவள் தன் விருப்பத்தைக் தலைவன் முன் குறிப்பால் மட்டுமே உணர்த்த வேண்டும் என தொல்காப்பியம் வரையறை செய்கிறது. ஆண்களுக்கு அந்த வரையறை இல்லை.

அப்படித்தான் காதலை வெளிப்படுத்தவும் தனது விருப்பத்தைத் தெரியப்படுத்தவும் அல்லது ஆணின் ஒருதலைக் காதலை ஏற்க மறுக்கவும் வெளிப்படையான கருத்துச் சுதந்திரம் பெண்களுக்கில்லை. ஆனால் ஆண்களோ பெண்களிடம் வெளிப்படையாக காதல் வேட்கையை வெளிப்படுத்துவதும் ஒருதலைக் காதலானால்’ எனக்குக் கிடைக்காதவள் வேறு யாருக்கும் கிடைக்கக் கூடாது’ என்னும் கருத்தியலோடு வன்முறையில் ஈடுபடுவதும் கண்கூடு.

**‘பகிர்ந்து கொள்ள**
**யாருமில்லாத எல்லாமே**
**பாரம்தான்**
**காதலும் கூட‘**

**‘என் ஆசைகளுக்கு உயிர்**
**கொடுத்த நீ**
**உன்னோடு வாழ வேண்டுமென்ற**
**என் உயிரின் ஆசையை**

மட்டும் கொன்றது ஏனோ'
'இன்னொரு உயிருக்கு
அன்பைக் கொடுக்காதவரும்
இன்னொரு உயிர் கொடுக்கும்
அன்பை உணராதவரும் தான்
மனமில்லாத அரக்கர்கள்'

'பாசத்தை மட்டுமே கொடுக்கிறேன்
நீங்கள் நேசிப்பில்
விஷம் கலந்தப் பிறகும் கூட'

'நான் இறக்கவில்லை
உன்னுடைய பொய்யான காதலும்
உண்மையான நினைவுகளும் தான்
அனுதினமும் இறக்க வைக்கிறது
அணுஅணுவாய்'

'ஒரு நாள் உயிரற்ற என்னுடன்
வெள்ளைத் துணி
சுற்றிக் கிடத்தி
வைக்கப்பட்டிருக்கும்
அப்போது எனக்கு
துரோகமிழைத்தவர்களின்
நெஞ்சம் தவிக்கும்
எனக்கு அநீதி
இழைத்தவர்களின்
மனம் கலங்கி நிற்கும்
என்னை நேசித்தவர்களின்
கண்கள் கண்ணீர் சுமக்கும்
என்னை வெறுத்தவர்களின்
இதயம் கனக்கும்
நான் இந்த அற்ப வாழ்வை விட்டு
விடுதலையாகியிருப்பேன்'

*போன்ற கவிதைகளில் காதல் ஏக்கமும், ஒருதலைக் காதலின் தவிப்பும், கவிஞரின் விரக்தியும் விரவிக் கிடக்கின்றன.*

*ஆனால் கவிஞரின் தூய அன்பையும் ஆழ மான காதலையும் பல கவிதைகளில் வாசித்து இன்புறலாம். அவற்றுள் சில:-*

'அவசரமாகவோ
நிதானமாவோ
நீ இடும் முத்தங்கள்தான்
என் ஆயுளை
நீட்டிக்கச் செய்கிறது'

'எங்கிருந்தோ நீ
என் கவிதைகளை
வாசித்துக் கொண்டிருக்கிறாய்
என்ற நம்பிக்கையில் தான்
இன்னமும்
எழுதிக்கொண்டிருக்கிறேன்'

'உன் மொத்த வாழ்நாளில்
ஒருமுறையேனும் எனக்காக
ஒரு கவிதையை எழுத
முயற்சித்திருப்பாய் தானே
அந்த ஒரு கவிதை தான் என்
கவிதைகளுக்கும் எனக்கும்
கிடைத்த பெரும் விருது'

*இயல்பாய் பெய்யும் மழையைத் தன் காதலுக்குப் பயன்படுத்தி எப்படி எழுது கிறார் பாருங்கள்:-*

'விடாமல் தூறிக் கொண்டிருக்கும்
மழைக்கு
நீ வந்து நனைய வேண்டும்
என்பது கோரிக்கை
நீ காய்ச்சலில் தவிக்கிறாய்
என்றதும் பெருங்குரலெடுத்து
அழ ஆரம்பிக்கிறது
தூறும் மழை'

*இத்தகைய கவிதைகளில்தான் வெற்றி பெறுகிறார் கவிஞர்.*

*காதலைத் தவிர்த்து வேறு கவிதைகள் இல்லையே என்று ஏங்கும் போது சில கவி தைகள் நம்மை ஆற்றுப்படுத்துகின்றன.*

'யாரோ வீசியெறிந்த
ஒற்றைக் கல்லில்
கலங்கி நிற்கிறது
குளம்'

*அம்மா குறித்த கவிதையில்,*

'படிக்காத அம்மாவின்
கைவளையும்
தாலிச்சரடும்தான்
என்னை பட்ட மேற்படிப்பு
படிக்க வைத்தது
படித்து முடித்து வேலை தேடி
அமர்ந்து வட்டியோடு
திரும்ப மீட்டு எடுக்கையில்

திரும்பக் கொடுக்க முடியாத
அளவுக்கு அவள் அன்புக்கடன்
பெருகியிருந்தது
எதுவும் கேட்காமல் விழியின்
ஓரம் கண்ணீர் துளியை
சுமந்தபடி அணிந்து
கொள்ளும் அம்மா வாழ்வின்
பல்கலைக்கழகமாகிறாள்'

என அன்பின் ஆழத்தைக் காட்சிப் படுத்தியுள்ளார் கவிஞர் யூசுப் ஜாகிர்.

'போராடி தோற்றால்
அவமானம் இல்லை
அனுபவம்'

'நீ மீண்டு வரவேண்டும் என்று
மனதில் உறுதியாக இருந்தால்
நீ உதிர்த்த சிறகுகளிலிருந்து கூட
பறவையாக சீறிப் பறக்கலாம்'

போன்ற நம்பிக்கை தரும் கவிதைகள் அருமை.

கவிஞருக்குள்ள கற்பனைத் திறன், வார்த்தைச் செறிவுகள், அழகியல் ஆளுமை ஆகியவற்றைப் பொதுவான கவிதைகளைப் படைக்கப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சமூக அவலங்களை அழகான கவிதைகளால் காட்சிப்படுத்தினால் ஒட்டு மொத்த சமூகமே பயன்பெறும். அடுத்த தொகுப்பில் நம்பிக்கையை மெய்ப்பிப்பார் என நம்பலாம்.

நூலினை அழகுற அச்சிட்டுத் தந்துள்ள மௌவல் பதிப்பகம் பாராட்டுக்குரியது.

'நீ உதிர்த்த சிறகின் பறவை' நூலின் கவிதைகளை வாசித்து இன்பம் துய்க்க வாங்கி வாசியுங்கள்.

**நூல் வேண்டுவோர்:**

**+917010219221**

பெரண மல்லூர் சேகரன்.

தொடர்புகளுக்கு

மீ. யூசுப் ஜாகிர் 7010219221

# எதிர்நிலை

என் எண்ணங்களை
எழுத விழைகிறேன்
தவறுகளைத் தேடுகிறாய்
கருத்துக்கள் ஒன்றிப்
போகவேண்டும் என்ற
கட்டாயமில்லை என்பதை
ஏற்க மறுக்கிறாய்

இருளையும் ஒளியையும்
வானம் மாற்றித் தரும் போது
கருத்துக்களும் மாறலாம்
அது உன்னிலாகவும்
என்னிலாகவும் இருக்கலாம்

எதிர் நிலையில் நின்று பார்ப்பதால்
எதுவும் ஆகப்போவதில்லை
என்பதைப் புரியவைக்கும்
எனது முயற்சிகளையும்
எதிர் நிலைக்கு எடுத்துச் சென்று
எதிரியாகப் பார்க்கிறாய்

எதையுமே ஏற்றுக்கொள்ள மறுப்பவன்
தன் தவறுகளிலிருந்து
மீண்டு வருவதில்லை என்பதை
உணராத வரைக்கும்
உன் தவறுகள் எல்லாமே
உனக்குச் சரியானதே

நேரங்களை எடுத்துக் கொள்
அமைதியாக இருந்து சிந்தித்தால்
மாற்றங்கள் வரலாம்
அப்படியே நானும்

**அ . ஜெகன்**
சுவிஸ்



# பாட்டிமா

சுந்தரிதான் அவள்
என்றைக்கும்

உடலில்
திரை விழுந்திருந்தாலும்,
முதுமை ஏறவில்லை
அவள் நடையில்
மொத்த வீட்டையும்
ஒத்தப் பார்வையில்
ஆளும் சக்தி
கொண்டவள் அவள்

ஆனாலும்,
எனக்கு மட்டும்
ஏகபோக
உரிமை தந்தவள்
அவள்

எப்பொழுதும்
கயிற்றுக் கட்டிலில்
உரிமை பூண்டிருந்து
என்
எதிர்காலம் பற்றி
அசைபோட்டுக் கொண்டே
இருப்பாள்

வந்து
எதிர்ப்படுபவர்களிட மெல்லாம்
என் புராணம்தான்

அவளுக்கென்று
வேறென்ன
இருந்துவிடப் போகிறது
இருப்பு???

ஒட்டைவிழ
இடமில்லாத
சேலை முந்தானையில்
முடிந்து வைத்திருப்பாள்
தனக்கென்று கொடுத்த
பணிகாரத்தையும்
எனக்கென்று

எப்பொழுதும்
அழுக்கேறிய ஆடையுடன்
காட்சிதரும் அவள்,

அன்றுமட்டும்...

மகாராணியாட்டம்
அலங்கரிக்கப்பட்டிருந்தாள்

என்
பாதச் சத்தம்
கேட்டாலே
பாதி வந்து பார்க்கும்
பாதகமகற்றி

அன்று மட்டும்...
ஓலமிட்டு அழுகிறேன்
உசும்பாமல் கிடக்கிறாள்.

**- தமிழ்க்கீரன்**
ஈழநாடு.

# கைப்பேசி

இல்லத்தே ஓரிடமாகி இனியவொலி எழுப்புமே!
சொல்லவும் கேட்கவும் செய்திகளைக் கடத்துமே!
இப்படியே தொலைபேசிக்கு இருந்ததே வாழ்வுமே!
செப்படி வித்தையல்ல மாற்றியதே கைப்பேசியே!

அன்றாட வாழ்வியலின் அவசியத் தேவைகளுக்கும்
சென்றோடத் தேவையேது செம்மையதன் வடிவமும்!
எத்தனையோ வகைகளில் எவருடைய வாழ்விலும்
அத்தனைத் தேவைக்கும் அருகிருக்கும் வகையிதே!

நாடாப்பதிவி மறந்தோமே; நாடோமே புகைப்படமே!
பாடாதப் பாட்டுண்டோ? படங்களும் வானொலியோடே!
அலுவல்கள் முடிக்கவுமே அயர்ந்தால் எழுப்பவுமே
அலைபேசியில் வைக்கலாம் அடிக்கடி(க்க) அலாரமே!

தாளினால் ஆனதான நாட்காட்டிக்கும் விடை!
நாளின்றென்ன காட்டியே விவரிக்கும் விடை!
கணக்கிடும் நுண்மையில் கணினியாய் தசமப்புள்ளி!
கைக்கணினிப் பயன்பாடு காண்கிறதே முற்றுப்புள்ளி!

பக்கங்கள் ஆயிரமாய் புத்தகங்கள் இருந்தாலும்
ம(ட்)க்காது காத்திடுமே மடியாது திறன்பேசியே!
கடிதங்கள் எழுதியனுப்பக் கண்டோமே மென்வழி!
கையகலக் கண்ணாடித் திரையிலேயே மலர்விழி!

ஏடெடுத்துப் படிப்போரோ ஏறெடுத்தும் பாராரே!
நாடெங்கும் நூலகத்தில் நூலெடுத்தே படிப்பரே!
தட்டியும் விரித்தும் தடவினாலும் கைப்பேசிதான்
பட்டென்று புத்தகத்தில் படிப்பதாகவும் வருமோ?



டேப் ரெக்கார்டர்: நாடாப்பதிவி
கால்குலேட்டர்: கைக்கணினி

**கவிஞர் மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி

# கனியுமே மாந்தம்!

பிறப்பினில் மாந்தரே உயர்வெனக் கொண்டிட
பிறந்ததின் பெருமையை அறிந்திடுவோம்!
சிறப்புடன் வாழ்க்கையை நலமுடன் வாழ்ந்திட ;
சிந்தையில் என்றுமே உயர்ந்திடுவோம்!

இருப்பதில் கொடுத்திட நெஞ்சமும் நிறைந்திடும்;
இயன்றதை வாழ்வினில் உதவிடுவோம்!
தருக்குமே நீக்கிடத் தன்னிலை உயர்ந்திடும்;
தன்னலம் அகற்றியே சிறந்திடுவோம்!

பெறுவதில் முழுவதும் நமக்கென இன்றியே;
பெற்றதில் பிறரையும் கண்டிடுவோம்!
பொறுமையைக் கண்ணென வாழ்க்கையில் காத்திட;
பொன்னெனக் கனியுமே மாந்தமன்றோ!

**வாழ்வியல் கவி சா.நாகூர் பிச்சை**
துபாய்



# தன்முனைக் கவிதைகள்

உளியை செய்த.
கொல்லன் பெருமைப்பட்டான்
கவனிப்பாரற்ற கல்
அழகான சிலையாய்

பயிர்கள் இல்லா வயல்கள்
புல் வெளிகளாகின
பசுக்களில் இப்போ
நிறைவாகப் பால்

காலை மலர்களில்
முத்துக்களாகப் பனித் துளிகள்
போர்வைக்குள் முடங்கும்
மாசி மாத இரவு

இரவுத் தெருக்களில்
வண்ண விளக்குகள்
நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும்
புதிய வருடம்

மலைகளோடு உரசி
கதிரவன் காதல்
கோவில் பூசையில்
அவளும் நானும்



**அப்புத்துரை ஜெகன்**
சுவிஸ்

# காதலைக் கொண்டாடுவோம்



மண்ணில் தூவிய விதைகள்
முளைத்தெழுதல் போல
மனத்தில் உன் நினைவுகள்
வண்ண வண்ணச் சித்திரங்களாய்'

பசிப்பருவத்தில் என் பக்கத்தில் வந்தவளே
காதலின் வேகம் பெரிதுதான்
எனினும் அதனினும் பெரிது மோகம்
கறைபடியாமல் காதலிப்போம்
கல்யாணத்தில் கடைப்பிடிப்போம்

காதலி நம் முத்தங்கள்
எச்சிலால் அமைந்த தல்ல
தேனில் ஊறியக் கனியமுதம்

தாக நிலத்திலே வந்திறங்கும் மழையாய்
நெஞ்சில் படர்ந்தவளே உன்
நினைவு வரும்போதெல்லாம்
நான் குழந்தையாகவே
மாறிவடுவதை அறிவாயா

பூந்தோட்டத்தில் நீ நடந்தால்
பூக்களுக்கு கர்வம் குறையும்
பெண்களின் கூட்டத்தில் வந்து நின்றால்
உன் நளினமே தனித்துவம் பெறும்

காலந் தோறும் இங்கே
காதலர்கள் புதியவர்கள் எனினும்
காதல் மட்டுந்தான் உண்மையில்
ஆதியில் இருந்தே இன்னும்
தொடர்கதையாய் வருவதை அறிவாயா
என் இனிய காதலி..நமக்கு
இன்று மட்டுமல்ல என்றுமே காதலர் தினம்தான்
காதலைப் போற்றுவோம்
காதலைக் கொண்டாடுவோம்

பன்முக இலக்கியச் செம்மல்
**பாவலர்.கருமைப்பழம் நீ**

# எழுந்து வா

காற்றின் இடைவெளியில்
சிறகு விரித்து வானுலாவும்
சிட்டின் சிம்மாசனங்கள்

நீள் போருண்டு தீக்குளித்து
ஊண் வெறுத்து யாக்கை வெந்து
வேகிப் போயிற்று கதிர்த்திடும் வெயிலில்

வெட்கம் தணிந்து
வேசம் களைந்து
வெறுப்பூட்டும் வெகுளி
பிரபஞ்சத்தில் தேவையை மட்டும்
உண்டு விட்டால்
மீதியை துப்பிட வேண்டும்
இல்லையெனில் வாயில்
விரல் விட்டு மீதியை பிடுங்கிடுவார்கள்
இப்பிரபஞ்சத்தின் விதண்டாவாதிகள்

முட்டுக்கட்டைகளாய்
முடங்கியே கிடந்திடாமல்
கட்டுக்கட்டாய் உன் கனவுகளை
காற்றில் பறக்க விடு!

கவிச்சாரல்
**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
**[இஸ்லாஹி]**
புல்மோட்டை





# சுதந்திர ஆசையில்...

பதின்ம வயதில்
ஓராயிரம் பூசல்கள்...
இருந்தாலும்
ஒரு நாளில்
மறவாத நேசங்களை
பூட்டிவைத்த மனசு
இருபதுக்கு பிறகு
முரண்களையே முழுதாக
பற்றியிருக்கும்
நேசங்களைத் தூர
வீசிவிட்டது...
அறுபதிற்குப் பின்னர்
அற்றுப்போகும்
பந்தங்களும்
பாசத்திற்கு விலைபேசும்
சொந்தங்களும்
ஓய்ந்துபோன உடலைப் பார்க்க
சொத்திலும் பங்கு கேட்கும்...
சுகமாகிப் போகும்
வெட்டவெளியில்...
எனதுயிர்
காற்றோடு காற்றாக...
கலந்திருக்கும்
நெருக்கடியை விட்டுவிட்டு

– சுந்தரிமணியன், புதூர்




நம் பேச்சு எப்படி இருக்க வேண்டும்? பேசுவதால் மட்டும் மக்களை வசப்படுத்த இயலுமா? பேச்சில் பொருள் இருந்தால் சிறப்பான உரை அமைந்திடுமா? சிலர் பேசுவதைப் பார்க்கும்போது இவர்கள் ஊமையாகப் பிறந்திருக்கலாம் என்றே நினைக்கத் தோன்றுகிறது. அரிதாரம் பூசிய முகங்களைப் பார்த்து இருக்கின்றோம். அரிதாரம்பூசியபேச்சுக்களைகேட்டதுண்டா? பேசுவது ஒரு கலைதான். நாட்டின் அரசியலையே திருப்பிப் போட்டு ஆட்சி அதிகாரத்தை பிடித்தது பேச்சுக் கலைதான் என்றாலும், எப்படிப் பேச வேண்டும், எதைப் பேச வேண்டும். எங்கு பேச வேண்டும் என்பதைக் கணித்துப் பேசியதால்தான் எல்லாமும் நடந்தது. மாற்றத்தின் வேராக மக்களைச் சிந்திக்க வைத்த பேச்சே சமுதாய மாற்றத்தைக் கொண்டு வந்தது. அதன் விளைவே ஆட்சி அதிகாரம். எல்லோருக்கும் வாய் இருக்கிறது, எல்லோரும் மொழியும் அறிவார்கள். எல்லோருக்கும் நாட்டு நடப்பும் தெரியும். ஆனால் எல்லோரும் தலைவர்கள் ஆக வில்லையே..?

பேச்சில் மற்றவர்களை ஈர்க்கும் விவரங்கள் இருக்க வேண்டும். நல்ல, எளிய, அனைவரும் அறிந்த சொற்களை அடுக்கி தயங்காது பேசப் பழகி விட்டால் அதற்கான பலன் நிச்சயம் கிடைத்து விடும். ஆனால் பேசுவது என்பது சாதாரணமா? யாரும் பேசி விட முடியுமா? பேச்சுக்கலையை சாதாரணமாக எடை போட்டுவிடக் கூடாது. முடியாது. சிலருக்கு அறிவு நிறையவே இருக்கும். ஆனால் அதை எடுத்துச் சொல்லத்

தெரியாமல் திண்டாடுவதைப் பார்த்திருக் கின்றோம். காரணம். பேசும் கலையை அவர் உணர்ந்திருக்கவில்லை. அத னால் திறமையிருந்தும் முன்னுக்கு வர முடிய வில்லை.

பேசியே மற்றவர்களைக் கரைக்க எல்லோராலும் முடிவதில்லையே. ஏன்? அதற்கான களம் கிடைக்கவில்லையா? பின்புலம் தேவையா? வசதி வாய்ப்பு அவசியமா? எல்லாமும் கிடைக்கப் பெற்ற வனால் நன்றாகப் பேச முடிகிறதா? வாய்ப்பு வரும்போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்தான். மறுப்பு இல்லை. ஆனால் மறுவாய்ப்பு வர வேண்டு மென்றால் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட விதம்தான். அடுக்கு மொழியும், கவிதை நடையும் பேச்சுக் கலைக்கு அணிகலன்தான். வார்த்தைகளைச் சொல்லாக்கும் போது அதன் தனித்துவம் மேலோங்கி நிற்க வேண்டும். மக்கள் மனதை ஊடுருவும் வார்த்தைகளைத் தேர்வு செய்து பேச வேண்டும். தேவையென்ன? தேடல் என்ன? இதில் தெளிவிருந்தால் வார்த்தைத் தேரை வடம் பிடித்து இழுத்து விடலாம். பேச வேண்டும் என்பதற்காக எதையாவது பேசி விடக்கூடாது. அது ஆபத்தாக முடிந்து விடும்.'

நிறையவும் பேசிவிடக் கூடாது. நிதா னமும் இழக்கக் கூடாது. சபையறிந்து பேச வேண்டும். சாமானியனுக்கும் விளங்க வேண்டும். வீண்வாதம் எதிலும் கூடாது. பேச்சில் கம்பீரம் துணிவு இருக்க வேண்டும். கேட்பவனுக்கும் அது மனதில் சேர வேண்டும். மேற்கோள் காட்டி பேசும்போது நம்பிக்கை அங்கு பிறப்பெடுக்கும். நம்பிக்கை கொண்டவர்க ளுக்கு நாளும் துணையாக பேச்சு இருக்க வேண்டும்.

வாழ்வின் எதார்த்தத்தோடு ஒன்றியது பேசுவது. எதைச் சொல்ல வேண்டுமானா லும், எதைக் கேட்க வேண்டுமானாலும் வாய்வழி வார்த்தைகள் அவசியமாகிறது. புன்னகையோடு நீங்கள் ஒருவரை வாருங்கள் என்று அழைக்கும்போது அவ ரது வார்த்தை மனதைத் தொடுகிறது. பேசுவதைக் கொண்டே உனது நடவடிக்கை உணரப்படுகிறது. பேச வேண்டும்; அன்பாகப் பேச வேண்டும்; அழுத்தமாகப் பேச வேண்டும்; அர்த்தத் தோடு பேச வேண்டும்; முக்கியமாக, அவையறிந்து பேச வேண்டும். ஒருவன் தன்னுடைய மேல் அதிகாரியிடம் பேசும்போது நீட்டி முழங்கக் கூடாது. அதே சமயம், சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் விடவும் கூடாது. உனக்கான அறிவு உன் பேச்சில்தான் வெளியாகும் என்பதை மறந்து விடக் கூடாது. பொதுவில் பேசுவதையெல்லாம் வீட்டில் பேசி விடக் கூடாது. வீட்டில் மற்றவர்களிடம் பேசு வதை குழந்தைகளிடம் பேசி விடக் கூடாது.ஆமாம், இடம் பொருள் அறிந்து பேச வேண்டும்.

ஆசிரியப்பணியில் உள்ளவர்களுக்கு அறிவு எவ்வளவு முக்கியமோ அந்த அள வுக்கு அதனை எடுத்துச் சொல்லவும் தெரிய வேண்டும். வார்த்தை விளையட்டு தெரிந்திருந்தால்தான் வழக்குரைஞர் ஆக முடியும். வளமான பேச்சிருந்தால்தான் மக்கள் தலைவனாக வரமுடியும். குறிப் பறிந்து பேசும் போதுதான் கூடியிருப்ப வர்களின் நம்பிக்கையைப் பெற முடியும். நயமாகப் பேச வேண்டும், நல்லதை எடுத்துரைக்க வேண்டும், பொறுப்போடு பேச வேண்டும். பதவியில் இருந்தாலோ, பக்கம் பார்த்து பணிவாகவும் பேச வேண் டும். மொத்தத்தில் பேசுவதை கலையென்று உணர வேண்டும். சிந்தனையாளர்கள் பலர் இருந்தாலும் சிந்திக்க வைப்பவர்கள் பேசத் தெரிந்தவர்கள் மட்டுமே. இதனை உணர வேண்டும்.

வாழ்வின் வழித்தடமெல்லாம் நிலைத்து இருப்பது வலிமையான வார்த்தைகள்

தான். பொன்மொழிகள் பூமியின் சொத்து ரிமையாகும். பேச்சு வந்த பின்தான் எழுத்து வந்தது. பேச ஆரம்பித்ததே உணர்வின் வெளிப்பாடுதான். உனது தேவை களை அசைவுகளில் சொல்லப் பழகி பின் ஓசையாக்கி அதன் தொடர்ச்சியாக ஒலி யைக் கக்கத் தொடங்கினான்.

மூச்சுக் காற்றின் மூலமான ஓசையே பேச்சின் விதையானது. வார்த்தைகள் வருவதற்கு முன் ஒலியே ஊடுருவி தேவைகளைப் பறைசாற்றியது. மொழி வந்த பின் வார்த்தைகள் சொற்களாயின. வார்த்தைகளின் வலிமை உணர வேண்டும். சேர்த்து வைப்பதும், ஒதுக்கி வைப்பதும் வார்த்தைகள்தான். விளையாட்டுக்குக் கூட விவேகம் இன்றி பேசி விடக் கூடாது. விழுந்த சொல்லும், முடிந்த நேரமும் திரும்ப வரப்போவதில்லை. ஆனால், அவைகள் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையைத் தீர்மானம் செய்து விடும் என்பதை உணர வேண்டும். கவலை களுக்கு மருந்தாக பேச்சில் கனிவு இருக்க வேண்டும். கேட்பவர்களுக்கு மன அமை தியை, எழுச்சியைத் தரவேண்டும். இன் னும் பேச மாட்டாரா என்ற ஆர்வம் வரும்போதே பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.

பேசத் தெரியும் என்பதற்காக பேசிக் கொண்டே போகக்கூடாது. கதையளப் பதாக ஆகி களக் கருத்தோடு கால நிலையறிந்து பேச வேண்டும். நேரம் என்பது மிக முக்கியம், சிலருக்கு முத லில் பேச நேரம் அமைந்து விடும். நீ பேச வேண்டிய கருத்துக்களை அவர் பேசி விட வாய்ப்புண்டு. நாம் என்ன பேசப் போகிறோம், எதைச் சொல்லப் போகின்றோம் என கவலைப்படக் கூடாது. சாதுரியம், அவசியமான இடங் களை உணர வேண்டும். பலர் பேசி, நேரத்தை விரயமாக்கி விட்டு பசியால் மக்கள் தவித் துக் கொண்டிருக்கும்போது நீட்டிய உரை இருக்கக்கூடாது. அவையின் எதிர்பார்ப்பு உணவு என்பதை உணர்ந்து ரத்தினச் சுருக்கமாக முடிக்க வேண்டும். பேசப் பேச எல்லாம் வந்து விடும். ஆனால், ஆரம்பத்தில் அதை பாடமாக வைத்துக் கொள்ள வேண்டும். அனுபவங்களை விவரிக்கும்போது அவை சிறந்த பேச்சாகி விடும். எனவே, எதையும் பொதுவாகப் பேசி விடா மல் குறிப்பறிந்து குறிப்பெடுத்து வைத்து பேசுபவனைத்தான் மக்கள் விரும்புவார்கள். மொழிக்கலப்பின்றி பேச வேண்டும். மொழியின் தன்மை உணர்ந்து வார்த்தைகளை வடிவமைக்க வேண்டும். எதையாவது பேசி விட்டு எப்போதும் சிரமப்படக்கூடாது. இவன் பேசமாட்டானா என ஏங்க வைக்கும் அளவுக்கு பேசப் பழகி விட்டால் வாழ்வில் வெற்றி உண்டு.

திருத்தும் கலை பேசுவதில்தான் அடங்கியிருக்கிறது. வார்த்தைகளை வள மாக விதை, கண்டிப்பாக பயன் உண்டு. உணர்வோடு பேசு. உள்ளம் திறந்து பேசு. ஒளிவுமறைவின்றி பேசு. ஓங்கிய குரலோடு பேசு. மொத்தத்தில் ஒழுக்கமாகப் பேசு. நடப்பை உணர்ந்து நல்லவை ஏற்பட நயமாகப்பேசு. வார்த்தையால் மனங்களைக் கட்டிப்போடு. வாழ்வாங்கு வாழ்வாய். வார்த்தைச் சித்தராக வலம் வா.. வாய்ப்புகள் வந்தடையும். வாழ்வில் மகிழ்வூட்டி மகிழ்வுகாண். நீ விழித்து மற்றவர்களை விழிக்கச் செய்.

பேச்சாற்றல் மிகப்பெரிய ஆயுதம் என உணர்ந்து வார்த்தைகளைப் பயனாக்கு. ஆயுதங்கள் ஆக்கத்தை நோக்கட்டும். வார்த்தைகள் வடிவமைக்கட்டும். பேச்சா ளர்களை சிறப்பிப்போம். அதே நேரம் பேச்சைக் கொண்டு தமிழை, மொழியை வியாபாரம் செய்பவர்களைப் புறம் தள்ளுவோம். புதியதோர் சொல்லாட்சி காண்போம்.

**இதயமலர்**
சென்னை 45

# பெருமை (புகழ்)

யாரும் செய்ய முடியாத சாதனை ஒன்றை செய்யும் போது, அதை மனம் உணரும் நிலையே பெருமை. எல்லோரும் தான் படிக்கிறார்கள். ஆனால் ஒரிருவர் மட்டுமே முதலிடம் வருகிறார்கள். இங்கே பெருமை முகம் காட்டுகிறது. புகழ் அதுவாகிறது. ஒரே பாடம், ஒரே கேள்வி, வெற்றியாளர் சிலர் மட்டும் தான். அதனால் பெருமை இங்கே வரவாகிறது. நினைத்ததை அடையும் போது, கிடைக்கின்ற வெற்றியுணர்வே பெருமை. கிடைக்கும் பெருமையை வைத்து சமூகத்தில் நிலைப்பாடு தெளிவாகிறது. மாநில அரசுகளோ, ஒன்றிய அரசோ, பல துறைகளில் முதன்மையாய் இருப்பவர்களை சிறப்பிக்கும் பொருட்டு விருதுகளை வழங்கி வருகின்றன. பெருமை வரவாகிறது. ஒரு சிலரை அவர்களின் தகுதிக்கேற்ப சிறப்பான பணிகளில் நியமிக்கின்றன. இவை உழைப்பால் வந்த பாராட்டாகவும், பெருமையாகவும், பார்க்கப் படுகிறது.

வெற்றியாளர் நடந்து வந்த வாழ்க்கைப் பாதை, பாடம் ஆகிறது. இதெல்லாம் சரிதான். ஆனால் பெருமையும் பாராட்டும் சாதனை படைத்தவர்கள் அனைவருக்கும் வந்து விடுகிறதா என்றால் இல்லை. ‘அதே நேரம் பாராட்டுக்குரியோர் சாதனையாளர் என்ற ளவில் மட்டுமே நம்மைத் தேற்றிக் கொள்ள வேண்டும்‘.

பாராட்டும் விருதும் பெறுவதற்கு சாதனைகள் மட்டும் போதுமா என்றால் போதாது. உனது சாதனைகள் வெளி உலகம் அறிய வேண்டும் என்றால் அதற்கான முயற்சியும் வேண்டும்.

ஊடகங்கள் உன் சாதனைகளைப் பேச வேண்டும். அப்போது தான் எங்கு போய் சேர வேண்டுமோ அங்கு உன் சாதனை பரிசீலனைக்கு போய் சேரும். இதற்கு பின்புலம் மிகவும் உனக்கு அவசியமாகிறது. உன்னை நீ, ‘நான்என்று காட்டிக் கொள்ள‘ பின்புல சக்தி அவசியமாகிறது. முதலாகிறது. பின்புலமாக, அரசியலோ, பதவியோ, ஏற்கெனவே சாதனை படைத்தவர்களோ, ஊடகங்களோ, வேறெதுவும் இருக்கலாம்.

பெருமை வரும் போது பணிவும், அவசியம் வர வேண்டும். பிறரை மதிக்காதிருந்தால் கர்வம் பிடித்தவன், அகங்காரம் கொண்டவன் என்றும் சொல்வார்கள். திறமையிருக்கிறது என்பதற்காக யாரையும் தூக்கி எறிந்து பேசக் கூடாது.



சிறு துரும்பும் பல் குத்த உதவும். பெருமையை சம்பாதிக்க உழைப்பதை விட, கிடைத்த பெருமையைத் தக்க வைக்க நிறையவே உழைக்க வேண்டும் என்பதை மறக்கக் கூடாது.

புகழ் போதை, என்பது இருப்பதிலேயே மிகக் கொடியது. இதற்கு அடிமையாகி விட்டால் யாரும் நல்லதோர் வழித் தடத்தை மட்டும் எடுப்பதில்லை. அதற்காக எதையும் செய்யத் தயாராகி

விடுகின்றனர். புகழ் போதைக்கு எதுவும் விலக்கும் அல்ல. புகழ் போதைக்கு அடிமையானவர்கள் அதிலி ருந்து இறங்குவதை என்றுமே விரும்புவ தில்லை. இறங்கி விடக்கூடாது என்ப தற்காக இல்லாததை யெல்லாம் இறக்கி வைக்கலாம். கவனம் வேண்டும். தனி நபரின் புகழ் போதை தன்னை மட்டும் பாதிப்பதில்லை உணர வேண்டும். புகழ் போதை பெரும்பாலும் பதவியையே உணர வைக்கிறது.

பெருமை என்பது சாதனைகளால் வருவதைக் காட்டிலும், மற்றவர்களின் துயர்துடைக்கும் செயல்களால் வருவதே, சிறப்பெனப் பார்க்கப் படுவதை அறி கின்றோம். 'சாதனை என்பது யாரும் செய்யாத ஒன்றை நீ செய்வதால் சொல்லப்பட்டாலும், 'சாதனையால் மற்றவர்கள் அடைந்த பயன் என்ன என் பதில் தான் பெருமை உள்ளது'. இங்கு சாதனையாளர்களை குறை சொல்வதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எடுத்துக் காட்டாக, தலை கீழாகவே ஒருவன் மலை யேறினான். கைகளை கால்களாக ஊன்றியே மலை ஏறி யுள்ளான் என்றால் சாதனை தான் மறுக்க வில்லை. யாரும் செய்ய முடியாத செயல் தான். ஆனால் இதனால் மற்றவர்களுக்கு என்ன பயன் என்பதே கேள்வி.

சில சாதனைகள் பொதுப்பயனுக்கு உதவுகிறது. பல புதிய கண்டுபிடிப்பு களை நாட்டிற்கு அளிக்கிறது. பல புதிய வழிகளை உருவாக்கிக் காட்டுகிறது. அதற்காக தலை வணங்க வேண்டும். பெருமை கொள்ள வேண்டும். பெருமை படுத்த வேண்டும். ஆனால் சில சாதனை கள் நேரத்தை மட்டுமே போக்குகிறது. பயனளிக்கும் சாதனைகளை செய்தவர்க ளைப் பாராட்டும் போது மனம் பெருமை கொள்கிறது. அங்கு அர்த்தம் இருக்கிறது. ஒருவரின் உழைப்பால் பலர் பயன் பெறும் போது பெருமை பல வகையாகிறது. அதற்கான அங்கிகாரம் ஆழ் மனதுள் நிலைக்கிறது. இந்த நினைப்பே பெருமை தான்.

இதில் தான் சாதனை செய்ய வேண்டும் என்பதெல்லாம் இல்லை. சாதனைக்கு துறைகள் முக்கியம் இல்லை. கலையோ, அறிவியல் கண்டுபிடிப்போ, எதுவோ பயன்பாட்டுக்குரிய எதை முன்னிறுத்தி முதன்மை கண்டாலும் சாதனை தான். சாதனையாளன் தன் அனுபவத்தை தெளி வாக உரைக்க வேண்டும். அப்போது தான் அதனை அவன் செய்ததாகவும், பலர் அதனை பின்பற்றவும் முடியும். வேறு பட்டு நின்றாலும், மாறுபட்டு நின்றாலும், மனிதம் வாழ, சாதனைகள் பயனாக வேண்டும். அதுதான் பெருமை.

'உயர்வும் புகழும் எல்லோருக்கும் கிடைத்து விடுவதில்லை'. உன் பாதை பலரும் பின்தொடரும் பாதையானால் உனக்கு மட்டுமா பெருமை. உன்னைத் தொடர்வோருக்கும் பெருமை. பெருமைப் படுத்துவது என்பது ஆக்கம் தரும் ஒன்று தான். மனம் உற்சாகமாக, சிறப்பு செய்தல் அவசியமாகிறது. பின்பற்றுதல் என்பது பெருமைக்குரிய விசயம் தான். உன்னை பின்பற்றுவோர் அதிகமாகும் போது உனக்கான அங்கிகாரம் அதிக மாகிறது. உன் வார்த்தைகள் கவனிக்கப் படுகின்றன. பதவிகள் உன்னைத் தேடி வரலாம். அப்போது பணிவு இருந்தால் போதும். 'உன்னால் பலருடைய நிலை உயரு மென்றால் உன்னை விட பெரியவன் யாருமில்லை. பெருமை கொள்ள முழு உரிமையும் தகுதியும் உண்டு'.

சுய பார்வை என்பது பெருமையைச் சார்ந்தது தான். புகழ்பட வாழ்தல் சரி தான். அது மற்றவர்கள் தருவதாக இருக்க வேண்டும். தற்பெருமை தாழ்வில் கொண்டு விட்டு விடும். கவனம் தேவை. எவ்வளவுக்கெவ்வளவு முன்னிலை ஆகி றாயோ, அவ்வளவுக்கவ்வளவு நீ கண்கா ணிக்கவும் படுவாய். பதவியோ புகழோ பெருமை மட்டுமல்ல,அங்கே சுதந்திரமும் கொஞ்சம் பறிபோகும் என்பதை யாரும் மறக்கக்கூடாது.

பெருமைப்படும் விசயங்கள் நிறையவே உள்ளன.

பணியில் இருப்பவன் நான் ஒரு நாள் கூட விடுப்பு எடுத்ததில்லை என்று சொல்வதும், எழுபது வயதான ஒருவர் பிறந்ததில் இருந்து ஒரு நாள் கூட நான் மருத்துவமனை சென்றதில்லை யென் பதும், இதுவரை நடந்த அனைத்துத் தேர்வுகளிலும் இத்தனை சதவிகிதத் திற்கு கீழே சென்றதில்லை என்று சொல் வதும், பெருமைக்கு உரியவை தான். இவைகளை யெல்லாம் தற்பெருமையாக சொல்லிவிடக்கூடாது. 'போலியான ஒன் றுக்கு போலியாக புகழுரைப்பது மட்டும் ஏற்புடையதாகாது'.

பெருமை என்பது மற்றவனுக்காக நீ கை தட்டுவதிலும் உண்டு. மதிக்கக் கற்றுக் கொண்டாலே மனிதம் வாழும். இவனா? இவனுக்கு என்ன தெரியும் என்ற இகழ் பார்வை எப்போதும் பெருமை தந்து விடாது. பெற்றவர் களை, மற்றவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். உயர்த்தி விட்டவர்களை மறந்து விடக் கூடாது. ஆணவப் பேச்சும் அறவேகூடாது.

விருதுகளால் விருதாளர்கள் பெருமை யடைந்தாலும், விருதாளர்களால் விருதும் பெருமையடைய வேண்டும். சரியான விருது சரியான நபருக்கு கிடைத்திருக்கிறது என்பதில் தான் பெருமை வெளிப்படுகிறது. இன்று விருதுகள் விற்பனைக்கும் சில இடங்களில். காலத்தின் கோலம். என்ன செய்வது. வாங்குவதற்கு ஆள் இருக்கும் போது விற்பனையை தடைசெய்ய முடி யாது. ஆனால் இதில் பெருமை என்ன இருக்கிறது? இதுதான் கேள்வி. மனம் நிலைப்பட வேண்டும்.

அரசின் விருதே கிடைத்தாலும் கூட ஆவது என்ன? புகழுக்குரிய பெருமைக் குரிய எத்தனை பேரை நாம் நினைவில் வைத்திருக்கிறோம். எல்லாம் மாயை. கிடைக்கும் வரை தேடல். கிடைத்த பின் வாடல். எதுவும் நிரந்தரம் கிடையாது. இருக்கும் வரை உதவியாக இருந்தால் அதுவே பெருமை தான்.

பெருமைக்குரிய விசயத்துள்ளே உன் தன்னம்பிக்கை இருக்கிறது. மறந்து விடக் கூடாது. வெற்றி தோல்வி மாறக் கூடி யவை. காலச்சக்கரம் சுழன்று கொண்டே இருக்கும். நல்லதை நினை. நல்லதை செய். பெருமையை நோக்கி ஓடக்கூடாது. வந்தால் வரவு இல்லையேல் செலவில்லை என்று முடிவு கொள். உனக்கானது உன்னை விட்டுப் போகாது. உணர்ந்து பணி செய்.

மற்றவன் பாராட்டுவதால் உனக்கு வயிறு நிறையப் போவதில்லை. பதவியோ பொறுப்போ புகழோ.. மேலாடைக்கு மேல் உள்ள துண்டு மாதிரி தான். அது வொன்றும் மானப் பிரச்சனையில்லை.

தன்மானத்திற்கு இழுக்கு தரும் எதிலும் தலையிடக் கூடாது. தக்கதொரு சமயம் வாய்க்கும் போது கோட்டை விடக்கூடாது.

வெற்றுப்பேச்சு நேரத்தையே விரைய மாக்கும். பொறுத்திருந்து பாயக் கற்றுக் கொள்வதே புத்தியின் பார்வையாக வேண்டும். பதுங்குவது கோழைத்தனம் இல்லை. தகுதியான களமென்றால் மட்டும் களமிறங்க வேண்டும். வலி யோன் மெலியோனை வெல்வது பெருமை யாகாது. மற்றவர்களுக்காக வாழப் பழகிக் கொண்டால், நமக்கானது நம்மை அடையும்.

கேட்டு வாங்கும் எதுவும் மகிழ்வைத் தந்து விடாது. முயற்சியின் வியர்வை தான் முடிசூடிப்பார்க்கும். உழைப்பு வீணாகாது. காலமானாலும் கண்டிப்பாக வருவது, உழைப்புக்கான பயன் மட்டும் தான். தடுத்தாலும் எடுத்தாலும் தழைத்து வரும் உனக்கான பெருமை. அதுவாக வரட்டும். வரும்போது வரட்டும். கடமையைச் செய்.. பலனை எதிர்பார்க்காதே. நம்பு. ஒருநாள் பெருமையோடு உன் பெயரும் மற்றவர்களால் உச்சரிக்கப்படலாம். நம்புவதே வாழ்க்கை. நம்பிக்கையோடு இரு. நடப்பதும் நடக்கவிருப்பதும் நல்லது என்றிருந்தால் வாழ்க்கையில் புகழும் பெரு மையும் வாசற்கதவைத் தட்டும்.

**பரணி சுபசேகர் - மதுரை 17**

# எழுதுகோலின் ஏக்கம்



பைய பைய விரலுக்குள்
விரலாய் என்னையும் சேர்த்து
பிடித்திட பழகிய நீங்கள்
எழுத்து வடிவம் ஒழுங்கென தெரியாது
புள்ளடிகளில் ஆரம்பித்தீர்களே...
கடைகளில் வடிவம் வடிவமாய்
என்னைக் கண்டதும்
கேட்டு அடம் பிடித்திருப்பீர்களே

தமயன் தமக்கை பள்ளி பையை
பெரட்டுருட்டி அதனிலிருந்து
என்னையே தேர்ந்தெடுத்து
பாடப் புத்தகத்தில் கிறுக்கி
அடிவாங்கிருப்பீர்களே
இல்லையெனில் அடியேனு
வாங்க வைத்திருப்பீர்களே....

குறும்பு தனத்திலே
என்னை பாகம் பிரித்து
உடம் எங்குமே என் குருதியை
பூசி வைத்திருந்திருப்பீர்களே...

தாய் தந்தை சகோதரசகோதரி என
யாரிடமேனும் அடிவாங்கிருப்பீர்களே...
காணொளியாய் விளம்பரம்
கண்டு பெற்றவர்களிடம்
அதுபோல கேட்டு
சண்டையிட்டிருப்பீர்களே
இன்றென்ன ஆனதோ
என்னை மறந்து விட்டீர்கள் தானே..

அழகழகாக வந்து விட்டேன்
நிறம் நிறமாக வருகிறேன்
நீளமாக கூட வந்து விட்டேன்
என்னை ஏன் மறந்தனீர் நீங்களே..

**சஹ்றனாஸ் பேகம்**
முதலைப்பாளி, புத்தளம்

# நிலம்

மூடியை திறந்து பார்த்த போது
பானை எனது பிம்பத்தை
விழுங்கி இருந்தது

கைத்தவறி விழுந்து
உடைந்த பானை தான்
கோடைகாலத்தில்
தண்ணீர்பந்தல் வைக்க
உதவியிருக்கிறது...

உடைந்த துண்டுகள்
ஒவ்வொன்றிலும் முழு நிலவை ...
கையருகே காட்டியிருக்கிறது.

பானை உருபெற மிதிவாங்கிய
அதே மண் தான் ஆறடி குழிக்குள்
எனக்காக காத்திருக்கிறது

**- சாயிராம்.** தஞ்சாவூர்.



# மலர்தல் எங்கே

காலைப்பொழுது விடிகிறது
மலர்தல் எங்கே
பூக்கள் வாசம் வருகிறது
மயக்கம் எங்கே
பட்டாம்பூச்சிகள் இருக்கிறது
சலனம் எங்கே
காக்கை குருவிகள் பறக்கிறது
சிறகுகள் எங்கே
தேநீர் தீர்ந்து போகிறது
உற்சாகம் எங்கே
நிலவு மறைந்து போகிறது
துயரம் எங்கே
வானம் பரந்து கிடக்கிறது
வியப்பு எங்கே
எல்லாம் பழகிப் போனது
புதிதாய் ஒரு இறப்பு எங்கே...!!!

**- கி.கவியரசன்**
செங்கம்
திருவண்ணாமலை மாவட்டம்

# காற்றுள்ள போதே

இரவு பலத்த காற்று
செடியின் ஒரு கிளையும்
நாளை எப்படியும் பூத்துவிடுமென
ஒரு மொட்டின் மீது கொண்ட ஆசையும்
சேர்ந்தே முறிந்து போனது
இப்படித் தான் நேற்று
நாளை நிச்சயம்
பார்த்துக் கொள்ளலாம் என்றவர்
இன்று காலை எழவேயில்லை
யாருக்கும் தெரிவதில்லை
வாழ்வில் எப்போது
பலத்த காற்று வீசுமென
ஆம் எங்கோ படித்த நினைவு
‘காற்றுள்ள போதே தூற்றிக்கொள்‘

**- கி.கவியரசன்**
செங்கம்
திருவண்ணாமலை மாவட்டம்





# நவீன உலகில் ஆங்கில அறிவின் வகிபாகம்

நவீன காலத்தில் ஆங்கிலக் கல்வியின் இன்றியமையாமை மிக மிக ஆழமாக உண ரப்படுகின்றது. இன்று சர்வதேசமொழியாக மதிக்கப்படும் ஆங்கில மொழியின் செல் வாக்கு கல்வி நிர்வாக சேவைகளில் பாரி யளவு செல்வாக்கு செலுத்துகின்றது. விரும்பியோ விரும்பாமலே ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற வேண்டிய நிலைமை இன்று காணப்படுகின்றது. எல்லா நாடுகளிலும் ஆங்கிலம் ஏதோ ஒரு வகையில் கற்பிக்கப்பட்டும் கையாளப் பட்டும் வருகின்றது. சில நாடுகளில் ஆங் கிலம் தாய்மொழியாகவும் வேறு சில நாடுகளில் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழியாகவும் பேசப்பட்டும் வருகின்றது. ஆங்கில மொழியானது இன்றைய உல கில் உலகத்தின் பொது மொழியாக கொள்ளப் படுகின்றது. இத்தகைய ஆங்கில மொழியை நாம் கற்க வேண்டியதன் அவசியத்தை ஆராய்ந்து பார்ப்பது சாலச் சிறந்தது.

இன்றைய காலகட்டத்தில் அனேகமான பயன்தரும் புத்தகங்கள் ஆங்கில மொழி யில் காணப்படுவதனால் அதைப் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ளவும் ஆங்கில மொழி அவசியமாகின்றது. கண்டு பிடிப்புகள் பற்றிய தகவல்கள் விஞ்ஞான, தொழில்நுட்ப ரீதியான விடயங்கள் எல் லாம் ஆங்கில மொழியின் ஊடாக இன்று வந்து கொண்டிருக்கின்றன. அது பற்றிய விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள ஆங்கில மொழி மிக அவசியமான ஒன்றாகும்.

இன்றைய கல்வி சவால்களை எதிர் கொள்ளும் மாணவர்களை உருவாக்கு வதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

எனவே நவீன கல்வியில் ஆங்கிலம் ஒரு முக்கிய இடத்தை பிடித்துள்ளது. மாண வர்களின் தொடர்பாடல் திறனை அதிகரிக் கவும் ஒரு ஆணிவேராக ஆங்கிலம் என்று காணப்படுகின்றது. உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நண்பர்களோடு உரையாடுவதற்கும் முறைசார், முறை சாரா வேலைகளை செவ்வனே செய்து முடிக்கவும் ஒரு மொழி ஊடகமாக ஆங்கிலம் திகழ்கின்றது. இன்று சில உயர் பாடசாலைகளில் ஆங்கில மொழி மூல வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இதன் முக்கியத்துவத்தை உயர்த்துகின்றது. பல் கலை மட்டத்திலும் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்புகளை மேற் கொள்வதற் கும் ஆங்கில மொழி அவசியமாகின்றது. ஏனெனில் இதனூடாகவே மாணவர்களில் பெரும்பாலானோர் தமது கற்கை நெறியை மேற்கொள்கின்றனர். இதனால் மாணவர்களின் தொடர்பாடல் திறன் அதிகரிப்பது மட்டுமல்லாமல் தலைமைத்துவ பண்புகள், ஆளுமை பண்புகள் இயல்பாகவே வளர்ச்சி யடைகின்றன. எனவே ஆங்கில மொழி தற்கால சூழ்நிலையில் மிக அவசியமா னதொன்றாகும்.

உலகமயமாக்கல் நிகழும் இக்கால சூழ்நிலையில் பாமரமக்களும் ஆங்கில அறிவை எடுத்துச் செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதற்கேற்ப நட வடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய தேவையும் உண்டு. எமது நாட்டைப் பொறுத்தவரை வேலையில்லா பிரச்சினை என்று கூறப்படும் வாசத்திற்கு ஆங்கில மொழி கூட மருந்தாகலாம். மொழி வளர்ச்சி தொடர்பாடல் திறன் அதிகரிக்குமானால் எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கையோடு நிறுவனங்களிலும் மற்றும் வேலை ஸ்தாபனங்களிலும் வேலை செய்யமக்கள் முன் வருவர். மேலும் வெளி நாட்டுக்குச் செல்வதன் மூலமும் தரமான வேலைகளை பெற்றுக்கொள்ளலாம். இந்நிலையில் இலங்கை சிறந்த அன்னிய செலவாணியை கூட பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளது.

மேலும் பிள்ளைகளிடத்தில் ஆங்கில மொழியை ஊட்டுவதில் பெற்றோர்கள் அக்கறையோடு செயற்பட வேண்டும் சில பெற்றோர்களின் கவனயீனத்தாலும், அக்கறையின்மையாலும் மாணவர்கள் பலர் ஆங்கில மொழியில் விருப்பமின்றி வெறுப்புற்று காணப்படுவதை நமது கண் முன்னே காணக்கூடியதாக உள்ளது. தரமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களை பாடசாலையில் நியமிப்பது மட்டுமல்லாமல் தெளிவாக கற்பிக்கக் கூடிய வகையில் ஆசிரியர்கள் உருமாற வேண்டும்.

தற்காலத்தில் வாழும் சாதாரண மனிதன் பொது அறிவு நிறைந்தவனாக இருக்க வேண்டும். அந்த வகையில் ஆங் கில பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் சிறந்த பொது அறிவை தருகின்றன. இத் தகைய ஆங்கில மொழியை அலட்சியம் செய்வதை ஆழ்ந்த புலமை உள்ள எந்த கல்விமானும் விரும்பமாட்டான். எந்த வகையில் நோக்கினாலும் முக்கியத்துவம் வாய்ந்த ஆங்கில மொழியை அலட்சியப் படுத்துவதால் பயனேதுமில்லை. ஏனென்றால் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் அனைவரும் தெரிந்திருக்கவேண்டிய பொது மொழி ஆங்கிலம் ஆகும். எந்தவொரு நாட்டினருக்கும் ஆங்கில மொழி இன்றிய மையாததாகும். ஆகவே, 'ஆங்கிலம் கற் போம் அகிலத்தை வெல்வோம்.'

**சஹீத் அகீல்**

**ஆங்கில ஆசிரியர் மற்றும் வளவாளர்**

Shaping Lives - Centre for Life Skills

# யோனிகள் பேசுகின்றன




1996 ல் ஈவ் என்ஸ்லர் (EVE ENSLER) 200 பெண்களிடம் நேர்காணல் கண்டு அவர்களின் பாலுறவு குறித்த அனுபவங்களைக் கேட் டார். அந்த அனுபவம்தான் த வஜினா மோனோலாக் (THE VAGINA MONOLOGUES) யோனிகளின் தனிப்பாடலாக மேடைகளில் ஒலிக்க ஆரம்பித்தது. இந்த நாடகம் உலகமெங்கும் பரவியது. யோனிகளுக்கு மொழியோ தேசமோ கிடையாது. அவை பேசிய கதைகள் மீண்டும் மீண்டும் அதையே முன் மொழிந்தன.

பெண்ணிய தளத்தில் யோனி என்பது பெண் விடுதலையின் ஓர் அங்கம். எனவே தான், சினம் கொண்ட யோனி, என் யோனி என் கிராமம், அவன் பார்க்கும் அவன் விரும்பும் அது.. என்று பல கதைகளை யோனிகள் பேச ஆரம்பித்திருக்கின்றன. த வஜீனா மோனோலாக் நாடகத்தை ஆங்கிலத்தில் மும்பை அரங்குகளில் பார்த்திருக்கிறேன். அதன் இன்னொரு வடிவமாகவே அண்மையின் வாசித்த கவிதை தொகுப்பு 'நிர்பயா'.

அல்குல் என்ற நம் இலக்கியங்களில் கையாளப்பட்டிருக்கும் சொல் இருக்க ஏன் யோனி என்ற சொல் பயன்படுத்தப் பட்டது? யோனி என்ற சொல்லை பயன் படுத்திய கவிஞரிடம் அதைக் கேட்டுப் பார்த்தபோது அதற்கான விளக்கம் அவரிடம் இல்லை! அல்குல் என்ற சொல்

பெண்ணின் பாலியல் உறுப்பு. அழகியல் அடையாளம். ஆனால் யோனி என்ற சொல் ஓர் அரசியல் குறியீடாக மாறியது. காரணம் அல்குல் பீடங்கள் இல்லை. யோனி பீடங்கள்தான் இருக்கின்றன..! இந்த அரசியல் கலைச் சொல் புரிதலோடு இத்தொகுப்பு கவிதைகள் எழுதப் பட்டிருக்கின்றன. அதனால் இதன் முக்கியத்துவம் பெண்ணுடல் தாண்டியும் பயணிக்கிறது. பெண்ணுடலின் அரசியலை மிகத் தெளிவாக தன் கவிதைகளின் ஊடாக பேசுகிறது இக் கவிதைகள்.

நிர்பயா என்ற சொல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு நாம் சூட்டிய பெயர் மட்டுமல்ல. நிர்பயா என்பது இன்று ஒரு குறியீடு.

**‘தலைநகரத்தில் அதே நடுத்தெரு**
**அதே திரைப்படத்தின் அதே மாலைக்**
**காட்சி**
**அதே நண்பன்**
**துருப்பிடித்த ஆணிகளால்**
**என் உயிர் சிதைத்தீர்களே**
**அதே நிர்பயா**
**இந்த முறையும் விரல் உயர்த்துகிறேன்..‘**
*(பக் 76)*

என்று மீண்டும் மீண்டும் நிர்பயாக்கள் வருகிறார்கள். வரும்போதெல்லாம் மாற வேண்டியது நிர்பயாக்கள் அல்ல, நீங்கள்தான் என்று நம் சமூகத்தின் முகத் தில் அறைந்து சொல்லிக்கொண்டே இருக் கிறார்கள்.

தாய்மொழியை நாவால் தடவும் முன்பே தாயின் பேரிக்காய் அளவு கருத் தொட்டிக்குள் மௌனம் பொருத்திக் கொள்கிறது. என் அம்மா செத்துவிட்டாள், NO RIP PLS.. என்று அறிவிக்கிறது. முலைகளை கைகளில் சுமந்து சுடுகாடு வரை ஓடிக் கொண்டிருக்கிறது. எதிர்க்கும் ஆற்றலுடன் தலித் யோனியாய் இயந்திர துப்பாக்கியில் வெடிக்கிறது. இதை எல்லாம் கண்டும் காணாமல் உலாவரும் கடவுளை ‘ப்ளடி காட்‘ ல் என்று ஓங்கி அறைகிறது.

**‘பறவைகளின் கூடுகளுக்கு**
**கதவில்லை**
**அயர்ந்து உறங்குகையில்**
**சகபறவை**
**வல்லுறவிக் கொள்வதில்லை‘**
**(பக் 83)**

என்று பறவைகளைக் கொண்டு பாடம் நடத்துகிறது.

தலித் யோனி, முஸ்லீம் யோனி, பழங்குடியின யோனி, புத்தம் புதிய கிறிஸ்தவ யோனி, என்று நீதிமன்றத்தில் மண்டியிடும் எல்லா யோனிகளுக்காகவும் நீதி கேட்கிறது.

எது நடந்ததோ அது நன்றாக நடக்கவில்லை, என்று புதியகீதையை எழுதுகிறது.

பெண்ணிடம் நிலத்தைக் கொடுக்க முடியாது, அவளே நிலமென்றால் கொடுக்கத் தேவையில்லை என்று நிலம் பெண்ணுடல் அரசியல் பேசுகிறது.

இறுதியாக,

**உடைந்த நிலம்**
**நீங்கள் புணர்ந்து சிதைத்த என்னுடல்**
**உடைந்த நிலத்திலிருந்து**
**இன்னும் இன்னும்**
**உரக்கப் பாடுகிறேன்**
**விடுதலை கீதம்**
*(பக் 96)*

என்று யோனிகளின் தேசியகீதம் பாடுகிறது.

ஜனகண மன கதி..

பாரத மாதாக்கி ஜே

வாழ்த்துகள் எஸ்தர் ராணி.

## நிர்பயா - கவிதை நூல்

கவிஞர் எஸ்தர் ராணி.
பக் 100 விலை ரூ 120
வெளியீடு: கொட்டாரம், சென்னை. ÷ 2024

# இதுதான் காதலா



தமிழ்நெஞ்சம் அமின்

கார்குழல் ஒற்றை ரோசா;
  கடைவிழிப் பார்வை; நித்தம்
நீர்விடும் விழிகள்; அல்லில்
  நிலைபெறா நினைவு; மேலும்
தீர்ந்திடா துக்கம்; எட்டுத்
  திசையெதிர் பார்ப்பு; பெண்ணை
ஓர்ந்திடா நிலைகள் மட்டும்
  உளத்தினை நித்தம் வாட்ட

.

இத்தனை இடரைக் கூட
  இனுமெதிர் பார்க்கும் நெஞ்சம்
சொத்தென எதுவும் வேண்டா
  சொர்க்கமே இதுதான் என்று
நித்தமும் இதனை மட்டும்
  நிறைவுடன் அனுப வித்தோர்
முத்தமே வேண்டு தற்கு
  முனையுதே நானென் செய்வேன்

.

இந்நிலை எனக்கு தானா
  என்நிலை அவளுக் குண்டா
அந்தியும் பகலும் பெண்டாள்
  அவதியில் நிறைவ துண்டா
சிந்திடுங் கனவில் மட்டுஞ்
  சிரிப்பது காதல் என்றால்
முந்தியில் தலையைச் சாய்க்க
  முடியுமோ முடியா தோசொல்?

# என்னடா காதல் இது...

சிந்திடும் பார்வை என்ன
சிகைதனில் மலரும் என்ன
முந்திடும் அழகும் என்ன
முனகிடும் இதழ்கள் என்ன
தந்திடும் எனநான் எண்ணித்
தனிமையில் உன்னை எண்ணி
வந்திடும் கனவும் என்ன
வருத்திடும்  பொழுதும் என்ன

.

ஆசுபோல் கவியும் செய்தேன்
அழகுடன் தமிழை நெய்தேன்
மாசுகள் இல்லா நெஞ்சில்
மலர்மணம் வீசச் செய்தேன்
பாசுரம் போல உந்தன்
பனிப்பெயர் நிதமும்  சொன்னேன்
தூசுபோல் என்னை எண்ணுந்
துயருக்கா இதனைச் செய்தேன்

.

என்னமோ காதல் பற்றி
ஏதேதோ எண்ணி எண்ணி
இன்னலைக் கண்ட பின்னும்
இடைவிட முடிய வில்லை
முன்னமே தெரிந்தும் உந்தன்
முகத்தினை ரசித்துப் பார்த்து
நன்மையே இலையென் றாலும்
நகர்ந்திட இயல வில்லை.



# பெற்றவளே உனக்காக!

உன் தியாகம்
உதிரத்தினால் உருவாக்கப்பட்டதால்/
உலக நிதர்சனத்தில் - நீ
மெழுகுவர்த்திதான்

வாப்பா உடன் நீ ஓயவில்லை
உம்மா என்றான உறவு சுமந்து
வியர்வையினால்
விழுதாகி கொழுகொம்பானதால்
விடைகாணா கனவுகளை
இலட்சிய இலக்குகளாக்கி
கருதங்கம் கிழித்து
வேரூன்றி விருட்சமாக
எத்தனையோ விழி மூடா இரவுகள்
சாட்சியம் கூறும்
எம் சாதனைகளில்.

வறுமை என்றும் வெறுமை தான்
விலக்கல்கள் தரித்து
வாழும் வாழ்க்கையில்
பொண்னான போதனைகளால்
எமை செதுக்கியதால்.

வாழ்நாளில் செவிளிகள்
எம்மை சுமக்கவில்லை
என்றாலும் உன் பராமரிப்பும்
பழுதாகவில்லை

தாயே தந்தையுமாகி
இடம் நிரப்பல்
உன் மேலான மேன்மை சொல்லும்
உன் வியக்கத்தகு அடைவுகளின்
பக்கப்பிரட்டலில் ஆண் இனமும்
விழி விரிக்கும்.

பொறுமைக்கு கட்டியம் சொல்லும்
உன் நாமம்
நீ கலங்கிய நாட்களை கணக்கிடுகையில்
விம்மி வடியும் விழியோடு நெஞ்சம்
ஆயுளில் நான்கில் மூன்றை மிஞ்சியதால்.

அதற்குள்ளும் நிழல்களின்
நக்கீல்ஸ்ஸான அடைவுகள்
இமய உச்சம் தாண்டி
உயிர்ப்பானதால் கல்பு கண்ட
காயம் மறந்து பெருமித்து போனாய்
பொருள் கொண்ட பெருமைகளால்
அல்ஹம்துலில்லாஹ்
அவன் அருளிய அருட்கொடைகளுக்கு.

அவள் வளர்ப்பின் தீரா அர்த்தமாய்
தினம் தினம் கொண்டாடி தீர்த்தாள்
அனைவரும் அதிசயிக்கும்
அன்னையர் தினத்தை
என்றாலும் சுவனம் செல்ல
சுணங்காமல் நஜீப் வழி
நடந்தேறியது மரணம்.

ஈமானின் வலிமை
பொருந்திக் கொள்ளல்
இன்னாலில்லாஹ் இயம்பி
இருகரம் ஏந்துகிறேன் இறைவனிடம்
சொர்க்கத்து சோலையில் அவளுக்காய்
அரியாசனம் ஒன்றை அருள வேண்டி.
ஆமீன்.

**மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்**
விவசாய போதனாசிரியர் ( ஏறாவூர் )
சம்மாந்துறை, இலங்கை.

நேர்காணல்

மலையகத்தின் பெண் ஆளுமை

# அஸ்மா டீன்

நேர்கண்டவர்

## மாவனல்லை பாரா தாஹீர்



**இலக்கியத்திற்காக பங்களிப்பு செய்யும் உங்களைப்பற்றி**

மர்ஹூம் அல்ஹாஜ் கே. எம். அன்வர் ஷா, ஹாஜா ஆயிஷா உம்மா தம்பதியினரின் புதல்வி யும் அல்லாஹ் மொஹமட் டீன் அவர்களின் மனைவியுமான நான் இலங்கையின் முதல் தினசரி 'தினதபால்' தந்த மர்ஹூம் மீரான் மொஹித்தீன் அவர்களின் மகன் வழி பேத்தியாவேன்.

நான் கம்பளை ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவியாவேன்.

**பாடசாலை வாழ்க்கையோடு உங்கள் எழுத்து?**

ஆம். பசுமையான நினைவலைகளை மீட்டிட செய்யும் கேள்வியிது.

காணும் இடமெல்லாம், பார்க்கும் விடயமெல்லாம் நோக்கும் நிகழ்வுகள் எல்லாம் நல்லதாய் இருக்க வேண்டும் என்ற ஓர் இளமைக்கால துளிர்ப்பான எண்ணம்

எட்டு, ஒன்பது, பத்து வயதுகளில் எல்லாம் குட்டி குட்டியாக பாடல்கள், சிறுவர் கதைகள், நகைச்சுவை துணுக்குகள் அதுவும் நானாக எல்லாமே கற்பனை செய்து எழுதுவேன்.ஒவ்வொரு மாணவர் மன்றமும் எனக்கானதாய் இருப்பது போல் இருக்கும். வாரா வாரம் நாடகங்களை எனது கற்பனையால் உருவாக்கி சக தோழியர்களை பயிற்றுவித்து நடித்திருக்கிறேன். இவ்வாறு பாடசாலை காலத்தில் விவாதம், சிறுகதை, பேச்சு கவிதை போட்டிகளில் தமிழ் தின போட்டிகளுக்காக என்னை ஆசிரியர்கள் அழைத்துச் செல்வார்கள். நிறைய சான் றிதழ்கள் பெற்றிருக்கிறேன்.

இவ்வாறு 1984இல் தினகரன் சிறுவர் உலகம் பகுதியில் ஒரு கட்டுரை மூலம் எனது இலக்கிய பிரவேசம் ஆரம்பமானது.

1990ல் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் மாணவர் மன்றம் நிகழ்ச்சிக்காக எனது ஆசிரியர், வழி காட்டி, ஆசியத் தாய், மகளாய் என்னை இன்றுவரை அரவணைப்பவர் கலாபூஷணம் இலக்கிய தாரகை திருமதி நயீமா சித்தீக் அவர்களால் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு எல்லோரும் சிரேஷ்ட பிரிவு மாணவர்களாக இருக்க நான் கனிஷ்ட பிரிவு மாணவியாக இருந்தேன்.

எனது வானொலிக்கான முதலாவது ஆக்கம் இதுவாக இருந்தது.

'வேலிக்கு வைத்த முள்....' என்ற இந்த நாடகத்தை எழுதி நெறிப்படுத்தி நடித்திருந்தேன். இதில் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால் நாடகத்தில் நான்கு கதாபாத்திரங்கள். நான் போட்டோ பிரதிகள் எடுக்காமல் ஆசிரியர்க்கும்

சேர்த்து ஐந்து பிரதிகள் எனது கையால் எழுதியது தான். மிகச்சிறிய வயது. அப்படி ஒரு ஆர்வக் கோளாறு.

அதன் பின் 1990ல் ‘சந்தேகம் சமாதியாகிறது’ எனது முதல் சிறுகதை ‘சிகரம்’ என்னும் மலையக சஞ்சிகை ஒன்றில் வெளிவந்தது.

வானொலி முஸ்லிம் சேவையில் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சிக்காக கவிதை, கட்டுரை, உரையாடல்கள் என ஆக்கங்களை எழுதி வைத்து விட்டு பாடசாலைக்கு செல்வேன். எனது மூத்த சகோதரி நஜிமுன்னிஸா அதை தனது கையால் பிரதி பண்ணி தபாலிட செய்வார்.

**அண்மையில்தங்களால்வெளியிடப்பட்ட சமூக நாவல் ஆலமரம் பற்றி...**

ஆம்.

ஐந்து பெண்பிள்ளைகளின் தந்தையான ஓர் ஒய்வு பெற்ற ஆசிரியரின் கதை. பெண் பிள்ளைகளை வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கி திருமண பந்தத்திற்குள் அவர்களை இணைக்கும் வரை சமூக சாடல்களுக்கெல்லாம் முகம்கொடுக்கும் ஒரு அன்பான பண்பான ஆளுமைமிக்க தந்தையின் கதை. இதெல்லாம் சமூகத்தில் நடப்பது தானே என்றில்லாமல் தந்தையினதும் பிள்ளைகளினதும் உணர்வு பூர்வமான அன்பின் பிணைப்பை சொல்ல முயற்சித்திருக்கிறேன்.

150 பக்கங்களுடன் இருக்கும் இந் நாவலில் பத்து கவிதைகள் இருக்கின்றன. அதில் ‘என் தந்தை ஆலமரம்’ என்ற கவிதையே முதல் கவிதையாய் வருகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட எனது அடுத்த புத்தகம் கவிஞர் பைந்தமிழ் ஜாகிர் உசேன் அவர்களின் உலக சாதனை தொகுப்பிற்காக ‘மழலை உள்ளம்’ என்ற ஐம்பது பாடல்களை கொண்ட மழலை பாடல் தொகுப்பாகும்.

**இலக்கிய உலகில் நீங்கள் பெற்ற அனுபவங்களை கூற முடியுமா?**

ஆம். நிறைய நிறைய புத்தகங்கள் தந்தையின் நல்ல பல கருத்துக்களும் அறிவுரைகளும் சிந்தனைகளும் தாயாரின் நன்நெறி கூறும் கதைகளும். என்னை இலக்கியபரப்பிற்குள் ஆசையோடு சஞ்சரிக்க வைத்தது.

பிற்பட்ட காலத்தில் 2002 இல் அனுசரணை நிகழ்ச்சிக்காக வானொலி முஸ்லிம் சேவையில் நாடக வேளை என்னும் நிகழ்ச்சி க்கு 14 வாரங்கள் 14 குறு நாடக பிரதிகளை எழுதி வந்தேன்.

சிரேஷ்ட அறிவிப்பாளர் வானொலி முஸ்லிம் சேவையின் ‘நெஞ்சோடு நெஞ்சம் மாதர் மஜ்லிஸ்’ நிகழ்ச்சி தயாரிப்பாளர் நஜ்முல் உம்மா திருமதி புர்கான் பீ இப்திகார் அவர்களும் கலைஞரும் எழுத்தாளருமான திரு மஹ்தி ஹசன் இப்றாகீம் அவர்களும் அபார திறமையான நடிப்பால் அந்த நாடகங்களில் கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டினர்.

அந்த நாட்களில் எல்லாம் வானொலியில் நாடகங்களை கேட்ட நேயர்கள் தொலைபேசியிலும் நேரிலும் கடிதம் மூலமும் தொடர்பு கொண்டு கருத்துக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். வாரத்திற்கு ஒரு நிகழ்ச்சி ஒலி பரப்பு தொடர்ந்து நடந்து



கொண்டிருந்த போது பிரபல்யமான ஒரு கலைஞர் 'உங்களால் எழுத முடியுமா? தொடர்ந்தும் எழுத முடியாதே.' என்று கேட்டப் போது நான் உடனடியாக எனது நிலைப்பாட்டில் உறுதியாகவே இருந்தேன்.

உண்மையில் அவர் சொன்ன விதம், அந்த தொனி என்னை புறந்தள்ளுவதைப் போல உணர இந்த விடயத்தில் நான் விடாப்பிடியாகவே இருந்தேன். எல்லோரும் எம்மை பாராட்ட வேண்டிய தில்லை. திறந்த பாதை, சிறந்த வழியாய் தெரியும் போது நிறைந்த மனது டன் வழிகாட்டுபவர்கள், வாழ்த்து சொல்லு பவர்களும் இருக்கத்தானே செய் வார்கள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கு என் பார்கள். ஆற்றல் இல்லாத மனிதர்கள் உல கில் பிறப்பது இல்லை. ஒருவர் தன்னை சார்ந்தவர்களால் இனங்காட்டப்பட அல்லது தானே தன்னை இனங்கண்டு அத்துறையில் கால் பதிக்க அவர் உளாரோக்கியம் பெறுகிறார்.

ஏனெனில் இது இறைவனால் அவருக்காக வழங்கப்பட்டது. அதில் தடை வராத போது அல்லது தடையை தாண்டும் போது அவர் தனது திறமைகளை வெளிகொணருகிறார். இவ்விடயமானது சமூக நலம் காப்ப தாய் மிளிரும் போதே அவருக்கு இறை புறத்தில் இருந்தும் ஆசி கிடைக்கும்.

### இலக்கிய உலகில் பங்களிப்பு செய்ததன் மூலம் கிடைத்த பட்டங்கள் விருதுகள் ஏதும் உண்டா ?

பெரிதாக எதுவுமே கிடைத்ததில்லை. வானொலி முஸ்லிம் சேவையுடன் முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் இணைந்து நடாத்திய அகில இலங்கை ரீதியான மீலாத் திறந்த நாடக பிரதியாக்கத்திற்காக அகில இலங்கை ரீதியில் முதலாவது இடம் கிடைத்தது.

எனது இருபது முப்பது வயதுகளி லெல்லாம் விருது, பட்டம், என்று ஒரே கனவாக இருந்தது. ஆனால் நான் இதுவரை எந்தவிதமான விருதுகளுக்கும்




விண்ணப்பித்ததில்லை.

இப்போது எனக்கு எந்த கனவுகளும் இல்லை. என்னை பொறுத்த வரை விருது பரிசு என்பதெல்லாம் வாசகர்களின் உள்ளங்கள் தான். அவர்களின் விமர்சனம் தான் எனது எதிர்பார்ப்பாக இருக்கிறது.

(அத்தோடு) இப்பொதெல்லாம் விருது கள் என்ற பெயரில் வியாபாரம் நடப்பது எமது சிஷேட்ட கலைஞர்கள் பெற்றுக்கொண்ட தகுதியான தரமான விருதுகளையும் கொச்சைப்படுத்துவதாக இருக்கிறது.

உண்மையில் இதில் மனதுக்கு கவலை யான விடயம் என்னவென்றால் இலக்கிய படைப்புகள் மனித உணர்வுகளை சிந்த னைகளை இலட்சியங்களை முன் வைக்க கூடியவை. எனவே அவை இறைவனின் புனித படைப்பான சிந்திக்க பிறந்த மனி தனுக்கே உரிய ஆற்றலாக இருக்கும் போது எடுத்தேன் வைத்தேன் என்று விருது வழங்கும் விழாக்கள் விளம்பரத்திற்கா கவும் வியாபாரத்திற்காகவும் கூட்டம் கூட்ட மாக சேர்வோர் செய்ய இலக்கிய தரத்திற்கான ஆரோக்கியம் கெட்டுப் போகிறது என்பது வருந்தத்தக்க விடயமாகும்.

### இலக்கியம் தவிர வேறு ஏதும் துறைகளில் நாட்டம் உண்டா?

ஆரம்ப காலங்களில் ஆடைகளுக்கான அலங்காரங்களை வடிவமைப்பதில் அலாதியான ஆர்வமிருந்தது. அப்போதெல் லாம் எனக்கும் சகோதரிகளுக்குமான உடைகளுக்கு அலங்காரம் வடிவமைப்பேன். அதன் பின் எனது மகளுக்கான ஆடையை தைத்தேன். நான் உயர்தரத்தில் கற்கும் போது எனது பாடசாலை சீருடையை நானே தைத்து கொள்வேன். எனது ஆடையை நான் தைத்தாலும் அதற்குரிய கட்டணத்தை எனது தந்தை தருவது என்னை வெகுவாக உற்சாகப்படுத்தியது. இப்போது அது அப்படியே விடுபட்டு போனது.

அடுத்ததாக பாடசாலை மாணவர்களுக்கான கைவினைப் பொருட்களை செய்வதிலும் பெரிதும் ஆர்வம் உண்டு.

இன்னும் சொல்லப்போனால் நளபாகம் என்னை கவர்ந்த ஒரு கலையாகும். சமையல் செய்கிறேன் என் பதைவிட சமையலில் ஈடுபடுகிறேன் என்று சொல்வதே எனக்கு பிடிக்கும். உணவு செய்முறைகள் பார்த்து செய்வதை விடவும் நானே புதிதாக நினைத்து செய்வதில் பெரிதும் ஆர்வம் இருக்கிறது.

### எதிர்கால திட்டங்கள் ஏதும் உண்டா?

ஆம். என் கைவசம் நிறைய புத்தகங்களை எழுதி வைத்திருக்கிறேன் இறைவன் நாட்டத்தால் அவை கூடிய விரை வில் வெளிவர வேண்டும் என எதிர் பார்க்கிறேன்.

### அனுபவமுள்ள எழுத்தாளரான நீங்கள் வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பேனையும் தாளுமாக எடுத்து எழுதி பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி போன்றவற்றிற்கு ஆக்கங்களை அனுப்பி விட்டு வானொலிக்கு அருகில் காதை கொடுத்துக்கொண்டிருப்பதும் பத்திரிகைகளில் கண்களை மேய விட்டு துருவி துருவி தேடுவதும் அவற்றில் எமது ஆக்கங்கள் ஒலி பரப்பபட்டால், பிரசுரமானால் ஆனந்த பரவசமடைவதும் எமது அன்றைய நிலையாக இருந்தது. ஆக்கங்கள் வெளி வருவதே எமது திறமைக்கான தரமான படைப்பிற்கான அங்கீகாரமாக இருந்தது.

ஆனால் இன்று ஒவ்வொருவரினதும் கைகளில் கையடக்க தொலைப்பேசி எந்த அங்கீகாரமும் தேவையில்லை. தானே ஒரு வசனத்தை நான்காக உடைத்து மேலும் கீழுமாக பதிவிட்டு அதன் கீழ் தன்னை கவிஞர் அல்லது எழுத்தாளர் என்று பறை சாற்றும் துரதிஷ்ட நிலை.

அடுத்தவர் இலக்கியம் படைக்கிறார் என்பதற்காக எடுத்த எடுப்பிலேயே நாமும் புறப்பட்டால் அந்த எழுத்து தரம் கெட்டதாய் மாறிவிடும்.

எழுத்தை ஆள்பவனே எழுத்தாளன். அவன் எழுத்தை ஆள்பவதற்கு முன் அவனை எழுத்து ஆட்படுத்தி இருக்க வேண்டும்.

அவன் எழுத்தை வாசிப்பவனாக நேசிப்பவனாக சுவாசிப்பவனாக இருக்க வேண்டும். அவனது கண்கள் எழுத்தை அணு அணுவாக படம் பிடிக்கும்.மனம் அதில் இலயிக்கும். ஒரு சொல்லை மனம் பலமுறை தொட்டு தொட்டு நிற்கும்.

இவ்வாறு எழுத்தால் ஆளப்பட்ட எழுத்தாளனின் படைப்புக்கள் காலத்தால் அழிவதில்லை. எழுத்துக்கு உயிரில்லை. எழுதுபவர் அதற்கு உயிரூட்டுகிறார். எனவே எழுதுபவர் வாசிப்பவராக இருக்க வேண்டும்.

எல்லோரும் எழுதுகிறார்கள் எனவே நானும் எழுதுகிறேன்; என பேனா பிடிப் போரின் இலக்கியம் மனித மனம் தொடுவதில்லை.

எனவே முதலில் நிறைய வாசிக்க வேண்டும். வாசித்த பின் யோசிக்க வேண் டும். யோசினையிலிருந்தே சிந்தனை பிறக்கிறது.

சிந்தித்துப் பார்க்கும் போதே உணர்வுப் பூர்வமாக எழுத முடிகிறது. வெறுமனே செய்திகளாக சொல்லப்படாமல் உணர்வு பூர்வமாக சொல்லப்படும் இலக்கிய படைப்புகளே வாசகர்களின் உள்ளங்களில் வாழ்கிறது.

### ஏட்டுலா கனவாக்க அமைப்பின் மூன்றாவது முத்து நூல் வெளியீடு

## மாவனல்லை பாத்திமா சில்மியா எழுதிய

# இப்படிக்கு என் இதயம்



சிந்தனைத்திறன் மிக்க எழுத்தாளர்களின் எழுத்துக்களை புத்தக வடிவாக்கி கனவை நனவாக்கும் அமைப்பான ஏட்டுலா கனவாக்கம் தனது மூன்றாவது நூலாக மாவனல்லை இளம் எழுத்தாளர் பாத்திமா சில்மியா அவர்கள் எழுதிய இப்படிக்கு என் இதயம் எனும் நூலை (02.02.2025) மாலை 3.00 மணி யளவில் மாவனல்லை மயுரபாத தேசியப்பாடசாலை கேட்போர் கூடத்தில் ஏட்டுலா கனவாக்கம் பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன் தலைமையில் வெளியீடு செய்தது. இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற அதிபரும் (MESDA PUBLICATION) பணிப்பாளருமான அல் ஹாஜ் M.J.M. நயீமுத்தீன் அவர்களும் சிறப்பு விருந்தினராக தமிழ்நெஞ்சம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஜனாப். அமின் முஹம்மத் (தமிழ் நெஞ்சம்- France) அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வு செல்வன் எம்.எப் முஹம்மதின் கிராஅத்துடன் ஆரம்பமானதை தொடர்ந்து ஏட்டுலா கனவாக்க நிர்வாகக் குழு உறுப்பினர் அதீகா மசூர் வரவேற்புரையும் நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வின் தலைமை உரையினை சிந்தனைத் திறன்மிக்க எழுத்தாளர்களின் புத்தக கனவை நனவாக்கும் ஏட்டுலா கனவாக்கத்தின் பணிப்பாளர் ஆஷிக்



நூலாசிரியரின் தாயும் தந்தையும் நூலின் முதற்பிரதியை ஆசிரியரிடம் இருந்து பெற்றுக்கொண்ட போது

ஹுசைன் அவர்கள் நிகழ்த்தியதை தொடர்ந்து, sky Tamil -செய்தி ஆசிரியரும் துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினருமான திருமதி பயாஸ பாஸில் வாழ்த்துப்பாவும், செல்வி திக்ரா



நிகழ்வின் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் வெளியீட்டுரையை நிகழ்த்திய போது

ஹனீபாவின் கவிதையும் இடம்பெற்றது.

ஏட்டுலா கனவாக்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினரும், தமிழ்நெஞ்சம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் இன்றைய விழா வின் சிறப்பு விருந்தினருமான தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் வெளியீட்டுரை யினை தொடர்ந்து நூல் வெளியீடு உத்தியோக பூர்வமாக வெளியீடு செய்யப் பட்டது.

நூலின் முதற்பிரதி Sapumal Industries Pvt Ltd. உரிமையாளர் அல்ஹாஜ் W.M.M.S.M. கமால்டீன் மரிக்கார் அவர்களின் சார்பில் Sapumal Industries இன் Head of HR & Administration அல்ஹாஜ் K.C.N.F. முஹம்மத் அவர்களுக்கும், இரண்டாம் பிரதி நூலாசிரியரின் தந்தை ஜனாப் S. நவ்பர் மற்றும் தாயார் திருமதி. S.N. ஜெஸீமா (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களுக்கும் நூலாசிரியர் பாத்திமா சில்மியா மூலம் வழங்கப்பட்டது.

அதனையடுத்து சிந்தனைத் திறன்மிக்க எழுத்தாளர்களின் எழுத்துக்களை நூலாக்கும் கனவை நனவாக்கும் ஏட்டுலா கனவாக்கம் அமைப்பினால் எண்ணங்களை வரிகளாக்கி இலட்சியங்களை நூலாக்கி தடம்பதிக்கும் பாத்திமா சில்மியாவை பாராட்டி 'கவிமுகில்' விருதும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டார்.

கவிதாயினிஎம்.எஸ்நதீராவசூக்(ஆசிரியை - தல்கஸ்பிடிய மு.ம.வி.)அவர்களால் நூல் நயவுரையும், ஜனாப் ஸப்ரான் நஜீரின் கவி வரிகளும் இடம் பெற்றது.

நூல் வெளியீட்டின் கதா நாயகி நூலாசிரியை பாத்திமா சில்மியா அவர்களின் ஏற்புரையினை தொடர்ந்து, பிரதம அதிதியாக வருகை ஓய்வு பெற்ற அதிபரும் (MESDA PUBLICATION) பணிப்பாளருமான அல்ஹாஜ் M.J.M. நயீமுத்தீன் அவர்களாள் சிறப்பான முறையில் பிரதம அதிதி உரை நிகழ்த்தப்பட்டது.

அதனை தொடர்ந்து ஏட்டுலா கனவாக்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்களால் ஏட்டுலா கனவாக்கத்தின் பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன் அவர்களுக்கு நினைவுச்சின்னம் ஒன்றையும் வழங்கி கௌரவப் படுதினார்.

விழவிற்கு வருகை தந்த பிரதம அதிதி, இலக்கிய அதிதிகள், கௌரவ



ஏட்டுலாக கனவாக்க அமைப்பின் தலைவர் திரு. ஆஷிக் ஹுசைன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தும் போது

அதிதிகள் விசேட அதிதிகள், அதிபர், ஆசிரியர்கள், ஏட்டுலா கனவாக்கத்தின நிர்வாக உறுப்பினர்கள், ஊர்மக்கள் மற்றும் நூலசிரியையின் குடும்ப அங்கத் தவர்களுக்கான நூல் பிரதிகளும் நூலாசி ரியை பாத்திமா சில்மியாவின் கரங்களால் வழங்கி வைக்கப்பட்டது.

நயீம் முஹம்மத் நஜாத் அறிவிப்பாளர் (MEP Assistant Engineer – (Link engineering pvt ltd) அவர்கள் நிகழ்ச்சியை திறப்பட தொகுத்து வழங்கினார்

ஸலவாத்துடன் ஏட்டுலா கனவாக் கத்தின் மூன்றாம் முத்து நூல் வெளியீடு இனிதே நிறைவு பெற்றது.

ஏட்டுலாவின் கனவை நோக்கிய பயணத்தில் அடுத்த ஏட்டுலாவும் வெற்றி கரமாக நிறைவடைந்தது அல்ஹம்து லில்லாஹ்.

கடந்த (10.05.2024) ஏட்டுலா கனவாக்க பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன் அவர்களுடன் இணைந்து மொத்தம் 9 பேர் கொண்ட ஒரு குழுமமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு இறை வனது துணையால் ஒரு வருடங்கள் பூர்த்தியாகும் முன்னரே மூன்று நூற்களை வெளியீடு செய்து மூன்று முத்தான இளம் எழுத்தாளர்களை ஈழத்து மண்ணுக்கு அடையாளப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இலைமறைகாய்களாக இருக்கும் எழுத் தாளர்களை இனம் கண்டு அவர்களுடைய புத்தக்கனவை நனவாக்கம் செய்வதே இவ்வமைப்பின் பிரதான நோக் கமாகும்.

ஹெம்மாதகை பிரதேசத்தை வதிவிட மாக கொண்ட ஏட்டுலா கனவாக்கத்தின் பணிப்பாளர் ஆசிக் ஹுசைன் இன் முயற்சியாள் இவ்வமைப்பு ஆரம்பிக்கப் பட்டு சில மாதங்களிளே அதன் மூன்றாவது கனவையும் நனவாக்கியது குறிப்பிடத்தக்கது.

அடுத்த ஏட்டுலா ஒரு கனவை நோக்கிய பயணமிது அல்ஹம்துலில்லாஹ்




## ஏட்டுலா கனவாக்க அமைப்பின் உறுப்பினர்கள்

ஆஷிக் ஹுசைன் (பணிப்பாளர் - ஏட்டுலாக கனவாக்கம்), திரு. அமின் முஹம்மட் (பிரதம ஆசிரியர் - தமிழ் நெஞ்சம்-பிரான்ஸ்), திரு.ஜே.எம்.ஐ இஹ்சான் (பணிப்பாளர்-ஜே.எம்.ஐ வெளியீட்டு நிருவனம்), திரு. முஹம்மட் இன்ஷாப் (பணிப்பாளர் Rj Media ), திரு.றஜா முஹம்மட் (பிரதம ஆசிரியர் பேனாத்துளிகள் சஞ்சிகை),திருமதி. ஆயிஷா ஷகீலா ( வடிமைப்பாளர்-Designglitz), செல்வி.பஹ்ரியா பாய்ஸ் (இளம் எழுத்தாளர் - ஹெம்மாதகமை பிராந்தியம். ,செல்வி.அதீகா மசூர் - Sky தமிழ் கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்.,செல்வி.ஹாஸ்மியா தாஹா ( இளம் எழுத்தாளர் பல்கலைக்கழக மாணவி (SEUSL).



# நாளைய நங்கையர்

கட்டு போட்டு கட்டு போட்டு..
கட்டை விரலே காணாமல் போகும்
காரிகையாக பெண்ணை எண்ணாதே…!
சங்கிலிகளால் அவளை
சிறை பிடிக்கும் இயலாதே…!

வார்த்தைகளில் சூடு காட்டி
வேக வைத்து..
கன்னங்களில் செங் கவிதை
எழுதி வைத்தவள் பெண்….!

பாக்களில் ரதி அல்ல பெண்…!
பாரதி கண்ட புதுமை பெண் அவள்..!
சிந்தனையின் சிறகுகளை
சிறையில் வைக்காமல்
சிகரம் தொட நினைப்பவள் பெண்…!

குசினித்தவளையல்ல பெண்..!
நாக்குகளுக்கு விருந்து வைக்கும்
அறுசுவையல்ல பெண்..!
உலகை சமைக்க வந்தவள் பெண்..!

சங்கிலிகளால் சிறைபிடிக்க முயலாதீர்கள்..!
ஆதிக்கம் கொண்டு அடக்கிடும் என்றால்
அக்கினி குஞ்சாய் அகிலம் எரித்திடுவாள்…!
சிறகுகள் இருந்த போதும்
சகதியில் கால்களை
சிக்க வைப்பவள் அல்ல பெண்..!

தரித்திரம் கொண்ட சமூகத்தில் ..
சரித்திரம் படைக்க புறப்படுபவள் பெண்…!
மனையும் செழிக்க… மனமும் இனிக்க..
வீடும் சிறக்க.. நாடும் இனிக்க..
விடுதலை கொண்ட பெண்ணாலே
விடியல் காணும் நம் வாழ்வாமே…!

எல்லா துறைகளிலும் பெண் இருக்க
விலங்கா விலங்காய் சிறை எதற்கு..!
அக்கினி சிறகை அவள் விரித்து…
அத்தனை கல்வியும் அவள் கற்று..

புல்லாங்குழலின் புயல் காற்றாய்
புறப்படுகிறாள் இப்பெண்
புதுயுகம் காண….!

**அஸ்மியா நிஸாம்**
அக்குரனை



## கிழித்தெறிந்த கனவுகளில்

# அரைபாதி நான்

நான் காற்றுடன்
பேசத்தயாராகும் பொழுதெல்லாம்
தென்றலாய் என்னுடன்
பயணப்படத் தயாராகி நின்றது
அந்த சன்னலோர இருக்கையை மட்டும்
நான் யாருக்காகவும் இல்லை
யாருக்கும் விட்டுக் கொடுத்ததில்லை

எனது பால்ய கனவுகளையும்
காதல் கதவுகளையும்
சன்னலுரசிய எனது
கன்னங்களினுடே
எனது அருகில் அமர்ந்து நகர்ந்த
இயற்கையின் கைப்பிடிக்க
நான் விட்டுக் கொடுத்ததேயில்லை

தூரத்து செவ்வானத்தில்
முயலின் ஓட்டமும்
மின்னலொளியை இந்திரன் துரத்தும்
காதல் விளையாட்டையும்
பாட்டியின் கதைகேட்டு
மனதோடு படம் வரைந்து
அசைபோடத் தொடங்கிய
பட்டாணி பயணங்களை நான்
விட்டுக் கொடுத்ததேயில்லை

தென்றல் அங்கு
தென்றலாய் மட்டும் வீசட்டும்
நான் விட்டுக் கொடுக்கிறேன்

காற்றின் பறந்த பட்டாணி துகள்களின்
வேகத்துனூடே.....
நான்
இறங்கும் தருவாயில்
அனைத்து கனவுகளையும்
ஏழரை ருபாய் டிக்கெட்டில்
அரைபாதி கிழுத்தெடுத்த
கன்டக்டரின் கைகளோடு முடிவடைகிறது
நான் போனால் போகட்டுமென
விட்டுக்கொடுத்த
இன்னொரு பயணியின்
கனவுகளின் தொடக்கம்....

**சே கார்கவி கார்த்திக்**
நாகப்பட்டினம்



# உளி பேசும் மொழி

## 23



நெல்லை க. சோமசுந்தரி
(கவிஞர். எழுத்தாளர்
தொல்லியல் ஆர்வளர்)
சென்னை, தமிழ்நாடு

இப்புவியனைத்திற்கும் உயிர் மூச்சாய் விளங்கும் காற்றினைக் கொண்டு, மிக அழகிய கலைவண்ணத்துடன் கூடிய ஒரு அதிசய ஆலயமானது தென்னிந்தியாவில் பல சிறப்பான சைவ, வைணவ தலங்களைக் கொண்ட ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதி மாவட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காளஹஸ்தி ஆலயமானது பஞ்சபூத தலங்களுள் ஒன்றான வாயுத்தலமாக அமையப்பெற்றுள்ளது.

இவ்வாலயமானது வெவ்வேறு கால கட்டங்களில், பல்வேறு மன்னர்களால் கட்டப்பட்டு, பல நூற்றாண்டுகள் கடந்தும் அதன் தொன்மை மாறாமல், இன்றும் கம்பீரமாய் நம் முன்னே காட்சியளிக்கிறது. பூகோளப் பரப்பில், பல்வேறு காலகட்டங்களில், பல மன்னர்களால் இத்திருக்கோயிலானது ஆட்சி செய்யப்பட்டிருப்பினும், இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள திருக்காளத்தி யப்பர் மொழி இனத்தால் வேறுபட்ட மக்களையும், ஒன்றிணைக்கும் வகையில் இன்றும் அனைவருக்கும் காட்சியளிக்கிறார். இத்திருக்கோயிலின் பெயரைக் கேட்டாலே, இன்றும் ராகு - கேது பரிகாரத் தலம் என்று பெரும்பாலான மக்களால் அறியப்பட்டிருப்பினும், இத்திருக்கோவில் அமைந்துள்ள ஸ்ரீகாளஹஸ்தியானது கலை நயத்திற்குப் பெயர் பெற்றுள்ளது என்பதனை பெரும்பாலோர் அறிந்திருக்க மாட்டார்கள்.

ஆயக்கலைகள் அறுபத்து நான்கு என்பது நாம் அனைவரும் அறிந்ததே!! கலை என்பது அறிவுக் கொண்டு சிந்திப்பினும், உணர்வு கொண்டு செய்வதே, மேலோங்கி இருக்கும். அவ்வாறு இருக்கும் போதே, அக்கலையின் தனித்துவமானது நுட்பமாய் வெளிப்படுகிறது. அப்படிப்பட்ட கலைகளில் ஒன்றான ஓவியக் கலையானது மொழிகள் யாவும் தோன்றுவதற்கு முன்பே தோன்றியது என்பதனை அறியும்போது நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. அதற்குச் சான்றாக, பல பாறை மற்றும் குகை ஓவியங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, வண்ணங்களில் தீட்டப்பட்டிருப்பதனை



காணும் போது, நமது வியப்பானது மேலும் விரிவடைகிறது. அவ்வகையில் பாரம்பரிய இந்தியக் கலைகளில் ஒன்றான, கலம்காரி ஓவியக் கலையானது, ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் உருவான பழமையான கலையாகும்.

'கலம்காரி என்பது இயற்கை காய்கறி சாயங்களைப் பயன்படுத்தி துணியில் அழகு மிளிர ஓவியம் வரைவதற்கான ஒரு பாரம்பரிய முறையாகும்'. கலம் என்றால் 'பேனா' காரி என்றால் 'கைத்திறன்' என்று பாரசீக மொழி அர்த்தத்திலிருந்து கலம்காரி என்ற பெயர் சூட்டப்பட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன. கலம்காரி என்ற ஓவியமானது மூங்கில் போன்ற பேனாவினால், பருத்திக் காடா துணியின் மீது கை வண்ணங்கள் கொண்டு அழகு மிளிர்ந்த ஓவியங்களாக வரையப்படுகிறது. இவ்வகை ஓவியங்கள் பெரும்பாலும் காளஹஸ்தியில் உள்ள ஆலயங்களில் திரைச் சீலைகள், சுவரில் தொங்கவிடும் ஓவியங்கள், தேரில் தோரணமாகக் கட்டித் தொங்க விடப்படும் வண்ண வண்ணத் திரைச் சீலைகள் போன்றவற்றில் பன்னெடுங்காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.



கலம்காரி ஓவியமானது இரு முறைகளில் வரையப்படுகிறது. ஒரு முறையானது ஸ்ரீ காளஹஸ்தி பாணி மற்றொன்றானது மச்சிலிப்பட்டிணம் பாணி ஆகும். இதில் காளஹஸ்தி பாணி முறையில் செதுக்கப்பட்ட மரத்துண்டுகளைக் கொண்டு, காய்கறிகள் மற்றும் பழங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட இயற்கை சாயங்களைப் பயன்படுத்தி ஓவியங்களைக் கையின் மூலம் வரைவதாக இந்த பாணி கூறப்படுகிறது. மச்சிலிப்பட்டிணம் ஓவியங்கள் என்பது அச்சு இயந்திரத் தின் வடிவமைப்பின் மூலமாக அச்சிடப்படுகிறது. இவ்வாறான பாணிகள் கொண்டு தயாரிக்கப்படும் கலம்காரி வண்ண ஓவியங்கள், தொன்று தொட்டு அப்பகுதி மக்களால், இன்றும் தொடர்ந்து அக்கால முறைப்படி உருவாக்கப்படுகிறது. பழம் பெரும் கலையாயினும் இன்றைய கால கட்டத்திற்கு ஏற்ப இவ்வகை ஓவியங்கள் வரையப்பட்ட புடவைகள் மற்றும் அலங்கார திரைச்சீலைகளைக் கண் கவர் வண்ணங்களில் மிக அழகு மிளிர தயாரிக்கப்படுகிறது. இதன் மூலம் இக் கலையானது, அதில் ஈடுபடும் கலை ஞனது வாழ்வின் ஆதாரமாக விளங்குகிறது. அவ்வழியே அக்கலைஞர்கள் இக் கலையினை புதிய பரிமாணத்தில் பல நூற்றாண்டுகள் கடந்தும் இன்றளவும் வாழ்வித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வோவியங்கள் வரைவதற்கு ஆழ்ந்த ஈடுபாடும், மெனக்கெடல்களும், பொறுமையும் கலைஞர்களுக்குத் தேவைப் படுகிறது. ஏனெனில் அதன் நுட்பமானது பல வழிவகைகளுடன் கூடிய உத்திகளைக் கையாண்டு உருவாக்கப்படுகிறது. ஏறத்தாழ 23 நுட்பமான படிகளில் பயன்படுத்தப்பட்டு உருவாக்கப்படுகிறது. இதற்கு வண்ணம் தீட்டக் கலைஞர்கள் இயற்கை நிறங்களை மட்டுமே பயன்படுத்துகின்றன. அதாவது சற்றுக் கடினமான பருத்திக் காடாத்



துணியானது குங்கிலியம் மற்றும் பாலில் ஏறத்தாழ ஒரு மணி நேரம் முதலில் மூழ்க வைக்கப்படுகிறது. இதனால் அந்த துணியானது பளபளப்பும், வழவழப்பும் பெறுகிறது. பின்பு நொதித்து வைக்கப்பட்ட வெல்லம் மற்றும் நீர் கலந்த சூலையில் கூரான மூங்கில் குச்சியால் நனைக்கப்பட்ட துணியில் வட்ட வடிவ விளிம்பு வரைவு கோடுகள் வரையப்படுகிறது. பின்பு அக் கோட்டிலேயே. ஓவியமானது தாவரச் சாயம் பயன்படுத்தித் தீட்டப்படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு வண்ணமாகத் தனியாக வரையப்படுகின்றது. ஒவ்வொரு முறையும், புதிய வண்ணம் ஏற்றும் போதும், துணியானது நீரினுள் பல முறை அலசப்படுகிறது. அவ்வாறு அலசும் போது' ஒவ்வொரு வண்ணமும் துணியின் மீது மிகவும் திண்ணமாகக் கலந்து கொள்வது மட்டுமின்றி அந்த வண்ணங்களின் நேர்த்தியினை வெளிப் படுத்துகிறது.

கலம்காரி ஓவியத்தை உருவாக்கும் செயல்முறையானது, நுட்பமான மற்றும் விரிவான வடிவமைப்புகளைக் கொண்டு விரிவாக உள்ளது. பெரும்பாலும் கலம்காரி ஓவியத்தில் இயற்கை, பூக்கள் விலங்குகள் மற்றும் பறவைகள் கருப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு உரு வாக்கப்படும் கலம்காரி ஓவியமானது நூற்றாண்டுகள் பல கடந்தும் தனித்துவமாக இன்றும் நம்மிடையே வலம் வந்து கொண்டிருக்கிறது. கலம்காரி ஓவியமானது பெரும்பாலும் கோவில் சுவர்களிலும் மேல் முகப்புகளிலும் கோவிலில் அத்தெய் வங்களைப் பற்றிய கதைகளையும், புராணக் கதைகளையும், வெளிப்படுத்தும் விதமாக வரையப்படுகிறது. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்தகலையினைதன்னகத்தைக்கொண்ட காளஹஸ்தியில் உள்ள திருகாளத்தியப்பர் ஆலயத்தினிலும் கலம்காரி ஓவியக்கலையின் தாக்கம் இருப்பதை நம்மால் அறிய முடிகிறது. அங்ஙனமே, ஆலயத்தின் மேலும் பல சிறப்பினைப் பற்றித் தொடர்ந்து உளி பேசும், அதனைக் கேட்க உளியின் மொழியோடு தொடர்ந்து பயணியுங்கள்.

(உளியின் மொழி தொடரும்)





வறுமையின் முகவரியில்
வாடும் உள்ளங்களின்
வரலாறுகள் முடங்கி
முக்காடிட்டுக் கொள்கிறது

விடியல்களில் விழிபுதைத்து
விம்மியழக் கண்களுக்குள்
முடிச்சிட்டுக் கண்ணீரை
எரித்துவிட்ட பொழுதுகளாய்

பூமித்தாயின் பொறுமைகளை
புன்னகையால் சுமந்து
வாடியவதனத்தை தன்னுள்
மறைத்த தியாகச்செம்மல்களாய்

பசியின் கோரப்பிடியில்
பழைய ஞாபகங்களோடு
பயனற்றுப்போகும் பயணங்களின்
பாதைகளின் ஓரத்தில்நின்று
பயணிகளின் வாழ்வை
இரசித்துக் கொண்டிருக்கும்
பாக்கியமற்றக் கணங்களின்
இருள்களுக்குள் ஏக்கத்துடன்
எளிமையின் அழகியநாட்கள்
அத்துமீறிக் கடக்கிறது
எட்டிப்பார்க்க எந்தக்கண்களுக்கும்
எழுமாறாய்கூடத் தெரியவில்லை

பணக்கார வீடுகளில்
பாய்விரிக்க மனமில்லை
பாதையோர யாசகர்களுக்கு
பாதியும் பங்கில்லையாம்
மண்ணிலே மனிதாபிமானம்
தழைத்து உலகமேசெழித்திட
ஏழைகள் வாழ்வில்
ஏற்றுவோம் ஒளியை

**சேஹு மொஹம்மது பெனாஸிரா**
முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி.



# ஏழைகள் வாழ்வில் ஏற்றுவோம் ஒளியை

# பிரபா ஒயின் ஷாப் ஓனர்



திருவள்ளுவர் தின இரவில்
முப்பாலின்
மூன்றாம் பாலில்
முக்குளிக்கையில்
அலைபேசி அலறி
பொங்கிய பாலில் நீருற்றியது
எரிச்சலுடன் எடுத்தால்
'நாளைக்கு எப்பங்கய்யா
கடைய தொறப்பீங்க'
திரும்பவும் அதே குரல்
வேறு எண்ணிலிருந்து

நீ இச்சையோடு கழற்றிய
மார்புக் கச்சையின் கொக்கியில்
சிக்கிக் கொண்டுள்ளன
போத்தலுக்கு உருவிய
நாணயமில்லா
பத்து ரூபாய் நாணயங்கள்
என்று தொலைபேசியில்
எவனோ ஒரு மதுப்பிரியன் சொன்னது
சத்தியமாக போதையில்
சொன்னதாகத் தெரியவில்லை

அழைப்பிதழ்களிலும்
வரவேற்புகளிலும்
திறப்பு விழாக்களிலும்
கோயில் திருவிழாக்களிலும்
எப்போதும் விளிக்கப்படுவது
'பிரபா ஒயின் ஷாப் ஓனர்' என்றே
மறக்கடிக்கப்பட்ட என் பெயரை
விரைவில் அரசிதழில்
வெளியிட வேண்டும்
பள்ளி விண்ணப்பப் படிவத்தில்
அப்பாவின் தொழிலுக்கு நேராக
என்ன பூர்த்தி செய்ய வேண்டும்?

என மகன் வினவியதில்
எழுதுகோல் பிடித்த
எனது கை நடுங்கியது
சரக்கடிக்காமலே...

**பா.சிவகுமார்**



# குறை ஒன்றும் இல்லை

மதுரை - செல்லூர் - திருவாப்பனூர் கோவில் ,

சாமி தரிசனம் முடித்து வெளியில் வந்து அமர்ந்தாள் கோமளம். அப்போது கோமளித்தின் முன் அவள் தோழி மீனாட்சி அமர்ந்து இருந்தாள்.

கோமளம், மீனாட்சி இருவரும் சிறு வயது முதல் தோழிகள். கோமளம் எப்பவுமே மீனாட்சியை நக்கலாக அல்லது மட்டம் தட்டி பேசுவது தான் வழக்கம்.

மீனாட்சி அதனை எப்போதும் பெரிதும் பொருட்படுத்துவது இல்லை. கோமளதிர்க்கு அடுத்தவர்களிடம் இருக்கும் குறையை பேசி பேசி ஆனந்தம் அடையும் எண்ணம் உண்டு.



'என்ன மீனாட்சி, என்ன விசேசம் கோவி லுக்கு வந்திருக்க?' என்று கோமளம் கேட்டாள்.

'இன்னைக்கு வெள்ளிக்கிழமை அதான் கோவிலுக்கு வந்தேன். என் மகளும் மருமகனும் வரேன்னு சொன் னாங்க. அதான் உட்கார்ந்து இருக்கேன்' என்று மீனாட்சி கூறினாள்

'உன்மகசத்யாவர்றாலா? பரவாயில்லை. நான் வந்தது நல்லதா போச்சு. அவல பார்த்து ரொம்ப நாள் ஆச்சு, மீனாட்சி! அவ என்ன பண்றா? கல்யாணம் முடிஞ்சு ஏலெட்டு வருஷம் இருக்கும்ல.' என்று விசாரித்தாள். கோமளம்.

அடுத்து கோமளம் என்ன கேட்க போகிறாள்?

என்பது மீனாட்சிக்கு தெரிந்தது. அதனால் சலிப்பாய் பதில் சொன்னாள் மீனாட்சி.

‘ஆமா, கல்யாணம் முடிஞ்சு ஏழு வருஷம் ஆச்சு. நல்லா அவ மாமியார் குடும்பதோட சந்தோசமா இருக்கா’ என்று மீனாட்சி கூறினாள்.

‘குழந்தை இருக்கா? குழந்தை பிறக்கல, தட்டி தட்டி போகுதுன்னு கேள்வி பட்டேன். ரொம்ப கவலையா இருந் துச்சு, மீனாட்சி. நாம பார்த்து வளர்த்த பிள்ளைகளுக்கு நல்லது நடக்க மாட்டேங்குதுன்னு!’ என்று கோமளம் பவ்ய மாக கூறினாள்.

‘குழந்தை இல்லை. ட்ரீட்மெண்ட் எடுத்து கிட்டு இருக்காங்க. அதான் இப்போ கோவிலுக்கு வர சொன்னேன். நம்ம திருவப் பனூர் சாமிய வேண்டிட்டு போங்கன்னு கூப்பிட்டேன். சக்தி வாய்ந்த சாமி, கேட் டதை தருவார் அதான் வர சொன் னேன்’ என்று மீனாட்சி கூறினாள்.

‘ஆமா, மீனாட்சி, நான் கேட்கிறேன்னு தப்பா நெனைக்காத. மகளுக்கு பிரச்சனையா? அல்லது மருமகனுக்கு பிரச்சனையா? இல்ல எனக்கு தெரிந்த டாக்டர் இருக்காங்க அதான் கேட்கிறேன் ’ என்று புரணி பேசும் விதமாய் விசாரித்தாள் கோமளம்.

‘அதான் சொன்னேன்ல, ட்ரீட்மெண்ட் பார்த்து கிட்டு இருக்காங்க என்று, பயப்படும் படி குறை ஒன்னும் இல்லையாம்.’ என்று கோவமாய் மீனாட்சி கூறினாள்.

‘அதுக்கில்ல மீனாட்சி, இப்போ எல்லாம் மாப்பிள்ளை மேல குறை இருந்தாலும், அத அப்படியே பொண்ணுங்க மேல போட்டு விட்டு போயிருவாங்க. அதான் கேட்டேன். குறை ஒன்னும் இல்லைன்னா அப்புறம் ஏன் இன்னும் குழந்தை பிறக்கல?’ என்று கேள்வி எழுப்பினாள் கோமளம்.

‘அது அவங்க பிரச்சன. கொஞ்ச நாள் ஜாலியா சுத்துவோம்னு நெனச்சிருக்கலாம்.’ என்று மீனாட்சி கூறினாள்.

‘குழந்தை இல்லன்னா ஊர்ல ஒரு மாதிரி பேசுவாங்கல்ல?, அதான் கேட்டேன் ’ என்று கோமளம் சமாளித்தாள்.

‘பேசுறவங்களுக்கு எல்லாம் பயந்தா, ஒன்னும் செய்யமுடியாது கோமளம். ஊர் வாய் நல்ல இருந்தாலும் பேசும், நல்லா இல்லைனாலும் பேசும். ஊர் வாயை பத்தி நீ பேசுற பாரு!’ நக்கலாக மீனாட்சி பேசினாள்.

உடனே சுதாரித்து கொண்டாள் கோமளம். நக்கலாக பேசும் மீனாட்சியை பேச்சில் அசிங்க படுத்த வேண்டும் என்று பேச்சை தொடர்ந்தாள் கோமளம்.

‘நான் என்ன சொன்னேன் மீனாட்சி? உன் நல்லதுக்கு தான் கேட்டேன். குறை நம்மை சத்யா மேல இருக்கா? இல்ல உன் மருமகன் மீதா என்று கேட்டது தப்பா? நான் இருக்கிறத தான கேட்டேன். நீ என்னமோ மூஞ்சில அடிச்ச மாதிரி பேசுற, மீனாட்சி’ என்று கோமளம் கூறினாள்.

கோமளம் பேச்சை விட மாட்டாள் என்பது தெரிந்து கொண்ட மீனாட்சி, பேச்சை மாற்றினாள்.

‘அத விடு கோமளம், இவங்களுக்கு கல்யாணமாவது ஆய்ருச்சு. உன் பொண்ணு கயல் என்ன பண்றாள்.? கயலுக்கு மாப் பிள்ளை அமைய மாட்டேங்குதாம், நீயும் நாலு வருசமா பார்த்துட்டு இருக்கிற. என் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கிறதுக்கு முன்னாடியே பார்க்க ஆரம்பிச்ச. இன்னும் பார்த்துட்டு இருக்கிற. கயலுக்கு எதுவும் குறை இருக்கா? என்று நறுக்கென்று மீனாட்சி கேட்டதும் , கோமளம் முகம் மாறியது.

கோமளம் பதில் பேசவில்லை. மீனாட்சி கேட்ட கயலுக்கு குறை ஏதும் இருக்கா என்ற கேள்வி கோமளத்திர்க்கு நறுக்கென்று முள் குத்தியது போல் இருந்தது.

சட்டென்று ‘சரி மீனாட்சி நான் கௌம்பிறேன்’ என்று வாங்கி கட்டி கொண்டவளாய் கோமளம் அங்கிருந்து புறப்பட்டாள்.

‘கடவுளே! நான் பேசுனது தப்பு தான், அவளோட பேச்ச நிப்பாட்ட வேற வழி தெரியல. அவ என்னை அசிங்கபடுத்தி பேசுறா. அதோட வலி என்னான்னு அவ ளுக்கு புரிய வைக்க தான், கயலுக்கு ஏதும் குறையா என்று கேட்டேன்’

என்று மீனாட்சி கடவுளிடம் மன்னிப்பு கேட்டாள்.

மகளின் வருகைக்காக காத்திருந்தாள் மீனாட்சி.

குறை ஒன்றும் இல்லை என்ற மன பக்கு வத்தில் வாழ கற்று கொள்ள வேண்டும். குறைகளை களைந்து அதனை நிறைகளாக மாற்றி நாமும்

மகிழ்வோம், மற்றவர்களையும் மகிழ் விப்போம்.

மற்றவர் குறையில் சுகம் காண்பது மிக பெரிய தவறு. குறைகள் இல்லாத மனிதன் இல்லை. அதனை நிறைகளாக மாற்றி பழகுவோம்.

முற்றும்.


**மணிராம் கார்த்திக்**

மேல அனுப்பனடி,

மதுரை - 625009




# தாய்மொழி நாள்

(தன்முனை இயைபுக்கவிதைகள்)

தாலாட்டுப் பாடியும்,
தூங்கவில்லை குழந்தை
தாய்மொழி தெரியாமல்,
தாலாட்டும் மடந்தை

பிறமொழி அறிவால்,
தனித்திறன் பெறுவதா?
தன்மொழி அறியாமல்,
இனத்தை அழிப்பதா?

சிந்தனையின் திறவுகோல்,
எல்லோர்க்கும் தாய்மொழி
சிந்திந்தே பயில்வோம்,
சிறப்பிக்கும் நம்மொழி

உணவில் நஞ்சை
ஊட்டி வளர்க்காதே!
உன்மொழி தன்னுள்,
பிறமொழி கலவாதே

பொருளில் கலப்படம்,
உயிர்க்கொல்லி யாமே!
மொழியில் கலப்படம்,
இனக்கொல்லி யாமே!

தாயை மதிப்போம்,
தன்மொழி அறிவோம்
தாய்மொழி பயின்றே,
சிந்தனை வளர்ப்போம்


**திருமதி. இரா.இராஜாமணி**

ஈரோடு



# தெளிவு

**கண்மணி செல்வகுமாரி,**
**சென்னை**

பகலுக்கு விடை கொடுத்தும் இரவை வரவேற்று நிற்கும் அந்திப் பொழுதில் மேகமூட்டத்தால் முற்றுகையிடப்பட்ட தெளிவற்ற வானம் போல் என் மனம் இருள் அடைந்து இருந்தது. வாழ்க்கையில் நடக்கும் சில நிகழ்வுகள் எதார்த்தங்கள் தான் ஆனால் அவற்றை உள்வாங்கி மனம் இயல்பாய் இருக்க முடிவதில்லை. கலங்கி போய் விடுகின்றது. எப்பொழுதும் பிரச்சனைக்கு தீர்வை நினைக்கும் எண்ணம் தான், ஏனோ அன்று எதிர்மறை எண்ணம் மட்டும் எகத்தாளம் மிட்டு அமர்ந்து கொண்டது மனதில்.

உழைப்பை உறிந்து கொண்டு சுயநலத்தால் தூக்கி எறியும் முதலாளி. அன்னையின் அன்பை அலட்சியப்படுத்தும் பிள்ளை, கொட்டி குவிக்கும் அன்பை கொச்சைப்படுத்தும் காதல் மனம், நம்பிக்கைக்கு துரோகம் இழைக்கும் நட்பு, பகுத்தறிவை பாழாக்கி அறத்தை அழித்து பண்பாடு கலாச்சாரம் என்று மக்களை திசை திருப்பும் திருட்டு சமயவாதிகள், இன்னும் எத்தனை எத்தனை முரண்பாடுகள் சமுதாயத்தில் மலிந்து கிடக்கின்றன.

இயற்கை எல்லாம் இயல்பில்அப்படியே இருக்க மனித மனங்கள் மட்டும் ஏனோ சூழ்நிலைக்கு ஏற்றார் போல் மாறுபடுகின்றது.

இப்படி ஏதேதோ சிந்தித்து படுக்கையில் படுத்தால் என் இமை இரண்டும் ஊடல் கொண்டு கூட மறுத்ததால் உறக்கம் இழந்து தவித்தது மனம்.

ஏதேதோ நினைத்து என் மனம் முக்காலத்திலும் உழன்று கொண்டிருந்தது. எப்பொழுது இமை இரண்டும் கூடல் கொண்டது தெரியாது. அலாரம் சத்தம் 5 மணியை நினைவூட்டியதும் எழுந்து என்

காலை பணிகளை முடித்துவிட்டு, விறு விறுவென்று நடந்து ரோட்டிற்கு வந்தேன்.

வழக்கமாக இரண்டு சுமை தான் இருக்கும். ஆனால் இன்று ஏனோ மூன்று சுமை, தோளில் கையில் மனதில் சுமை, ஆட்டோவிற்கான காத்திருப்பில் சில நிமிடங்கள் கழிந்து என் அருகில் ஒரு ஆட்டோ வந்தது

எங்கம்மா போகணும்

நான் இடத்தை சொன்னவுடன் ரூ.50 ஆகும் தருவீர்களா

அன்று எனக்கு யாரைப் பார்த்தாலும் எரிச்சலாகவே இருந்தது.

ஆமாம் இப்படி கூட சில நேரம் நமக்கு நடப்பதுண்டு நாம் சந்தோஷமாக இருக்கும் சமயத்தில் எல்லோரிடமும் சந்தோஷமாக பேசுவோம். நமக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால் எல்லோரிடமும் எரிந்து விழுவோம்.

அப்படித்தான் நானும் அன்று நடந்து கொண்டேன் என்று நினைக்கிறேன்

தருகிறேன் சார் போங்க!

ஐயோடா ஆட்டோவில் உட்கார்ந்த சில நொடிகளில் என் மனம் தலைகீழாக மாறியது. ஆட்டோவில் மிக சத்தமான பாடல் ஒன்று

போடும் பொய்திறையை கிழித்து விடும் காலம்
புரியும் அப்பொழுது மெய்யான கோலம்
கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும் நீ
காணும் தோற்றம் உண்மை இல்லாதது

ஆட்டோ ஓட்டும் அண்ணாவும் சேர்ந்து பாடிக் கொண்டே வந்தார். அது முடிந்ததும் அடுத்த பாடல்

ஒருவர் மீது
ஒருவர் சாய்ந்து ஓடம் போலே
ஆடலாம் பாடலாம்

என்ற எம்ஜிஆர் ஒரு காதல் பாடல்

பாடல் வரிகளை விட அதை சேர்ந்து அவர் அவ்வளவு சந்தோஷமாக சந்தோஷமாக பாடும் அவருடைய அந்த முகத்தில் உள்ள புன்னகை என்னை என் மனதை மாற்றியது

நான் என் மனதை கட்டுப்படுத்த முடியாமல் அவரிடம் கேட்டேன் எப்படி இவ்வளவு காலையில் இத்தனை சந்தோஷமாக இருக்கிறீர்கள் என்று.

என்னம்மா இந்த வாழ்க்கை ஒன்றும் அவ்வளவு நிலை இல்லாதது.

முடிஞ்ச வரைக்கும் உண்மையாவும் நேர்மையாக வாழ்ந்தால் போதும்.

கிடைக்கின்ற இந்த கொஞ்ச வருமானத்தில் என் குடும்பத்தை நான் சந்தோஷமாக நடத்துகிறேன்.

நான் எப்பொழுதும் சந்தோஷமாகும் புத்துணர்ச்சியுடன் இருப்பதால் எனக்கு எந்த நோயும் இல்லை.

இப்படியே சந்தோஷமாக என் காலத்தை கழித்து விடுவேன் வேறு என்னமா வேண்டும் எனக்கு.

அவருக்கு இருந்த தைரியம் எனக்கு இல்லை அவரிடமிருந்து சந்தோஷம் என்னிடம் இல்லை, அவரிடமிருந்து தெளிவு என்னிடம் இல்லை.

என்னை நானே சில கேள்விகள் கேட்டுக் கொண்டேன்.

அவ்வளவுதான் எல்லாம் பறந்தது செல்வகுமாரிக்கும் சிறகு முளைத்தது.

வாழ்க்கை தத்துவத்தை நமக்கு எடுத்து சொல்ல தத்துவ ஞானிகள் தேவையில்லை

நாம் அன்றாடம் சந்திக்கும். சில சாதாரண மனிதர்கள் கூட.

நமக்கு புரிய வைத்து வாழ்க்கையை அழகாக்கி விடுகிறார்கள் .

முற்றுகையிட்ட மேக கூட்டங்கள் நீர் துளிகளாக பூமியை நனைத்து குளிர்வித்தது பயி

மழைக்குப் பின் தெளிவான வானம் போல் என் மனமும்

வாழ்க்கை அழகானது

# துளிப்பாக்கள்

1.
நடவு காலம்
வீட்டு முற்றங்களில்
தவளை சப்தம்

2.
வானம் பார்க்கும் பரிசல்
விளையாட்டுகளால் நிறைகிறது
நீரற்ற ஆறு

3.
காற்றின் கருணை
குளத்தில் அலைகள்
கரை சேர்கிறது பூ

4.
திறக்கும் பாடநூல்கள்
குடிசையில் ஒளியேற்றுகிறது
லாந்தர் விளக்கு

5.
குடிசையில் ஓட்டை
சிக்கித் தவிக்கிறது
ஒற்றை நட்சத்திரம்

6.
மணலில் மீன் ஓவியம்
தாவி வந்து தழுவுகிறது
கரையேறி அலை

**ஐ.தர்மசிங்**
நாகர்கோவில்



# நொடிந்து போன உள்ளம்



‘புள்ள கொஞ்சம் டீ ஊத்தித் தாவன். விடிய டீ குடிச்சா வயித்துக்கு நல்லா இருக்கும்‘ என்று நான் சொல்லி முடிப்பதற்குள்.ஓ…ஓ..கடைக்குப் போய் பால் வாங்கிக் கொண்டு வாங்க நான் டீ போட்டுத் தாறன்‘.என்று சிரித்துக் கொண்டு சொன்னாள் என்னுடைய மனைவி ஸாலிஹா. பாவம் அவள்தான் என்ன செய்வாள். நான் படுக்கையில் விழுந்து கிடக்கின்ற இந்த பத்து வருஷங்களில் என்னோடு கிடந்து கஷ்டப்படுகிறாள். யார் யாரோ தரும் உதவிகளாலும் இறைவனின்

அருளினாலும் ஏதோ மூன்று வேளை வயிறு நிரம்புகிறது.

இந்த பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் காலையில் எழுந்தால் ‘வயிற் றுக்கு என்ன செய்வது...?’ என்று யோசித் தாலே உடலும் மனசும் கனத்துப் போய் விடுகின்றது. என்னுடைய வாழ்க்கை யில் இத்தனை பெரிய சோதனை வரும் என்று நான் கனவும் காணவில்லை.

ஓஹோ என்று வாழாவிட்டாலும் சந்தோசமாக எனது குடும்பத்தை நான் மிக சிறப்பாக வழி நடத்தினேன். சொந்தமாய் ஒரு தொழில் மிகவும் மகிழ்ச்சியாக எங்களது வாழ்க்கைக்கு அன்றாடம் பொழுதை போக்க போதுமானதாய் இருந்தது. தனக்கு மிஞ்சியது தான மும் தர்மமும் என்பது போல குடும்பத்த வருக்கும் ஏனையவருக்கும் என்னால் முடிந்தளவு உதவிகளையும் நான் செய்தி ருக்கின்றேன். எனது ஐம்பது வயது வரை பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் ராஜாவாக நான் வாழ்ந்திருக்கிறேன். வந்திருக்கின்றேன். எனது வீட்டில் மூத்த பிள்ளையாகவும், மனைவியின் குடும் பத்தில் மூத்த மருமகனாகவும்

மிகவும் மதிப்புடனும் கௌரவத்துட னும் எனது பொழுது கலைந்திருக்கின்றது.

அன்றும் அப்படித்தான் நான் எனது நண்பனை காலையில் சந்தித்துப் பேசி விட்டு வீட்டுக்கு வந்த போது லேசான தலைசுற்றல் ஏற்பட்டது தான் எனக்கு தெரியும். 22 நாட்களுக்குப் பிறகுதான் எனக்கு சுய உணர்வு வந்தது. வைத்தியசாலையில் கண் விழித்து பார்த்தேன். கட்டிலில் படுத்த படுக்கையாய் நான் இருந்திருக்கின்றேன். என்னை சுற்றி உறவினர்களும் நண்பர்களும் என்னுடைய மனைவியும் அழுத கண்ணீ ரோடு காத்திருக்கின்றார்கள். எனக்கு பாரிச வாதம் ஏற்பட்டு ஒரு கையும் ஒரு காலும் செயலிழந்துபோயிருந்தது.நான்திடுக்கிட்டுப் போனேன் என் வாழ்க்கையில் மிகப் பெரிய அடி எனக்கு. நான் எதிர்பார்க்கவே இல்லை இத்தகைய ஒரு பேரதிர்ச்சி பாரிய நோய் எனக்கு வந்து சேரும் என்பதை யாரும் எண்ணி இருக்கவில்லை. என் வாழ்க் கையே அஸ்தமித்து போய்விட்டதாய் உணர்ந்தேன். ஆனாலும் என்னை யாரும் கைவிடவில்லை. குடும்பத்தாரும் உறவினரும் பக்க பலமாக இருந்து எனக்கு உதவினார்கள். தைரியமூட்டினார்கள். ஆறுதல் கூறினார்கள்.

மீண்டும் புதிதாய் பிறந்த குழந்தையைப் போல புதிதாய் நடைப்பழகி, ஊன்று கோலில் நடந்து, பின்னர் மெதுவாக தனியே நடக்க பழகி, இப்போது சுயமாக ஏதோ விந்தி விந்தி நடக்கின்றேன். என்னு டைய சொந்த காலில் என்னுடைய அலுவல்களை நானே செய்ய முடிந்தவரை முயற்சிக்கின்றேன். என்னுடைய தன்னம் பிக்கையால் நான் இயல்பாக நடக்க முயல்கின்றேன்.

‘மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்’ என்பார்களே. எனக்கும் என் மனைவி ஸாலிஹா கிடைத்தது மிகப்பெரிய வரமே தான். கணவன் வறுமைப்பட்டால் அல்லது நோய்வாய்ப் பட்டால் தான் ஒரு மனைவியின் உண்மை நிலையை அறியலாம் என்று சொல்வார்கள். தன் பெற்ற குழந்தையை பராமரிப்பது போல் என் மனைவி என்னை கண்ணிமை காப்பது போல் பாதுகாத்து வந்தாள். மலசல சுத்திகரிப்பு முதல் குளிப்பாட்டி, உடுப்பாட்டி, உண்ண வைத்து, உறங்க வைத்து எனது ஒரு காலாகவும் ,ஒரு கையாகவும், எனது ஊன்றுகோலாகவும் இருந்து கவனித்து நான் எழும்பி நடமாட துணையாகவும் தோள் கொடுத்து நின்ற வள் அவள் தான். இன்றுவரை நான் ஆடைகள் அணிய அவள் துணைய இல்லா மல் எனக்கு முடிவதில்லை.

என்னுடைய பிரார்த்தனை எல்லாம் அவள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் அல்லது அவள் மரணிப்பதற்கிடையில் நான் மரணித்து போக வேண்டும் என்பது தான். அவள் கண்ணுக்குப் பிறகு என்னுடைய வாழ்க்கையும் இருண்டு போய்விடும். அதற்கிடையில் எனக்கு மரணம் வந்து விட வேண்டும் என்று அடிக்கடி அவளிடம் கூறுவேன். எனக்கு அவள் தான் எல்லாமாக இருக்கின்றாள். அவளது உதவி இல்லாமல் என்னால் தனித்து இயங்க முடியாது. என்ன தேவை என்று நான் அழைத்தாலும் மறு வார்த்தை பேசாமல் ஓடி ஓடி வந்து எனக்கு வேலை செய்வதை அவள் ஒரு போதும் சுமையாகவும் தொல்லையாகவோ நினைத் ததில்லை.

உள்ளது உரியது எல்லாவற்றையும் கொண்டு வைத்தியச் செலவுக்கு செல வழித்து முடிந்து விட்டது. 10 வருட காலமாய் உழைப் பில்லாமல் செலவழிப்பது என்பது லேசு பட்ட காரியமா என்ன? இரண்டு வயிறு என்றாலும் அன்றாடம் ஆயிரம் தேவைகள் வரும். யாரிடம் கேட்பது யாரிடம் கையேந்துவது என்று எங்களுக்கு தெரியாது. ஆனாலும் இது வரை யாரிடம் கையேந்தியதில்லை. என் மனைவியின் சகோதரர்கள் மூலமாக ஏதோ உதவி எமக்கு வந்து சேரும்.

காலையில் கண்விழித்தால் வாயும் வயிறும் என்ன சும்மா இருந்து விடவா போகிறது.?' இன்றைய பாடு என்ன புள்ள ஸாலிஹா' என்று கேட்பேன்.'ஒன்றுமில்லை படைத்தவன் படியளிப்பான்'. என்று சொல்லிவிட்டு இருந்து விடுவாள் அவள். அன்றய பொழுது யார் வீட்டில் இருந்தாவது சாப்பாடு வந்து எங்கள் வயிறு நிறையும்.

அல்ஹம்துலில்லாஹ் எப்படி எப்படி எல்லாம் வாழ்ந்திருக்கின்றேன். பிள்ளை கள் மனைவி என்ன வேணும் என்று ஆசைப்பட்டாலும் உடனே வாங்கி வந்து விடுவேன். அதுவும் கொஞ்ச நஞ்சம் வாங்கு வதில்லை .'வீட்டில் நாலு பேர் தானே இருக்கிறோம். 40 பேருக்கு வாங்கினால் போல வாங்கி வந்திருக்கிறீங்க' மனைவி எப்போதும் கோபித்துக் கொள்வாயள்., ஆனால் இப்போது ஒடிந்து நொடிந்து போயிருக்கிறேன். ஆசைப்பட்டாலும் எது வும் வாங்க முடியாத பரிதாப நிலையை தனியே எண்ணி எண்ணி பெருமூச்சு விடுகின்றேன்.

ஒரு பெண்ணுக்கு எத்தனை ஆசைகள் இருக்கும் ஸாலிஹாவும் ஒரு பெண் தானே.அவளுக்கு ஆசா பாசங்கள் இருக் கத்தான் செய்யும். எதையுமே அவள் வெளிப்படுத்தாமல் கணவனின் நிலையை அறிந்து கல்லாக இருந்து விடுவாள். பாவம் ஸாலிஹா. ஒரு விசித்திரமான பெண். இவள் எனக்கு மனைவியாக வந்து அமைந்ததற்கு நான் இறைவனுக்கு நன்றி சொல்ல இந்த ஒரு நாவு போதாது.

ஆனாலும் எனக்கு என் மனம் உறுத்து கிறது. புருஷ லட்சணம் என்பது ஒரு ஆணுக்கு உழைப்பு தானே. பெண்டாட்டி புள்ள குட்டிகளின் ஆசைகள் தேவைகளை நிறைவேற்ற முடியாத கையாலாகாத நிலை யாருக்கும் வந்து விடக்கூடாது என்பதை எண்ணி எண்ணி யாருக்கும் தெரியாமல் தண்ணீரில் மீனை கண்ணீரில் மிதக்கிறேன் நான். 'என்னங்க.. இன்னைக்கு மூத்த மகள் லஸ்னா நமக்கு சாப்பாடு அனுப்பி இருக்கிறாங்க.. சாப்பிட வாங்க ..'மனை வியின் அழைப்போசை கேட்டு கண்களை அழுத்தி துடைத்துவிட்டு கனத்த மனதோடு சாப்பிட போகின்றேன்.

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்.**

காத்தான்குடி

# காஞ்சிப் பட்டுடுத்தி...



'எங்கேடி அவன், உன் அருமைப் பிள்ளை, முத்துக் குமரன் ?' என்று நக்கலும், கோபமும் பொங்கக் கேட்டபடியே உள்ளே நுழைந்தார், சிவப்பிரகாசம்.

'ஏன் கேட்கும்போதே கிண்டல்? என் செல்லப் பிள்ளை உங்களை என்ன செய்துட்டான்?' என்று அவிழ்ந்த தலை முடியை அள்ளிச் சொருகியபடியே எழுந்து வந்தாள், காமாட்சி .

'நேற்று அவன் தறியிலிருந்து முடிச்சி எடுத்த சேலையை சங்கத் தலைவர் கேட்டதுக்கு தரமாட்டேன்னு திட்டி, விரட்டி அடிச்சிருக்காண்டி'.

'அம்மா, நான் யாரையும் திட்டவு மில்லை, விரட்டி அடிக்கவுமில்லை. என்னமா போட்டுக் கொடுத்திருக்காரு, பாரும்மா! 'பொடவையைக் குடுக்கிறதிற் கில்லை' னு சொன்னேன். வேறே ஒண்ணு மில்லை' என்றான் அப்பா அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டே வந்த குமரன்

'அதத்தான் ஏன்னு கேக்கறேன். இத்தனைக்கும் ரூபாய் 40,000/- தரேன்னு சொன்னாராண்டி' அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே மருமகள் கலா வதி 'ஆ, 40,000மா- மா' என்று வாயைப் பிளந்துகொண்டு வந்து நின்றாள்.. கூடவே 'அப்ப அதக்கொடுத்தா இந்த மாசச் செலவுக்கும், போன மாசக் கடனுக்கும் ஆவுமில்ல'

'அப்படி அந்தப் பொடவையை யாருக்குடா பத்திரப் படுத்தறே, ஒம் பொண்டாட்டிக்கா?'

'எம் பொண்டாட்டிக்குத்தான் கொடுக் கணுமா, ஏன், உங்க பொண்டாட்டிக்குத் தான்னு வெச்சுக்குங்களேன்' என்றான், குமரன்.

'ஏன், உங்க ஆத்தா சமஞ்சிருக்காளா, சடங்கு செய்யவா அந்தப் பொடவை?' என்று சிவப்பிரகாசம் மல்லுக் கட்டவும், காமாட்சி ஆரம்பித்தாள்.

ஐயா, ராசா ! நான் 200 ரூபா பொடவை கட்றவ, எனக்கெதுக்குப்பா 40000 ரூபா பொடவை? நாயமாப் பேசு!' என்றாள்.

'ஆமா, இவங்க நாயமும் பேசு வாங்க, நயந்துபேசி பொடவையும் வாங்கிக்கு வாங்க ' என்று முணுமுணுத்தாள், கலாவதி. 'என்னடி சொல்றே?' என்று கேட்ட குமரனிடம்' இது என்ன பிடிவாதம் னுதான் கேக்குறேன்' என்றவள், 'செலவு மென்னியப் பிடிக்குது' என்று சொன்னாள்.

உனக்கு செலவுக்குப் பணம் வேணும், அதானே' என்ற குமரன் தன் கழுத்துத் தங்கச் சங்கிலியை கழற்றினான். 'ஏதாவ துன்னா எங்கப்பா கொடுத்த சங்கிலி தான் மாட்டிக்கும்' என்று நொடித்த கலாவிடம், 'இதோ பார்! இது உங்க நைனா போட்டதில்லை எங்கம்மா நான் 12 ம் வகுப்பிலே நெறய மார்க் வாங்கினபோது போட்டது' என்று அதை அம்மா கையிலே கொடுத்துவிட்டு, 'இந்தா, உங்கப்பாரு போட்ட சீரு சங்கிலி, எடுத்து வெச்சுக்க' என்று இன்னொரு சங்கிலியைக் கழற்றி மேசை மேல் வைத்தான். அவனுக்குத்

தெரியும், அம்மா அவன் சங்கிலியை அடகெல்லாம் வைக்க மாட்டாள். தன் சிறு வாட்டுக் காசிலிருந்து இப்போது தருவாள். பணம் தரும் போது 'மீட்டேன்' என்று திரும்பக் கொடுப்பாள்.

'எப்பிடியோ போங்க, சாப்பிட வரீங்களா?' என்றாள் கலா.

'ஏண்டி, ஆம்பிள கோபமா இருக்கறப்பவா சாப்பிடக் கூப்பிடுவ? போடி, போய் வேலையைப் பாரு, 1/2 மணில சாப்பிடலாம்' என்ற காமாட்சி 10 நிமிடம் கழித்து ஒரு டம்ளர் மோர் கொண்டுவந்து பிள்ளைக்குக் கொடுத்தாள்.

10 நாள் ஆயிற்று. இரண்டு நாள் கோபமாக இருந்த கலாவதி, அம்மா, குமரன் எல்லாரும் இயல்பான குணத்திற்கு வந்தார்கள். அன்று கலாவின் சித்தப்பா பேரனுக்கு காதணி விழா. எல்லோரும் பெருங்களத்தூருக்கு விடியல் காலையே போவதாகத் திட்டமிட்டிருந்தார்கள். காலையில் எல்லோரும் சீக்கிரம் எழுந்து கிளம்பவேண்டும். காலை எழுந்த காமாட்சி, 'எனக்குத் தலை ரொம்ப சுத்துகிறது, வாந்தி வருகிறது. நான் வரவில்லை' என்று சொல்லிவிட்டாள். 'எங்க வீட்ல ஏதுனா விசேசம்னா வந்துருமே உங்கம்மாவுக்கு' என்று நொடித்த கலா, 'நீங்க கிளம்பலியா?' எனவும் குமரன் பட்டென்று, 'எங்கம்மாவைப் பாத்துக்க நான் இருக்கிறேன், நீங்க எல்லோரும் போய்ட்டுவாங்க' என்றான்.

பூசணிக்காய் போல முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டு கலா வேனில் ஏற, அப்பா குழந்தைகள், பக்கத்து வீட்டு சின்னம்மா குடும்பம் எல்லோரும் புறப்பட்டார்கள். அடுத்த ஐந்தாவது நிமிடம் தடாலென எழுந்து உட்கார்ந்த காமாட்சி, 'சொல்லு, குமரா, எதுக்கு என்னை தலை சுத்தல்னு சொல்லி போகாம நிக்கச் சொன்னே?' என்று பிள்ளையைக் கேட்டாள்.

'சொல்றேன், சொல்றேன். நீ எந்திரிச்சி, குளிச்சி தலை வாரி பிச்சோடா போடு! மல்லிகை பூ வாங்கி வெச்சிருக்கேன் வெச்சிட்டு, நகை நட்டு போட்டுக்க. இந்தா, புது புடவை நல்லா கொசுவம் வெச்சு, முந்தியை மடிவெச்சு கட்டிக்க! என்னோடு ஆட்டோல வெளியே வா!' என்று அடுக்கினான்.

புதுப் புடவையைப் பார்த்ததும் காமாட்சிக்குப் புல்லரித்துவிட்டது. 'டேய், இதுக்கு மாதிரி.....' என்று இழுத்தாள். 'நீ நினைப்பதேதான்' என்றான் குமரன். 'டேய், டேய் எதுக்கு இதெல்லாம் சொல்லுடா' என்று தவித்த அம்மாவிடம், 'நா ஏதாவது செஞ்சா அதுக்கு காரணம் இருக்குமா, இல்லையா, பேசாம வா! ' என்றான்.

காமாட்சி தயாரானாள். ஆட்டோ, கடைத்தெருவில் இவன் பெரியம்மா பிள்ளை வைத்திருக்கும் போட்டோ ஸ்டுடியோவில் போய் நின்றது. 'வாங்க, சின்னம்மா' என்று வரவேற்ற ராசப்பா இவர்களை உள்ளே அழைத்துப் போனான்.

'அட, போக்கத்த பசங்களா, என்னை போட்டோ பிடிக்கப் போறீங்களாக்கும், வேலையைக் காணும்' என்றாள் காமாட்சி. அவளை லைட்டுக்கு நேரே நிற்கவைத்து விட்டு, ' நா இப்போ கேக்கற கேள்விக்கு சரியா பதில் சொல்லணும். அதான் ஒன் வேலை' என்றான் குமரன். அவனைச் செல்லமாக முறைத்தாள் காமாட்சி.

'அப்பா ஒன்னை பொண்ணு பாக்க வந்தபோது நீ எப்பிடி அவரைப் பார்த்தே? சொல்லு பாக்கலாம்.' என்றான். "போடா, எனக்கு ரொம்ப வெக்கமா இருக்கு' என்றாள் காமாட்சி. அவள் முகம் குங்குமமாகச் சிவக்க கேமரா அதை பளிச்சென்று. உள்வாங்கியது. 'போகட்டும், எனக்கு போன வருஷம் இரண்டாவது குழந்தை பொறந்தப்ப அப்பாகிட்டே கல்கண்டு எப்பிடி நீட்டினே, நீட்டிக் காமி' என்றான் குமரன். தயங்கிய காமாட்சியிடம், 'எல்லாம் ஒரு வேடிக்கைதானே, பண்ணுங்க, சின்னம்மா' என்று கல்கண்டுத் தட்டை கொடுத்தான்

ராசப்பா. வாயெல்லாம் பல்லாக தட்டை நீட்டினாள் காமாட்சி. கேமரா பளிச்சிட்டது.

'அம்மா, இப்போ நீ இந்தப் புடவையைக் கட்டிக்கிட்டு வாம்மா' என்று இன்னொரு பையைக் குமரன் கொடுக்க, 'இது எங்கடா, உங்கையிலே' என்ற காமாட்சி மறுப்புச் சொல்லாமல் பக்கத்து ரூமில் போய் மாற்றிக் கொண்டு வந்தாள். அதே இரண்டு கேள்வி பதிலுக்கு போஸ். கொடுத்த அம்மாவை வீட்டில் கொண்டுபோய்விட்ட குமரன். அவளிடம், 'அம்மா, யார்கிட்டேயும் மூச்சுவிடாதே. உனக்கு உடம்பு சரியில்லை' என்றான்.

15, 20 நாட்கள் போயிருக்கும். மாலையில் காஞ்சீபுரம் மாவட்டத்தின் சிறப்புப்பதிப்பு செய்தித் தாள் ஒன்றைக் கையில்வைத்துக் கொண்டு, 'குமரா, குமரா' எனக் கத்திக் கொண்டு மூச்சிரைக்க வந்து நின்றான் ராசப்பா. வீட்டில் எல்லோரும் அவனை சூழ்ந்து கொண்டு விட்டனர். 'பாருங்க, நம்ப குமரனுக்கு இந்த வருட சிறந்த புடவை விளம்பரத்திற்காக ரூபாய் 70,000/- பரிசு வந்திருக்கு' 'என்ன,என்ன, நிசமாவா? என்னப்பா சொல்றே நீ? இங்கே கொண்டா, பார்க்கலாம்' என்று ஆளாளுக்கு செய்தித் தாளை பார்த்தனர்.

'அட, உங்கம்மா போட்டோ, அதுவும் 4 வந்திருக்கே!' என அப்பா சொல்ல, 'அத்தை கூட அழகா இருக்காங்களே!' என்று கலாவதி அதிசயித்தாள். 'என் னடி, மூக்குலே வெரலெ வெக்கறே. எங்காத் தாதான் உலகத்திலேயே அழகு ' என்றான் குமரன்.

அதற்குள் வாசலில் வந்து நின்ற நெசவாளர் சங்கத் தலைவரின் கார் டிரைவர் 'ஐயா உங்களைக் கூட்டிட்டு வரச் சொன்னாருங்கய்யா' என்றார். 'ஏன், இன்னும் திட்டறதுக்கா?' என்று குமரன் கேட்க, 'இல்லை ஐயா, பாராட்டுக் கூட்டம் ஒண்ணு வைக்கணும், இன்னிக்கா இல்லை நாளைக்கா எது சௌகரியம்னு கேட்கணும்னு சொல்லிக் கிட்டுருந்தாருங்க. அதுக்காக இருக்கலாம்' என்று டிரைவர் கூறினார். அப்பா, 'குமரா, அவரைப் போய்ப் பார்த்து மரியாதையா பேசிட்டு வா,' என்றார்.

'பார்ப்பதுமட்டுமில்லைப்பா, சங்கத்துக்கும் கொஞ்சம் நிதி தருவேன். என் தம்பி ராசப்பாவுக்கும் பணத்தில் பங்கு உண்டு.' என்றான் குமரன். . ..

டெலிபோன் மணி அடித்தது.. அதை எடுத்து செவிமடுத்த கலா முகம் மலர, 'என்னங்க, ஸமார்ட் டீ.வி யிலிருந்து வராங்களாம்' என்றாள். எல்லோரும் அவசர அவசரமாக அலங்காரம் செய்து கொள்ள ஆரம்பித்தார்கள்.. சிறிது நேரம் சென்றபின் வாசலில் இருந்த ராசப்பா 'டீ.வி காரங்க வந்துட்டாங்க' என அறிவித்தான்.

காமிராவுடன் வந்து நுழைந்தவர்கள் குமரனை வாழ்த்திவிட்டு பேட்டியைத் தொடங்கினார்கள். புடவைகளை மேசையின் மேல் வைத்து அதை படம் எடுத்துக் கொண்டார்கள். மாம்பழக் கலரில் நல்ல பச்சையில் இரு பக்க பார்டர். அதில் சரிகையில் பூர்ணகும்பம், தாமரை என்று மாற்றி, மாற்றி நெய்யப்படிருந்தது. அடர் சரிகை வேலைப் பாடுடன் தலைப்பு. அதில் பெரிய பூர்ணகும்பமும், கோபுரமும். 'ஏங்க., விளம்பரத்தில் வரிசையா 4 படம் போட்டிருக்கீங்க நாலுமே டாப். முதல் இரண்டும் புதுப் புடவை. இந்த வருட எண் கொடுத்திருக்கீங்க. மத்த இரண்டுக்கும் 35 வருடத்துக்கு முந்திய எண்ணும் நாலுக்குமே உங்க கடை விலாசமும் கொடுத்திருக்கீங்க. நாலும் ஒரே டிசைன், ஒரே கலர் காமினேஷன், இந்த 35 வருட புடவையை யார் நெய்தது?' என்று நிருபர் கேட்டார். . 'அது என் அப்பா நெய்து மருமகளுக்கு சீர் கொடுத்தது' எனப் பெருமையுடன் சொன்னார் சிவப்பிரகாசம்.

'என் தாத்தா போட்ட டிசைனையே நானும்போட்டிருக்கிறேன். இது35வருடப் புடவைன்னு நான் சொல்லாவிட்டால் தெரியுமா? என்றான் குமரன்.

'வாஸ்தவம் தான். ஆமாம், வாசகம் உங்களுடையதுதானா?' உருவங்கள் மாறலாம் ஆனால் உங்கள் உணர்ச் சிகள் மாறாது. நாங்கள் தந்த உடையும் மாறாது 'ரொம்ப அழகாக எழுதியிருக் கீங்களே!' என்று ஒரு பெண் நிருபர் கேட்க, 'பொண்ணே, என் பையன் சின்னவயசிலேயே நல்லா படிப்பான், கவிதை எழுதுவான். என்னவோ நாங்கள் ஏழை நெசவாளர்கள், மேலே படிக்கவைக்கவில்லை' என்றாள் அம்மா.

இருந்தாலும் இதை ஏன் ஒரு மூதாட்டியை வைத்து எடுத்தீர்கள்? மாடல்ஸ, குறைந்த பட்சம் சின்னப் பெண் களை வைத்து எடுத்திருக்கலாமே?

'என் அம்மாவின் போடோவைப் பார்த்தால் கையெடுத்துக் கும்பிட்டு 'காமாட்சி அம்மனைப் போல் இருக்கிறது' என்று சொல்கிறீர்கள். சின்னப் பெண்கள் என்றால் வேண்டாத எண்ணங்கள் தோன்றலாம். புடவைமேல் கவனம் முழுசாகப் போகணும் என்பது தான் எங்கள் விருப்பம். பிரபலமான மாடல்கள் மேல் உள்ள வருத்தத்தினால் தான் இந்த விளம்பரமே! நாங்கள் மாதக்கணக்கில் முதுகொடிய உட்கார்ந்து நெய்கிறோம். இந்தத் தறி எங்களுக்குக் கோவில் மாதிரி. இதிலே வர புடவையைக் கட்டப் போறது அம்பாள் அப்பிடினு பயபக்தியோடு நாங்க செய்யுற பூஜை இது. இதைத் தொழிலாக நாங்க பாக்கறதில்லை பணமிருக்கிறது என்றும் பாரம்பரிய உடை என்றும் அதை வாங்கிப் போய்க் கட்டுகிறார்களே, கட்டும் விதத்தில் இந்தப் பண்பாட்டுக்கு மரியாதை ஏதேனும் உண்டா? என் வாயால் என் பெற்றோரை வைத்துக் கொண்டு சொல்ல முடியாது.

இந்த போட்டோக்களைப் பாருங்கள்.' என்று சில பிரபலமான மாடல்களின் புடவை விளம்பர போட்டோக்களை மேசையின் மேல் போட்டான். குமரன். ஒன்றில் ஒரு பெண் குளிக்கப் போவது போல் கீழேயிருந்து மேலேவரை இரண்டு மூன்று சுற்றாக புடவையை முழங்காலுக்கு மேலிருந்து ஆரம்பித்து இறுக்கச் சுற்றி மேலே புடவையே வராமல் முந்தியை கையில் பிடித்திருந்தாள். இன்னொன்றில் கீழே புடவையை சாதாரணமாகக் கட்டி மேலே முந்தியை பின்னாலிருந்து அங்கவஸ்திரம் போல் தொங்கவிட்டிருந்தாள். அடுத்ததில், இடுப்புக்குமேல் புடவை வராமல் முந்தியை பின்னாலிருந்து குடை போல் பிடித்திருந்தாள்.. ' நீங்கள் வரைந்த அழகான ஒரு வண்ண ஓவியத்தை யாராவது வாங்கிப்போய் கருப்பில் நாலு கோடு குறுக்கும் நெடுக்குமாய் போட்டால், உங்கள் மனது எப்படி வலிக்கும் ? இந்த மாதிரி விளம்பரங்களைப் பார்த்து வந்த அந்த மாதிரி ஒரு வலி, வயற்றெரிச்சலில் பிறந்தது தான் என் விளம்பரம்' என்று கை கூப்பினான் குமரன்.

**திருமதி. மைதிலி சம்பத்**

செகந்திராபாத்-15

- இறக்கிற நாள் முடிவில்
 மீண்டும் பிறக்கிற
 உணர்வின் தெளிவு - நீ
 வசிக்கிற இடமோ தொலைவு
 எனினும் பறக்கிறதே
 எந்தன் மனது...!

- திறக்கிறவேளை மனதில்
 மூடிக் கிடக்கிற
 கதவுகள் கோடி...
 கதவம் திறக்கக்
 கதவம் திறக்க
 கற்பனை விரியும் தோழி !

# ஔவையின் ஆத்திச்சூடியும் தன்முனை இயைபுக்கவிதைகளும்

**(1) அறம் செய விரும்பு**

**பொருள் :**
நன்மை பயக்கும் செயல்களில் ஆர்வம்
கொள்க.

**தன்முனை இயைபுக்கவிதை:**
நன்மை தரும் செயல்களை,
எண்ணத்தில் நிறுத்து
வன்மம் என்றும் படராத,
நெஞ்சத்தை நிமிர்த்து

**(2) ஆறுவது சினம்**

**பொருள்:**
கோபம் தணிக்கப்பட வேண்டியது.

**தன்முனை இயைபுக்கவிதை:**
சினத்தை உதறிட,
குணமது சிறக்கும்
மனத்தை வெளுத்து,
இனத்தைக் காக்கும்

**(3) இயல்வது கரவேல்**

**பொருள்:**
உன்னால் முடிந்ததைத்
தேவைப்படுவோர்க்கு மறைக்காமல்,
அளித்து உதவு.

**தன்முனை இயைபுக் கவிதை**
இருப்பதை மறைத்தால்,
இருப்பதும் மறையும்
கொடுத்திட எடுத்தால்,
குறைவதும் நிறையும்

**(4) ஈவது விலக்கேல்**

**பொருள்:**
ஒருவர் மற்றவருக்குக் கொடுப்பதை
இடையில் சென்று தடுக்காதே!

**தன்முனை இயைபுக் கவிதை:**
இல்லாது இருப்பதில்,
இல்லை குறை
இடுவோரைத் தடுத்திடும்
இயல்பே குறை

**(5) உடையது விளம்பேல்.**

**பொருள்:**
உன்னிடம் உள்ளனவற்றைப்
பெருமையாகப் பேசாதே!

**தன்முனை இயைபுக்கவிதை:**
தற்பெருமைப் பேசி,
தம்பட்டம் அடிக்கலாமா?
பிறர்திறன் புரியாமல்
பேசிக் கழிக்கலாமா?

**திருமதி. இரா.இராஜாமணி**
ஈரோடு



# கவிதைகள்

கவிஞர் எம்.சோலை
அம்பத்தூர்



## தினந்தோறும்

தினந்தோறும் சிறை
தினந்தோறும் விடுதலை
அலுவலகப் பணி

## பார்வை

நிர்வாணம் பற்றிய
எனது கவிதைக்கு
அவள்
தன் பார்வை
கொண்டு
ஆடை அணிவித்தாள்.

## பெயர்

அதன் பெயரே
பெருங்காயம்
இன்னும்
நைக்கிறார்கள்
பெருங்காயத்தை.

## வியப்பு

மனிதர்களைப் பார்த்து
எறும்புக் கூட்டம்
வியந்து நிற்கையில்
அங்கே
யானைக் கூட்டம் வேறு
கடந்து போகிறது.

## காதலுக்கு கண்ணில்லை

பழுதாகிப் போன
தெரு விளக்கு
ஆண்கள் கடந்து
போகையில் கூட
கண் சிமிட்டுகிறது.





# தன்முனைக்கவிதைகள்

எட்டாக்கனி வரைக்கும்
இனித்திடும் மோகம்
கிட்டியதும் காதல்
கசந்தே போகும்

மழையின் வரவில்
மண்ணும் நனைந்தது
புல்லின் நுனியில்
புலரியும் மலர்ந்தது

தவிர்க்க முடியாமல்
தானாய் நிகழ்கிறது
பேரமைதி தேடுகையில்
பலப்பல பிரிவுகள்

இன்பத்தின் இசையில்
இலயித்திட முடிவதில்லை
இதயத்தில் அடிநாதமாய்த்
இன்னலே ஒலிக்கையில்

மன்னிப்பு கேட்டதால்
மன்னிப்பு தரவில்லை
மனவமைதி வேண்டியே
முட்களை செரித்தேன்

முட்டினால் முடியாதது
மூடினால் முடிகிறது
இதழ்கள் திறக்காவிடில்
எல்லாமே எளிதாகிறது

கைகள் கூப்பி
காரியம் நடாத்தும்
மண்ணில் சுயநலம்
மனிதர்களின் பெரும்பலம்

பிரிந்ததன் பின்னரும்
பக்கத்தில் இருக்கிறாய்
பாந்தமான பாடலில்
பவ்வியமாய் நுழைகிறாய்

வேற்றார் கைவிடுதல்
வேதனை அல்ல
உற்றார் உதாசீனமே
உண்மையில் கொடியது

பகைவர் சொற்கள்
ஞாபகம் இல்லை
நண்பன் நவின்றதை
மறக்க இயலவில்லை

பணமும் பதவியும்
பாக்கியம் இல்லை
பாரினில் ஆரோக்கியமே
பேறாகும் பாக்கியம்

உண்மையான நிம்மதி
உனக்கு வேண்டுமா?
உறவுகளை தேர்வதில்
உறுகவனம் செலுத்து

Dr. **ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்
இலங்கை

# வெண்பா போட்டி

## காலம் : ஜனவரி 2025

சாதி மதமென்னும் சார்புநிலை கொண்டவர்கள்
ஓதிக் கொடுத்ததையே ஓதுகிறார்- மோதிடவே
உண்மையை மாற்றி உரைக்கின்றார் கேட்காதே
கண்ணியமாய்க் காதலித்துக் க(கா)ட்டு!

செ. இராசா

.

பெண்களைப் பெற்றவர்கள் பேணியே பாதுகாக்க
புண்ணானப் பேதமையைப் பூட்டிடாமல் - மண்மேலே
ஆணவத்தின் உச்சமாய் ஆங்கே படுகொலைகள்
நாணவும் வேண்டாமா நாடு !

கவிஞர்.அ.முத்துசாமி , தாரமங்கலம் .

.

அவர் வேறு சாதியடா அப்பா  நமக்கும்
இவர் ஒத்துப் போவாரோ இங்கே தவறின்றி
எல்லோர்க்கும் ஏற்றபடி எங்கிருந்தும் நான் கொணர்வேன்
நல்ல பிள்ளை யாயெம்மை நம்பு

அன்புவல்லி தங்கவேலன்

.

வேண்டாம் எனக்கு விருப்பமில்லை அப்பாபார்
தாண்டிக் குதித்துமே தண்டிப்பார் - வேண்டுகின்றார்
காலில் விழுந்தம்மா கெஞ்சுகின்றார் நண்பன்தான்
தாலிகட்டச் செல்கின்றான் தூது.

கவிஞர் இரா.ச.பத்மநாபன் தஞ்சாவூர்

.

சாதிக்கும் என்பிள்ளை சாதிவிட்டுக் காதலித்தான்
மோதல் வலுக்கும் முடிவெதிரால் - ஆதலால்
தேதிக் குறித்தேன் திருமணத்தை செய்யவென
பேதமெதும் பாரா வரவு.

பொன்மணி தாசன்

.

உண்மை உணர்வால் உருவாகும் காதலை
திண்ணம் மகிழ்வுடன் ஏற்றிடு மண்ணில்
மதங்களும் சாதிகளும் மாற்றத் துடிக்கும்
உதவாத வீம்பை வெறு.

கவிஞர் க.தங்கவேலு - கிருட்டிணகிரி

.

வெல்லும் எனக்காதல் வேட்கை யதில்நீந்திச்
செல்லும்என் நண்பா சினமேனோ? - கொல்லும்
நினைவிலே பெற்றோர் நினைவிருந்தும் மாற்றி
மனையவளை மாலையிடு வாய் !

பாவலர் கோவதன் - மலேசியா

.

காதலித்த பெண்ணைக் கரம்பிடிக்க யார்தடுப்பார்?
பேதலித்து நிற்காதே பேடியாய் - கோதற்ற
நெஞ்சுரமும் வேலையும் நீகொண்டால் மாலையிடு
அஞ்சுதற் கென்னவுண்டு ஆங்கு .

க.சங்கரபாண்டியன்

.

மாறுபட்ட சாதியிலே மாலைசூடி வாழ்ந்திட்டால்
கூறுபட்டுப் போகுமெம் கோத்திரமே- சோறுபோட
உன்பிள்ளைக் கோர்துணையா இங்கில்லை சொற்பிறழ்ந்தால்
கொன்றாலும் குற்றமில்லை கேள்.

மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன் - ஏறாவூர், இலங்கை.

குடும்பத்தின் மானம் குறைக்கா திருக்கும்
உடும்புப் பிடியை உதறு -  எடுக்கும்
தொடுக்கும் முடிவுடன் தோழமை கரம்பிடி
தடுப்பை தகர்த்தித் தெளிர்

அண்ணாதுரை

.

பாழ்பட்ட சாதிவெறி பன்னெடுங் காலமாய்
ஆழ்மனத்தி லூறிநல் லன்பினை - வீழ்த்துதே
சீழ்வடியுஞ் சிந்தனையைச் செப்பனிடத் தோழரே
/வாழ்வில் மணமுடிப்பீர் வாழ்த்து

குலா கிருஷ்ணா - ரொறொன்ரோ, கனடா

.

அன்பால் கனிந்த அருந்தவக் காதலின்
இன்பத்தைக் கொன்றிடும் இம்சையாய் - துன்புறுத்தச்
சூழும் பிரிவினைச் சூழ்ச்சியை வீழ்த்திநீ
வாழும் நிலைகாண வா!

எம்.ஆர்.தனசேகரன் -  மலேசியா.

காதலெனும் காவியம் காணாமல் போய்க்காமப்
போதையில் பிள்ளைகள் போவதுன் - போதனையோ?
பெற்றோர் விரும்பப் பிடித்தவரைக்  கட்டிக்கொள்
வெற்றுப்பேர் சாதி வெறுப்பு

தன்ராஜ் பாப்பணன்

.

அன்னையும் தந்தையும் அப்படியே போயென்று
தன்மைந்தன் பாராமல் தள்ளிட்டார்-பின்னமது
வாராமல் காதலை வாழவைத்தார் தோழர்கள்
தாரமாய் நிற்பவளைத் தாங்கு

பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை

எத்தனை யின்னல்க ளிப்புவியில் நேர்ந்தாலும்
அத்தனையும் தாண்டி யடியெடுத்தே - இத்தரையில்
காதல் படகைக் கரைசேர்த்து நிற்பாரேல்
சாதனை யாளரென்றே சாற்று .

இரா . சம்பந்தன் - ஜேர்மனி

.

செத்தால் மதமுமா சேர்ந்துவரும் ? சேர்த்துவைப்பாய்
அத்துவிட பார்த்தால் அதுபாவம் - சத்தமின்றி
ஒத்துப்போ ! இல்லை உயிர்விடுவர்! சாதியெனும்
பித்தகற்று நண்பா பெயர்த்து

சுயமரியாதைப் புலவர் சுரேசுமுனியாண்டி .

.

நெஞ்சினில் கொண்டவனை நீக்கிவிடு இல்லையேல்
நஞ்சுண்டு சாவதாய் நும்பெற்றோர் - அஞ்சவைப்பார்
அஞ்சாதே ! தோழமைகள் ஆதரித்துச் சேர்த்துவைப்போம்
துஞ்சிடா நும்காதல் தூர்ந்து

மலர்மைந்தன் - கல்பாக்கம்

.

காதலித்த பெண்ணவளைக் கைசேரக் காத்திருக்க
பாதகமாய்ச் சாதிதனைப் பார்த்திடுவர்-ஆதலினால்
கத்திக் கதறிக் கனவெல்லாம் கண்விழித்துச்
சுத்தி அவளையே சேர்/

.

பா.இந்திரன்

.

ஆண்சாதி பெண்சாதி அப்பிறப்பு பூமியில்
பூண்டதால் சாதிப் பிரிவினைக்கு - வேண்டினார்
காத்திடுவோம் பேரன்பு காதலினை பெற்றோர்கள்
சாத்தட்டும் சாதி சழக்கு

பாவலர்மணி வா.சண்முகம்

.

நீயென்றும் நானென்றும் நிம்மதியாய் போனதெல்லாம்
தீயென்று சொல்லுவார் தீதொன்றை ஆயென்பார்
சேர்ந்துநீ வாழ்ந்துயரச் சேர்த்தணைப்பர் விட்டொழிப்பாய்
சேர்வதொன்றே சிந்தையில் நன்று

எழுத்தாளர் நாகா

.

கத்தியினைக் கைகாட்டிக் கத்திடுவர் பொற்றோர்தாம்
சொத்தில்லை சொந்தமிலை சொல்லிடுவர் - இத்தரையில்
சாதிமதம் இல்லையென்று சாற்றி மணமுடிப்பீர்
வீதியிலே அஞ்சாமல் நின்று !

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்.

.

சாதியென்பார் சாவமென்பார் தாலிகட்டி நீபிரிஞ்சா
நாதியுண்டோ நாளும் நமக்கென்பார் - ஆதிமுதல்
பேரன் பிறந்துவிட்டால் பின்னென்ன தோள்தூக்கிப்
பாரம் சுமப்பரடி பார்...

வள்ளி முத்து

.

சாதல் முடிவெலாம் சாதனை யாகாது
காதல் முடிவென்றால் கல்யாணம் ஆதலால்
மோதல் எளிதாய் முடிவுக்கு வாராது
ஆதலினால் வெல்லுமே அன்பு

கவியன்பன் கலாம்

.

இனம்வேறு என்றுசொல்லி இங்கேயுன் உள்ளம்
தனைநோக்கார் எண்ணித் தளராய்- மனம்விரும்பும்
காதலன் தன்னைநீ கைப்பிடித்து வாழ்ந்திடின்
வேதனை ஓடும் விரைந்து.

குளோரிசக்தி, கரூர்.

.

மனதைத் தகர்க்கும் மதங்களின் கூட்டால்
இனங்களின் வீழ்ச்சி இருக்கும்-தினமும்
புலம்புகிற மங்கையிவள் புன்னகை பூக்க
கலங்காமல் பற்று கரம்.

இரா .கவிதா, திண்டுக்கல்

.

சாதிப்பே யோடச் சமத்துவம் யாதென்று
போதிப்போம் உன்பெற்றோர் புத்திக்கு - சாதிக்கும்
வேளைவரை காத்திருந்தால் வெற்றிவரும் நிச்சயமே
நாளையிதை மாற்றிடுவோம் நம்பு

ஆனந்த் சுந்தரராமன்

.

சாதிமதஞ் சொல்லியே தத்தளிக்க விட்டுடுவர்
ஓதி  உணர்ந்தவரும் ஒன்றாகி - வாதிடுவர்
காதிலே வாங்காதே கண்மணியே கலங்காதே.
காதலே வெல்லும் கனிந்து

கவிஞர் சின்ன இளங்கோ கடலூர் தமிழ்நாடு

.

உயர்சாதிப் பெண்ணே உணர்ந்து நடப்பாய்
தயவான உன்றனின் தாயும்  -  தயங்கிடுவாள்
தூற்றும் சமூகம் துணிந்தவள் நீயில்லை
மாற்றிடு வாய்நீ மனம்

உடுவிலூர்க்கலா

.

காதலித்தப் பெண்ணோடு கைப்பிடித்  தோடியதும்
மோதலாகிச் சண்டை வெடித்திடும் ல் வேதனையில்
ஆணவம்   இங்கே  அரங்கேறும்  வேளையில்
நாணயமாய்  தாங்கிடும் நட்பு

கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.

.

சாதியள்ளி வச்சதெல்லாம் சண்டியரா சொல்லுமிங்க
பாதிக்கு பாதி பலசாதி மேதினியில்
ஊதித்தள் ஊர்வாய உஞ்சாதி பொஞ்சாதி
நீதியிது தாலிகட்டி நீக்கு

நலம் பயக்கும் மன்னை மணிமாறன்

.

பெற்றோரின் வேண்டுதல் பேரின்பம் பெற்றாலும்
நிற்கதியாய் விட்டுடாதே நீவிரும்பும்...உற்றவளை
கற்பனை செய்யாதே காதலில் சாதியினை
பெற்றவர் வாழ்த்திடப் பேணு...

ஜெ வசந்தி

.

உறவார்ப் பலகூறி உள்ளம் வதைப்பர்
திறம்பாதே நெஞ்சில் திரங்கொள் - உறவாய்
வருபவளின் சீலம் வகுத்தோதி நீயும்
மருமகளாய்ச் சேர்ப்பாய் மனை.

தமிழ்க்கீரன், ஈழநாடு

இஸ்துகினு பூடுவா டாவடிக்க வந்தவ
கஸ்மாலம் கண்றாவி என்றாலும் - விஸ்வாசம்
வெச்சவளை நீகைவுட்டுப் போகாமல் என்னன்பு
மச்சானே கட்டிடு தாலி.

மு.மதனகோபால், சென்னை

எதிர்த்திங்கு நிற்கின்ற தாயொடு தந்தை
உதிர்க்கின்ற வார்த்தைகள் கேட்டே- எதிர்காலம்
பாதிக்க நீவிடாதே இல்வாழ்க்கை இன்புறக்
காதல் கரம் பற்றிச் சேர்.

பெ ற்ற வர்க்கும் காதலென்றால் ஏனோ பிடிக்காது
மற்றவர்க்கும் ஏதும் புரியாது - குற்றமாம்
சாதலை விட்டுவிட்டு வாழ்வினில் சாதிக்க
காதல் மணம்புரி நீ.

காதல் கசக்குமே பெற்றவர் நெஞ்சில்
வேதனை இன்னும்தான் சேருமே - காதலைக்
காதலால் ஆதரித்துக் காதலியைக் கைப்பிடித்துக்
காதலை போற்று மச்சி..

மன்மதன் - ஒசூர்

.
என்னருமைத் தோழியே ஏற்றதுணை கண்டாயே!
உன்மனத்தை ஆள உரியவனாய்! - அன்னவனின்
சாதிபார்க்கும் பெற்றோர்க்குச் சாந்தமாய் நீயுரைத்து
ஆதிக்கம் தன்னை அடக்கு!

அடக்கு முறையாலே ஆழ்மனத்து ஆசை
விடவெண்ணும் போராட்டம் வீணே! - புடம்போட்ட
பொன்னாகிப் போகுமது! புண்ணாகும் உன்வாழ்வும்
உன்நிலை சொல்லி உணர்த்து!

உணர்வறியா சாதியென்று, உன்மத்தம் அஃதென்(று)
உணர்த்திடுவாய் உன்றனுள ஊற்றை! - பிணங்கிடும்
பெற்றோர் மனம்மாற பேசுவோம் வாநானும்
உற்றதுணை ஆவேன் உனக்கு!.

கோவை லிங்கா

# வெண்பாப் போட்டி (பயணம்) 38

போட்டியின் கால அளவு பிப்ரவரி 01 முதல் 12 வரை 2025

**இம்மாதப் போட்டி....**

.

நறுக்கென்று ஒரே ஒரு வெண்பாவால்
கடவுளிடம்
ஒரே ஒரு கேள்வி...
கேட்க வேண்டும்...
அந்தக் கேள்வியைக் கேட்டவுடன்
கடவுளே தலைகுனிந்து நிற்கும் படி இருக்க வேண்டும்...

- கடவுளே...
- இறைவா...
- தெய்வமே...
- ஆண்டவா...

இதில் ஏதாவது ஒரு தலைப்பை வெண்பாவிற்கு இட்டு எழுதவும்...
எளிமையான தலைப்பு என்பதால் இம்மாதம் எடுத்துக்காட்டு பாடல் வேண்டாம் என்று நினைக்கிறேன். நன்றி

.

**பொதுவான விதிகள்:**

ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.
வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

## அசத்துங்கள் கவிஞர்களே...

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.
காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

**தளர்வுகள் :**

தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது
வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

*என்றும் தமிழுடன்....*

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு
https://www.facebook.com/profile.php?id=100030084520602

# ஏலே இளங்குயிலே

கண்டாங்கிச் சேலைக் கட்டி போறவளே
ஓரக்கண்ணால மாமனைப்
பார்ப்பதென்ன மயிலே
ஒத்தையில போறியே
வழித்துணையா வரவா

மல்லிகைப்பூ வாசத்துல
கெறங்குதடி மனசுதான்
குறும்புப் பார்வையிலே
குறுகுறுக்குதே நெஞ்சுதானே
அத்தமக ரத்தினமே
அழகான சித்திரமே

நெதமும் ஒன்னோட
நெனப்புல வாழுறேன்டி
கூடையைச் சொமந்துகிட்டு
தூக்குவாளியோட போவதெங்கே
பசியோட நானிருக்கேன்
ஊட்டிவிட வருவாயா

குயிலாட்டம் பாடுறியே
மயிலாட்டம் ஆடுறியே
அந்திசாயும் வேளையில
கம்மாக்கரைக்கு வாபுள்ளே

ஒக்காந்து நாமதான்
ஆசைத்தீரப் பேசலாம்
ஏலே இளங்குயிலே
கண்ணே கட்டழகியே

அப்பன் ஆத்தா சம்மதம் வாங்குறேன்டி
மாலையைத்தான் மாத்திக்கிட்டு
மஞ்சத்தாலி கட்டுறேன்
ஓலைக் குடிசையில
ஆனந்தமா வாழலாம்

பிள்ளைகுட்டி பெத்துக்கலாம்
அறிவாளியா வளர்த்திடலாம்
ஊரோடு உறவாகி
ஒத்துமையா இருந்திடலாம்
கழனியில பாடுபாட்டு
வெவசாயத்தை காத்திடலாம்
ஆரோக்கியமா வாழ்ந்திடுவோம்
ஆண்டவன் தொணையிருப்பான்..

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்.**
விருதுநகர்





# ஆசை முகம் அழிவதில்லை?!

உன் மனசுல என்னடா நினைச்சுக்கிட்டு இருக்க?? உன்ன சின்ன வயசுல இருந்து தூக்கி வளர்த்தவடா?? அம்மாவுக்கு அம்மாவா, அக்காவுக்கு அக்காவா உனக்கு பாலூட்டி சோறூட்டி, சீராட்டி வளர்த்தவடா? உன்னால எனக்கும், அந்த மனுஷனுக்கும் எத்தனை தடவை சண்டை வந்து இருக்கு, அதையெல்லாம் மீறி உன்னை நல்லா படிக்க வச்சு, நல்ல வேலையும் வாங்கி கொடுத்து உன்ன உயர்வான இடத்துல வச்சதுக்கு அப்புறம் சொல்லுறது நல்லாவா இருக்கு?

உன் பொண்ணை கட்டிக்க மாட்டேன்னு இப்ப வந்து சொல்லுறியே, இந்த விஷயத்தை இப்ப அந்த மனுஷன் கேட்டான்னா என் முகத்துலேயே காறித் துப்புவானே?? உன் தம்பிய உசுரா வளர்த்ததுக்கு அவன் கொடுத்த கூலிய பார்த்தியான்னு அந்த மனுஷன் கேள்வி கேட்டா நான் என்ன பதில் சொல்லு வேன்டா? என்ன தான் கோபம் இருந்தாலும் என் புருஷன் அதான் உன் மாமன் உன்னை நல்லா தானடா பார்த்துக்கிட்டாரு. எந்த விஷயத்துலயாவது உனக்கு குறை வச்சிருப்பார்ன்னு குறை சொல்லு பார்ப்போம். என்ன தான் கோபக்கார மனுஷன்னாலும் நல்ல பாசக்கார மனுஷன்யா அவரு. ஊர் உலகம் கெட்டு கிடக்கு மரிக்கொழுந்து நம்ம புள்ளய உன் தம்பி சிவகண்ணனுக்கே கொடுத்திடலாம்னு ரொம்ப சந்தோசமா சொன்ன மனுஷன்யா. இப்ப வந்து சொல்லு உன் பொண்ண கட்டிக்க மாட்டேன்னு??

எங்க ஆசையெல்லாம் நிராசையா ஆக்கிட்டு என்ன பண்ண போறய்யா??

அக்கா என் உடம்புல இந்த உசுருன்னு ஒண்ணு ஓடுதுன்னுன்னா அது நீயும் மாமனும் போட்ட பிச்சை நான் பொறந்ததிலிருந்து அம்மாவையும், அப்பனையும் பார்த்ததில்லை நான் அம் மாவா உன்னையும், அப்பாவா மாமனையும் தானக்கா பார்த்து வளர்ந்தேன். நிலா போல, கோயில்ல கும்பிட கர்ப்பகிரக சாமி போல என் மனசுல நீதான் அக்கா நிறைஞ்சு இருக்க. இப்ப ஒரு வார்த்தை சொல்லுக்கா செத்து போடா நாயேன்னு அடுத்த நிமிஷமே என் அக்காவுக்காக செத்திடுவேன். உன்னையே அச்சு அசலா உரிச்சு வச்சு இருக்கா பவித்ரா, அவள பார்க்கும் போதெல்லாம் உன்னை பார்க்கிற மாதிரியே இருக்கு, அப்படி இருக்குறப்போ நான் வணங்குற சாமியின் முகத்தை ஒத்தவளை நான் எப்படிக்கா கல்யாணம் பண்ணுவேன்.

இந்த கட்டை மண்ணுக்குள்ள மக்கி போனாலும், தீயில வெந்து போனாலும் என் ஆன்மாவுல கடவுளா நிறைந்து இருக்குற என் அக்காவின் ஆசை முகம் ஒருபோதும் மறந்து போகாது என்றான். சிவக்கண்ணன் .

இதுவரை அங்கு நடந்தவற்றை சுவற்றுக்கு பின்னாடியிலிருந்து கேட்டு கொண்டிருந்த மாமனும், தன் தம்பியிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த மரிக்கொழுந்தும் தங்களையுமறியாமல் விதி செய்த சூழ்ச்சியால் அழுது கொண்டிருந்தனர் .

ஆசை முகம் மறந்து போவாது -

இதை யாரிடம் சொல்வேனடி கடவுளுக்கா?

நேச மறக்கவில்லை நெஞ்சம் -

எனில் நினைவு முகமறக்க லாகாது?

**நௌஷாத் கான் .லி**

# கவிமொழி

காற்று ஒலியைக் கடத்துவது போல்
கவிதையும் கடத்துகிறது
யாரையும் கேள்வி கேட்பதில்லை
அது பரிமாறுகிறது
சண்டையிடுவதோ சச்சரவு செய்வதோ
அதற்குத் தெரியாது
இயற்கையோடும் உணர்வுகளோடும்
அது சரணடைகிறது
அது எந்த தீர்வுகளையும்
யாரிடமும் கேட்பதில்லை
அது முழுமையிலிருந்து பிறக்கிறது
அது ஒரு ஊடகமாகிறது
புல்லாங்குழல் இசை போல்
ஊதுபவரின் சுகதுக்கத்தை
அது அப்படியே கடத்துகிறது!!!

**கி. கவியரசன்**
செங்கம், திருவண்ணாமலை





# எங்கே போகிறோம்?

அன்று ஆடி ஓடி விளையாடி
பாடி மகிழ்ந்த சிறுவர்கள்
இன்று ஓரிடத்தில் அமர்ந்து
ஆடாமல் அசையாமல்
கைபேசியுடன் சிரித்துப் பேசி
ஆரோக்கியம் திறமை மகிழ்ச்சி
அமைதி எல்லாம் நாளும்
இழந்து கொண்டிருக்கிறார்கள்!

அன்று ஆல மரத்தடியில்
வீட்டுத் திண்ணையில்
கோவில் வாசலில்
ஆடு புலி ஆட்டம்
இருவர் விளையாட
சிலர் சுற்றி அமர்ந்து
ரசிக்கும் கூட்டங்கள்!

இன்று ஊக்கப்படுத்த ஒருவரும்
பக்கத்தில் இல்லாமல்
ரசிப்பவர் யாரும் இன்றி
சதுரங்கம் கிரிக்கெட்
பல விளையாட்டுகள்
கைபேசியில் அவன்
ஒருவன் மட்டும் விளையாடி
தனிமையில் மகிழ்கின்றான்!

அன்று அப்பா அம்மா
அண்ணன் தம்பி
அக்கா தங்கை நண்பர்கள்
உற்றார் உறவினர்களுடன்
அவன் நாளும் பேசி மகிழ்ந்தான்!
இன்று அவன் கைபேசியுடன்
நாளும் பேசி மகிழ்கிறான்!

உள்ளங்கையில் உலகம்
உவகையுடன் கூறி இன்று
உள்ளம் மகிழ்கிறோம்!
கள்ளமின்றி பரந்து விரிந்த
நல்ல நமது உள்ளம்
சுருங்குவதை இன்று
நாம் நினைத்துப் பார்த்தால்
நாம் எங்கே போகிறோம்?

**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை, சென்னை







# Fatv London இல் 1000 ஏட்டிய குடும்பம் குவலயம்

**தமிழ்மணி நகுலா சிவநாதன் யேர்மனி**

காலச்சக்கரம் விரைவாகச் சுழல்கிறது. கண்ணிமைக்கும் நேரத்தில் நொடிப் பொழுதுகளும் மறைகின்றன. இந்த வாழ்க்கைச்சுழற்சியில் நாம் இயங்கவேண்டும் என இயற்கை சொல்லி வைக்கிறது.

வாழ்க்கையில் பல படிகளை தாண்டுவது கடினம்தான். ஆனால் ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு உழைப்புதான்.

30 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் இலண்டன் தமிழ் வானொலியில் 19.01.2005 இல் தொடங்கித பாமுகம் வரை தொடர்ந்த நிகழ்வாக குடும்பம் குவலயம் நகர்ந்தது.

வானலைத் தடத்திலே 30 வருடங்களாக கவிதையிலும் இலக்கியத்திலும் தொடர்ந்த எனது பாதை குடும்பம் குவலய தொகுப்பிலே புதிய பரிணாமத்தை நோக்கி அடியெடுத்து வைத்தது.

ஆரம்பத்திலும் சறுக்கல்கள் மனத் தடைகள் இருந்தாலும் காலம் செல்ல தன்னம்பிக்கையும் பலமும் நம்பிக்கை ஊட்டி நிகழ்வினை சிறப்பாகச் செய்ய முடிந்தது

நல்ல விதைகள் விதைப்பது நாளைய நல்வாழ்வுக்கு உரமாக அமையும். காலம் செல்ல ஆற்றலும் ஆளுமைகளும் புதிய திருப்பத்தை தந்தன. இன்னும் சொல்லப்போனால் எதிர்கால சந்ததிகள் நலனில் அக்கறையும் ஆராய்வும் அதிகரித்தன.



‘வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத் தனையது உயர்வு.”

நீர்ப்பூக்களின் தண்டின் நீளமானது நீரின் ஆழத்தின் அளவினதாகும். அதுபோல மக்களின் உயர்வும் அவர்களுடைய ஊக்கத்தின் அளவேயாகும் என்ற வளளுவர் வரிகள் ஒரு ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளித்தது.

கடந்த இருபது வருடங்களாக பல்வேறு தலைப்புகளினூடே குடும்பம் குவலயத்தை நடாத்தி வருகிறேன்.

குடும்பப்பிரச்சனை பிள்ளைகளின் வளர்ப்புமுறை கல்விமுறை போன்ற விடயங்களி னூடாக விரிகின்ற பரப்பாக குடும்பம் குவலயம் பயணிக்கிறது.

1000 தலைப்புகள் அற்புதமாய் எடுத்து சாலவும் பொருந்தும் தீர்வுகளை நோக்கி இபயணப்பட்டதை எண்ணி மகிழ்கிறேன்.

இந்த நிகழ்வினூடாக பல விழிப்புணர்வான கருத்துக்களை பெற்றதை பலரும் பகிரும் போது மனதில் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. குமுகாய நல்ல கருத்துகள் பலருக்கு திருப்பங்களாக அமைகின்றன. அதனால் காணுமிடத்தில் பலர் பாராட்டியும் உள்ளனர். அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை தெரிவிக்கிறேன்.

வாழ்க்கையின் ஒவ்வொரு தேடலும் ஒவ்வொரு அனுபவத்தை தந்தே நிற்கிறது. அந்த வகையில் ஆரம்பித்த குடும்பம் குவலயம் இன்று 1000ஐ எட்டி ஒரு படிக்கல்லாக அமைகிறது. காலம் சிலவற்றை காத்திரமாகக் காட்டி நிற்கும். இலக்கு குறிக்கோள் சமுதாயநலன் ஒவ்வொரு மனிதருக்கும் தேவையானவை. அந்த வகையில் எமது அடுத்த சந்ததிகள் ஐரோப்பிய மண்ணில் வளமோடும் நலமோடும் வாழ பெற்றோர்கள் எவ்வளவோ உந்து சக்தியைக் கொடுத்தே ஆகவேண்டும். என்ற நல்லெண்ணத்தில் உருவாக்கப்பட்டது இந்த குடும்பம் குவலயம்.

இந்தச்சூழல் பல வசதிகளை எம்முன் காட்டினாலும் தமிழின பண்பாட்டையும் இகலாசாரத்தையும் பேணி வாழப் படாதபாடு பட்டே ஆகவேண்டும். அப்படி தாய்மொழியையும் பண்பாடுகளையும் ஊட்டி வளர்ப்பதில் பல இடையூறுகள் பெற்றோர்களுக்கு இருப்பது உண்மை.

வேற்று கலாசார சூழல் காலநிலை மொழி அத்தனையிலும் சிக்கிய இனமாக முதல் பெயர்வுச் சமூகம் இருந்தது உண்மை. மொழிக்கும் வாழ்க்கைக்குள்ளும் சிக்குண்டு வாழும் இனங்களின் வாழ்வியல் சூழலை பல்வேறு தலைப்புகள் ஊடே கொண்டு வந்துகருத்தாய்வு செய்து தீர்வுகளை நோக்கியஇ நல்ல முடிபுகளை எடுக்க வைக்கும் சிறந்த பணியை செய்ததில் ஒரு திருப்தியும் உண்டு.

மாணவர்களிடையே காணப்படும் பிரச்சனைகளை ஆராய்ந்து எதிர்கால சிறார்களின் வாழ்வியலை ஒளிமயமானதாக ஆக்குவதற்கான பல தெறிப்பான பிரச்சனைகளை சுமூகமாக ஆராய்ந்ததில் குடும்பம் குவலயம் வெற்றிப் பாதையில் நகர்ந்திருக்கிறது.

இளம்பெற்றோர்கள் இவற்றைக் கேட்டு நல்ல முடிபுகளை எடுத்ததும் அதே நேரம்வாழ்வியலின் சிக்கலை அறிந்து கொள்ள வாய்ப்பான களங்களாகவும் மாறியதை அவர்கள் வாயால் சொல்லும் போது மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

ஆகவே குடும்பம் குவலயம் நீண்ட பாதையை தனக்கென அமைத்து வீறுநடை போட்டு வெற்றியின் சிகரமாக 1000 எண்ணைத் தொட்டிருக்கிறது.

பல சிறப்பு விருந்தினர்களை அழைத்து நேர்காணல் செய்ததும் துறை சார்பான விடயங்களை ஆராய்ந்து பல நல்ல விடயங்ளை வெளிக்கொணர்ந்ததில் மட்டில்லா மகிழ்வும் அடைகிறேன்.

தலைப்புகளுக்குப் பொருத்தமாக துறை சார்ந்த வல்லுனர்களையும் இகல்வி மான்களையும் இத்தளத்தில் அறிமுகமாக்கி நல்ல கருத்துக்களை சுழலவிட்டதையும் நினைத்துப் பார்க்கிறேன்

அவையும் பயனாகின. பெற்றோர்கள் ஆர்வத்துடன் இவற்றைக் கேட்டு மகிழ்ந்தனர். இதில் இணைந்த அத்தனை உறவுகளுக்கும் இதயத்து நன்றிதனைத் தெரிவிக்கிறேன்.

விடா முயற்சியும் தன்னம்பிக்கையும் எப்போதும் வீண் போகாது. அது நாற்றாக செழித்து விருட்சமாக வளர்ந்து நிற்கும்

இந்த நிகழ்வை பாமுகப்பரப்பினாடாக பயணிக்க வைத்த அதிபர் நடாமோகன் வாணி மோகன் இருவருக்கு இதயத்து நன்றியைத் தெரிவிக்கிறேன். விருந்தினர்களாக பலர் இணைந்து சிறப்பித்தமைக்கும் நன்றி.

பல சறுக்கல்கள்; அவமானங்கள் இடையூறுகள் எமை தாக்கினாலும் அவற்றை யெல்லாம் தாங்கி இந்த நிகழ்வை தொடர்ந்து செய்ததில் மனநிறைவு கிடைத்தது.

”தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்” எனும் வள்ளுவன் வாக்குப்படி என் 20 வருடப்பணி இதமாய் நிறைத்து வைத்ததில் மனநிறைவடைகிறேன். வானொலி என்பது பொழுது போக்குக்கின்றி வாழ்க்கையின் படைப்பாக மாறியுள்ளது. வரலாறு ஒருமுறை தன்னைத் திரும்பிப் பார்க்க வைத்தது. இதுவும் ஒரு பொற்காலம்தான்.

# மனச்சுமையை இறக்கி வைக்கும் மழை

மனச்சுமையை
இறக்கி வைக்க
எங்கும் செல்ல
வேண்டியதில்லை...
வீட்டினிலுள்ள
குடும்ப உறவுகளோடு
கூடிப் பேசினாலே
போதுமாம்!

வாய்ப்பை
ஏற்படுத்தித் தந்துவிட்டு
வாசலுக்கு
வெளியே நின்று
வேடிக்கைப் பார்க்கிறது
தொடர்ந்து
தூறிக்கொண்டேயிருக்கும்
சாரல்மழை..!

**பாக்யபாரதி** - தருமபுரி



# அறிவு மங்கை ஒருவரை அறிமுகம் செய்கிறேன்...



இதுவரை
ஆங்கிலத்திலிருந்து
100 உலக நூல்களைத்
தமிழுக்கு மொழிபெயர்த்த
தகைசான்ற பெண்

யுவால் நோவா ஹராரியின்
‘சேப்பியன்ஸ்’
இவர் மொழிபெயர்ப்புதான்;
ஸ்டீபன் ஹாக்கிங்ஸின்
‘காலத்தின் மிகச்
சுருக்கமான வரலாறு’
இவர் மூளைக்குப் பிறந்த
குழந்தைதான்

பாலோ கொயலோ,
ஆனந்த் நீலகண்டன்,
ஸ்பென்சர் ஜான்சன்,
கேரி சேப்மேன் முதலிய
உலகப் படைப்பாளர்களைத்
தமிழ்பேசவைத்தவர் இவர்தான்

ஆங்கிலத்திலிருந்து
100நூல்களைத் தமிழில்
மொழிபெயர்த்திருக்கும் இவர்
தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு
மொழிபெயர்த்த ஒரே நூல்
‘கள்ளிக்காட்டு இதிகாசம்’

Oxford University Press
அதை விரைவில்
வெளியிடவிருக்கிறது

வெளிநாடுகளில் வாழ்ந்து
இன்று
மும்பையில் குடியிருக்கும்
தென்காசித் தமிழச்சி இவர்

பெருங்கலைஞர்
அவ்வை சண்முகத்தின்
குடும்பவழிப் பெயர்த்தி

மொழிபெயர்ப்பாளர்
குமாரசாமியின் மனைவி

அறிவுலகம்
கொண்டாட வேண்டிய
கொள்ளை அறிவாளி இவர்

மொழிபெயர்ப்புக் கலை
எந்திரங்களின் கைகளுக்கு
இடம்மாறப் போகிறது

எந்திரங்களின் ஈரமற்ற
மொழிபெயர்ப்புகளுக்கு
மத்தியில்
இதயமுள்ள
மொழிபெயர்ப்புகளுக்காகப்
பேசப்படுவார்

**நாகலட்சுமி சண்முகம்**

# வார்த்தை



வார்த்தை
இது வெறும்
வார்த்தை அல்ல..

வார்த்தை
என்பது
அழகான
சொல்.

வார்த்தை
இது தான்
வாழ்க்கை.

வார்த்தை
இனிதானால்,
வாழ்க்கையும்
இனிக்கும்.

வார்த்தை
கசந்தால்,
வாழ்க்கையும்
கசக்க தான்
செய்யும்.

வார்த்தை
ஒரு முறை
வந்து விட்டால்
திரும்ப பெற
முடியாது...

வார்த்தையில்
கவனம் தேவை..

அழகிய வார்த்தையே நம்மையும் ,
வாழ்வையும் அழகாக்கும்.

**மணிராம் கார்த்திக்**
மேல அனுப்பனடி,
மதுரை - 625009



# தன்முனைக் கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் (13)

தன்முனை கவிதை மற்றும் அதன் வகைமையில் பல நூல்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் இன்றையக் காலகட்டத்தில்இ ஜனவரி 2025 வரையில் வெளியான நூல்களில் ல்முதல் நூல்ல் என்னும் சிறப்புக்குரிய நூல்களின் பட்டியலை இப்போது காண்போம்.




**அன்பு செல்வி சுப்புராஜூ**
தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை
பட்டாபிராம், சென்னை


தனியொருவர் எழுதியது
குழந்தை வரைந்த ஓவியம்
ஓவியா பதிப்பகம் (அக்டோபர் 2018)
இளவல் ஹரிஹரன்

பெண் எழுதி வெளியானது
சுவரோரச் செம்பருத்தி
இராகம் பதிப்பகம் (மார்ச் 2019)
காரை இரா.மேகலா

அயலகக் கவிஞர் (இலங்கை) எழுதி
வெளிவந்த முதல் நூல்
வானும் மண்ணும் நம் வசமே
தமிழ்நெஞ்சம் பதிப்பகம் (கஸ்ட் 2020)
நஸீரா எஸ் ஆப்தீன்

குழந்தைகள் குறித்து தனியொருவர் எழுதிய நூல்
சிறுகை அளாவிய கூழ்
நூலேணி பதிப்பகம் (2021)
கன்னிக்கோவில் இராஜா

(பதினாறுவயதிற்குட்பட்ட குழந்தை களில்)
குழந்தை எழுதிய நூல்
சிறுகை முகிழ்த்த அரும்புகள்
அன்பின் சங்கமம் ( 2022)
சு.பிரவந்திகா

அமெரிக்காவில் வெளியான நூல்
'அவளின் நாட்குறிப்பேடு'
நூலேணி பதிப்பகம் (2021)
நெல்லை அன்புடன் ஆனந்தி

'தன்முனைக் கவிதையில் திருக்குறள்
குறுங்கவியில் குறள் விளக்கம்
மஞ்சிகை பதிப்பகம் (மே 2023)
சந்திரனார்

'தன்முனையியையு நூல்
(பாண்டிச்சேரி)
மின்மினிக் கங்குகள்
விழிச்சுடர் பதிப்பகம் (2023)
கலைமாமணி முனைவர் ஔவை நிர்மலா

தமிழி நூல்
தன்முனைத் தமிழி
நூலேணி பதிப்பகம் (நவம்பர் 2023)
நெல்லை அன்புடன் ஆனந்தி
மொழிபெயர்ப்பு: கன்னிக்கோவில் இராஜா

தன்முனைக் கவிச்சாரல்
கதை கதைக்கும் கவிதைகள்
( இருமொழி நூல்)
நண்பர்கள் பதிப்பகம் ( பிப்ரவரி 2024)
முனைவர் சிவகாமசுந்தரி நாகமணி
இருமொழி நூல்
காணாமல் போன காய்ச்சல்
நூலேணி பதிப்பகம் ( 2024)
முனைவர் சிவகாமசுந்தரி நாகமணி

தன்முனையியைபில் திருக்குறள்
ல்தன்முனையியைபில் குறளமுதம்ல்
நூல்வயல் பதிப்பகம் ( மார்ச் 2024)
திருக்குறள் செல்வி. ஈரோடு இரா.இராஜாமணி
திருமதி இரா.இராஜாமணி

இராமாயணம்
வில்முனையில் தன்முனை
புஸ்தகாஇ (2024)
முனைவர் சிவகாமசுந்தரி நாகமணி

பாரதிதாசனின் இளையோர் ஆத்தி சூடி - நீந்தப் பழகு
நூலேணி பதிப்பகம் ( ஜனவரி 2025)
சிரா.செல்வகுமார்

பாரதியார் ஆத்திசூடி
சூரரைப் போற்று
நூலேணி பதிப்பகம் (ஜனவரி 2025)
நெல்லை அன்புடன் ஆனந்தி

தொகுப்பு நூல்களில் முதல் நூல்கள்
நான்...நீ... இந்த உலகம்
ஓவியா பதிப்பகம் (ஜூன் 2018)
தொகுப்பாசிரியர்: கவிச்சுடர் க.நா. கல்யாணசுந்தரம்

அயல்நாட்டில் (அங்கோர்வாட், கம்போடியா) வெளியான தொகுப்பு நூல்
வானம் தொடும் வண்ணத்துப் பூச்சிகள்
ஓவியா பதிப்பகம் ( நவம்பர் 2019)
தொகுப்பாசிரியர்:
கா.ந. கல்யாணசுந்தரம்

பெண் கவிஞர்கள் எழுதிய தொகுப்பு நூல்

மகரந்தம் தூவும் மலர்கள்
நிவேதிதா பதிப்பகம் ( 2020)
தொகுப்பாசிரியர்: அன்புச்செல்வி சுப்புராஜு

இணையவழியில் மூன்று மணி நேரத்தில் நிகழ்த்தப் பட்டல் ஆல் இண்டியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்ல் உலகசாதனை புரிந்த தொகுப்பு நூல்
மலர்கள் தீட்டிய வரைவுகள்ல்
நூலேணி பதிப்பகம் ( மார்ச் 2021)
தொகுப்பாசிரியர்: அன்புச்செல்வி சுப்புராஜு

மழலையர் குறித்த தன்முனைக் கவிதை நூல்
இங்காவின் ஆலாபனைகள்ல்
நூலேணி பதிப்பகம் ( நவம்பர் 7இ 2021)
தொகுப்பாசிரியர்கள்: அன்புச்செல்வி சுப்புராஜு
கன்னிக்கோவில் இராஜா

16 வயதிற்குட்பட்ட குழந்தைகள் எழுதிய தன்முனைக் கவிதைகள் தொகுப்பு நூல்
அல் ஷ அன்பின் அரிச்சுவடி
நிவேதிதா பதிப்பகம் (2022)
தொகுப்பாசிரியர்: அன்புச்செல்வி சுப்புராஜு

தமிழ், ஆங்கிலம், கன்னடம் மும்மொழி யில் வெளியான ஆய்வு நூல்
எப்படியாவது சாவியைத் தொலைத் தாக வேண்டும்
அகநி பதிப்பகம் ( ஆகஸ்ட் 2023)
பகுப்பாய்வாளர்: முனைவர் வே. புகழேந்தி

தன்முனையியைபுக் கவிதையில் முதல் தொகுப்பு நூல்
தன்முனையியைபுக் கவிதைகள்
அன்பின் சங்கமம் ( நவம்பர் 2023)
தொகுப்பாசிரியர்: அன்புச்செல்வி சுப்புராஜு

தன்முனைக் கவிச்சாரல்
தன்முனைக் கவிச்சாரல்
நூலேணி பதிப்பகம் ( ஜனவரி 2025)

தொகுப்பாசிரியர்கள்: அன்புச்செல்வி சுப்புராஜு ராஜு ஆரோக்கியசாமி

தன்முனைக் கவிதை எழுதிய கவிஞர்களின் அனுபவக் கட்டுரை நூல்
எளிய தன்முனை எனக்குக் கொடுப்பினை
அன்பின் சங்கமம் (ஜனவரி 2025)
தொகுப்பாசிரியர்கள்: அன்புச்செல்வி சுப்புராஜு ராஜு ஆரோக்கியசாமி

ஜனவரி 2025 வரை தன்முனைக் கவிதை மற்றும் கிளை வடிவங்களில் நூல்க ளில் வெளிவந்த நூல்களில் 'முதல்' என்னும் சிறப்புக்குரிய நூல்களை நான றிந்த வரையில் பதிவிட்டு உள்ளேன். தன் முனைக் கவிதை வகைமை தோன்றிய 2017 இல் இருந்து இன்று வரை பலக் கிளை வடிவங்கள் உருவாகிக் கொண்டே உள்ளன. இதுநாள் வரையிலும் கிட்டத் தட்ட 75 புத்தகங்களுக்கும் மேல் வெளி வந்துள்ள சூழலில் இன்னும் இன்னுமாக பல நூல்கள் அச்சில் உள்ளது பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

முகநூல் குழுமங்கள் பலவற்றிலும் தன்முனைக் கவிதை அதன் வகைமைக ளுக்கெனப் போட்டிகளும், கவியரங் கங்களும் நடந்து வருவது இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது. பத்திரிக்கைகள், இலக்கிய இதழ்கள் மற்றும் மின்னிதழ்களும் தன்முனைக் கவிதைஃ கிளைவடிவங்களை வெளியிட்டு வெளிச்சத் தூண்களாக ஒளியூட்டுகிறன. நூலேணி பதிப்பகம் தன் முனைக் கவி தைகளின் தந்தை கவிச்சுடர் கா.ந. கல்யா ணசுந்தரம் ஐயா அவர்களின் எழுபதாவது பிறந்தநாளினையொட்டி 'தன்முனைத் திருவிழா' தொடங்கி பெருங் கொண்டாட்டமாக நடத்தவிருப்பது தன் முனைக் கவிதை உலகின் சிறந்ததொரு மைல்கல் எனக் கொள்ளலாம். தொடர்ந்து முனைப்போடு வளர்ந்து வரும் 'தன் முனைக் கவிதை' இன்னுமின்னுமாக பலக் கிளை வடிவங்களுடன் வளர்ந்து வரும் படைப்பாளர்களின் கரங்களில் புதுப் பொலிவுடன் மிளிர்ந்து தமிழ் இலக்கிய உலகில் தனக்கெனத் தனித்ததொரு இடம் பெறும் என்பது திண்ணம்.

'தன்முனைக் கவிதை தோற்றமும் வளர்ச்சியும்' தலைப்பில் தொடர்ந்து 13 வாரங்கள் கட்டுரை எழுத வாய்ப்பளித்த 'தமிழ்நெஞ்சம் இதழுக்கும், ஆசிரியர் தமிழ் நெஞ்சம் அமின் ஐயா அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைக் கூறி நிறைவு செய்கிறேன். நன்றி



# பூ பூத்திருச்சு



ரோசாப்பூ பூத்திருச்சி
அம்மாவுக்கு கொடுத்தேன்
மல்லிகைப்பூ பூத்திருச்சி
அக்காவுக்கு கொடுத்தேன்
கனகாம்பரம் பூத்திருச்சி
தோழியருக்கு கொடுத்தேன்
அரளிப்பூ பூத்திருச்சி
ஆலயத்துக்கு கொடுத்தேன்
மூக்குத்திப்பூ பூத்திருச்சி
மூக்கில் ஒட்டிக் கொண்டேன்.


**எழிலி ÷ ச. ஞா. எழிலரசி,**
2ஆம் வகுப்பு-தமிழ் வழி,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
கடம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்,
தமிழ்நாடு.




# சிறுவர் சங்கமம்





கா.கிருத்திகா





நிரஞ்சனா, செஞ்சி

எட்டாம் வகுப்பு





M.S. கார்த்திகா

எட்டாம் வகுப்பு

மணிமேகலை மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி

மதுரை- 625 009



**விஸ்வஜித்,**

5 ம் வகுப்பு, ஆஸ்திரேலியா





**பெயர்: இ.பா. மஹதி**

கோவை - வகுப்பு: 5





**இ ர.ஆதிராஸ்ரீ,**

காஞ்சிபுரம்

# சின்ன சின்ன எறும்பு

சின்ன சின்ன எறும்பே
சின்ன சின்ன எறும்பே
எனது அருகில்  நீயும் வருவாயா
கடிக்காமல்  எனது பாடல் கேட்பாயா

சேமிப்பும் சுறுசுறுப்பும்
உலகம் அறிந்த சிறப்புகள்
பலரும் அறியாத பண்புகள்
நானும் எடுத்துச் சொல்லவா

ராணிக்கென்று   ஓர் அறை
மற்ற எறும்புகளுக்குத் தனியறை
கழிவறை சமையலறை
உனது புற்றில் இருக்கின்றதாம்

உன்னை விடப் பல மடங்கு
எடையும் நீயும் சுமப்பாயே
சுவையான நிலத்தடி நீர்
இருப்பிடம் நீயும் சொல்வாயே

உனது முட்டைகளைத்
தூக்கிக் கொண்டு
வீட்டிற்குள் நீயும் வந்தாலே
மழைக்காலம் வந்திடுமாம்

சுவற்றில் நீயும் ஏறினால்
வெள்ளம் வரவும் வாய்ப்புண்டாம்
உன்னைக் கூர்ந்து நோக்கியே
முன்னோர்கள் அறிந்து கொண்டனரே

எங்களைப் பற்றி நீ சொன்ன
சிறப்புகள் எல்லாம் சரியே
எனது வேண்டுகோள் ஒன்றையும்
பாட்டில் நீயும் சேர்ப்பாயா

கண்டதும் நசுக்கிக் கொள்ள வேண்டாம்
உயிர்க்கொல்லி மருந்துகள் வீச வேண்டாம்
அன்புடன் அழகாய் வழி விட்டாலே
நகர்ந்து சென்று நாங்களும்
வாழ்ந்திடுவோம்

தங்கப் பிள்ளைகள் எங்கள் குழந்தைகள்
உனது வேண்டுகோளை ஏற்றோமே
எறும்புகளை இனி கொல்ல  மாட்டோம்
இனிப்புகள் தந்து கொண்டாடுவோம்



ஜனனி குமார்
நாகப்பட்டினம்



# வண்ண வண்ண தியா மீன்




**ஜீ.மைத்ரேயி - வந்தவாசி**

நீரின் அரசி என நம் அனைவராலும் செல்லமாக அழைக்கப்படும் வகையை சேர்ந்தவைதான் மீன்கள். கடல் மீன், ஆற்றுமீன், கிணற்று மீன் என வகை வகையாக வெவ்வேறு பெயர்களிலும் வாழ்ந்து வருகின்றன.

பல வகைகள் மட்டுமில்லாமல் பல வண்ணங்களிலும் காணப்படுகிறது. நமது வீட்டில் குடுவையில், சின்னச் சின்ன தொட்டியிலும் குழந்தைகளுக்குப் பிடித்த நிறத்தில் வளர்ந்து நட்புடனும், பாசத்துடனும் வாழ்கின்றன.

'நாம் எப்போது உலகின் பெரிய கடற்கரையான மெரினா பீச்சில் உள்ள மீன்களை பார்க்கலாம்?' எனக் கயல் தன் வசந்தி அத்தையைக் கேட்டாள்.

'சரிசரி, மாலை நேரத்தில் நிறைய கூட்டம் இருக்கும். காலை நேரத்தில் நடை பயணம் செய்பவர், உடற்பயிற்சி செய்பவர், சூரியன் உதிக்கும் அழகை பார்க்கவே ஒரு கூட்டம் இருக்கும். நாமும் அந்த நேரத்தில் போகலாம்ல் எனச் சொல்லினார். அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை கயலுக்கு மீன்களைப் பற்றிய சிந்தனை ஓடியது.

எவ்வளவு மீன் இருக்கும், நம்மால் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியுமா? மீன்களுக்கு உணவாக எதை கொடுக்கலாம்? என யோசித்துக் கொண்டே இருந்தாள்.

வசந்தியிடம் நொய்நொய் எனப் பலக் கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தாள். வெகு நேரம் தூங்காமல் இருந்து, நடு இரவுக்குப் பின்பு தான் தூங்கினாள். அவ்வளவு மகிழ்ச்சி கயலுக்கு... அதிகாலையில் எழுந்து, விரைவில் ரெடியாகி அத்தை வேகமாக வண்டி ஓட்டுங்கள் எனச் சொன்ன அவள் குரலில் மகிழ்ச்சி தெரிந்தது.

கடற்கரைக்கு சென்றவுடன் கயலின் முகம் மாறியது,மகிழ்ச்சி குறைந்தது. ஏன் என அத்தை கேட்டதும் "இவ்வளவு குப்பைகள் இருந்தால், எப்படி மீன்கள் வரும்... என்னுடன் விளையாடும்" எனக் கவலையுற்று கூறினாள்.

'சரி சரி, வா... அங்கே போய் கடல் அலையில் விளையாடிவிட்டு வரலாம்' என்றதும் 'இல்லையில்லை, நான் இங்கு இருக்கும் நெகிழி டப்பாக்களையும், பேப்பர் துண்டுகளையும் அகற்றப் போறேன்' என்றாள். அத்தை அதைக்



கேட்டு ‘நீ எல்லாம் செய்யக்கூடாது. வா வீட்டுக்குப் போகலாம்’ என்றாள் .

‘இல்லையில்லை, நாம் தினமும் காலையில் வந்து ஒரு மணி நேரம் கடலைத் தூய்மை செய்ய வேண்டும்’ என்றாள்

‘இல்லை, வா நேரமாகிறது’ அத்தை அழைப்பை காதில் வாங்காமல் அவளின் சின்னக் கைகளால் குப்பைகளை எடுக்கத் தொடங்கினாள்.

ஏனென்று மற்றவர்கள் கேட்டதற்கு ‘நாம் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது, நம்மைச் சுற்றியுள்ள இடத் தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். பேச்சு மட்டும் இல்லாமல் செயலில் செய்ய வேண்டும் என என் அப்பா, தாத்தா அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார்கள்ல் என்றாள்.

இதைக் கேட்ட உடன் சிறு குழந்தை செய்யும்போது நாம் தினமும் நடைப் பயிற்சி செய்யும் இடம் என அனைவரும் சுத்தமாக்க தொடங்கி னார்கள். தினமும் பணியின் காரணமாக செய்ய முடியாது .விடுமுறை நாளில் ஒன்று சேர்ந்து தூய்மை செய்யலாம் என அனைவரும் கூறினார்கள்.

கயலுக்கு மகிழ்ச்சி. கடற்கரை சுத்தம் செய்ய தொடங்கினாள். சில நாளில் கடற்கரை ஒரத்திற்கு மீன்கள், நண்டுகள், சங்கு என விளையாடத் தொடங்கியன.அதில் சிவப்பு நிறத்தில் உள்ள மீனுக்கு மீதியாமீ என பெயர் வைத்து நட்புடன் விளையாடத் தொடங்கினாள் கயல்.

சுத்தமான காற்று வந்தால் கயலுக்கு தியாவின் நினைவு தான் வருகிறது. அப்போது எல்லாம் கடற்கரைக்குச் சென்று தியாவுடன் தன் நேரத்தைப் பயன் படுத்துவாள்.

நம்மால் முடிந்தவரை அனைத்து இடத்திலும் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும் எனக் கடற்கரைக்கு வருப வர்கள் அனைவரும் உறுதி எடுத்துக் கொண்டனர்.

# மந்திர சங்கிலி

பத்தாம் வகுப்பு படிக்கும் தயாளனுக்கு இயற்கையின் மீது ஆர்வம் அதிகம். அன்றைக்கு விழுப்புரம் பக்கத்துல இருக்கிற காடுகளில் விலங்குகள், பறவைகள் குறித்து ஆராய்ச்சி பண்ணிட்டு இருந்தான். வித்தியாசமான பறவைகள் என்னென்ன புதிதாக வந்திருக்கிறது, பறவைகள் மற்றும் விலங்குகளோட பழக்கவழக்கங்கள் என்னன்னு சுற்றிப் பார்த்துக் கொண்டு இருந்தான். அப்படி நடந்து போற வழியில ஒரு சங்கிலி கிடந்தது. சங்கிலியில் கோர்த்திருந்த டாலரின் நடுவில் கல் பதித்து இருந்தது பார்க்க அழகாக இருந்தது. சங்கிலியை எடுத்துத் தனது கழுத்தில் போட்டுக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டான் தயாளன்.

சிறிது நாட்கள் கழித்து தயாளன் அருகில் இருந்த ஒரு மிருகக்காட்சி சாலைக்கு சுற்றிப் பார்க்கச் சென்றான். அங்கு விலங்குகள் பேசுவது அவனுக்குப் புரிந்தது. விலங்குகளின் மொழி நமக்கு எப்படித் தெரியும்? இது ஏதோ பிரமையாக இருக்கும் என்று அவன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

நண்பகல் ஆனது. ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு வந்த உணவைச் சாப்பிடத் தொடங்கினான். அப்பொழுது அவனுக்கு அருகில் வந்த ஒரு காட்டுப் பூனை அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. சாப்பிடும் உணவில் சிறிது எடுத்து ஒரு இலையில் வைத்து 'உனக்குப் பசிக்கிறதா... சாப்பிடு' என்றான் .



அதற்கு அந்தக் காட்டுப்பூனை 'இல்லை எனக்கு உணவு வேண்டாம், என் அம்மாவை இங்கு கொண்டு வந்து கூண்டில் அடைத்து வைத்துள்ளார்கள். அவர்களை விடு வித்துத்தா' என்றது. தயா ளனுக்கு ஒரே ஆச்சரியமாகிப் போனது. இந்தப் பூனை பேசுவது நமக்கு எப்படி புரிகிறது

சிந்தனையில் ஆழ்ந்தான்.

அப்போது கழுத்தில் எதுவோ ஊர்வது போல இருக்கவும், சங்கிலியைக் கழற்றிப் பையில் போட்டுவிட்டு, பக்கத்தில் இருந்த ஓய்வறையில் முகம், கை, கால் கழுவிய பின் மீண்டும் சுற்றிப் பார்க்கத் தொடங்கினான். இப்போது விலங்குகள் பேசுவது அவனுக்குக் கேட்கவில்லை. சிறிது நேரத்தில் மீண்டும் சங்கிலியைக் கழுத்தில் போடவும், விலங்குகள் பேசுவது அவனுக்குக் கேட்டது. அப்போதுதான் அவனுக்கு அந்த மாயச்சங்கிலியை அணிவதாலேயே அனைத்தும் கேட்கிறது என்கிற விசயம் புரிந்தது.

அங்கிருந்த விலங்குகள் மிகவும் சோகத்தோடு தங்களுக்குள்ளேயே பேசிக் கொள்வதைக் கவனித்த தயாளன் ‘என்ன ஆச்சு‘ என்று கேட்டான். உடனே அங்கிருந்த கரடி ‘நாங்கள் பேசுவது உங்களுக்குக் கேட்கிறதா...? ‘ஆச்சரியமாக கேட்டது.

‘ஆமாம், நான் அணிந்திருக்கும் இந்த மாயச் சங்கிலியின் உதவியால் நீங்கள் அனைவரும் பேசுவது எனக்கு நன்றாகவே கேட்கிறது’ என்றான் தயாளன். கூண்டின் கம்பிகளைத் தட்டி மகிழ்ச்சியை தெரிவித்தன விலங்குகள்.

‘என்ன பிரச்சனை... என்னிடம் சொல்லுங்கள்’ தயாளன் கேட்கவும் ‘நாங்கள் ஒரு பெரிய காட்டில் வாழ்ந்து கொண்டு இருந்தோம். எங்கள் காட்டினை அழித்து மக்கள் வாழத் தொடங்கினார்கள். நாங்கள் வசிப்பதற்கு இடமில்லாமல் ஓரமாக ஒதுங்கி வாழ்ந்து வந்தோம். எங்கள் குழந்தைகள் அவ்வப்பொழுது வீடுகள் இருக்கும் பகுதிக்குச் சென்று விளையாடுவார்கள். ஆதனால் கோபம் கொண்ட மக்கள் புகார் தெரிவிக்கவும் எங்களைப் பிடித்து இங்கே கொண்டு வந்து விட்டார்கள். இந்தக் கூண்டுக்குள் வாழ்வது எங்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. சுதந்திரமாக மரங்களில், காடுகளில் சுற்றி எங்களுக்குக் கிடைத்த உணவைச் சாப்பிட்டு வந்த நாங்கள், இங்கு நீங்கள் கொடுக்கும் உணவைச் சாப்பிட்டு, கூண்டுக்குள் சுற்றி வருவது மிகவும் வருத்தமாக உள்ளது. இங்கு மரங்களும் மிகவும் குறைவு. எங்களை விடுதலை செய்தால் நாங்கள் மீண்டும் காட்டுக்குள் சென்று உங்களுக்குச் சிரமம் இல்லாமல் வாழ்ந்து கொள்வோம்‘ என்றன.

‘அப்படியா உங்களின் விடுதலைக்காக நானும் முயற்சி எடுக்கிறேன்’ என்று கூறிய தயாளன் வீட்டிற்கு வந்ததும் தனக்குத் தெரிந்தவர்களிடம் பேசினான். மிருகக்காட்சி அலுவலகத்தில் சொல்லி விலங்குகளை விடுதலை செய்ய வேண்டுகோள் வைத்தான். ஆனால் சிறுவனின் பேச்சை யாரும் அவ்வளவாக பொருட்படுத்தவில்லை.

ஒரு வாரம் கழித்து மீண்டும் மிருகக் காட்சி சாலைக்கு சென்ற தயாளனைப் பார்த்ததும் அங்கிருந்த விலங்குகள் ஆவலுடன் அவனது முகத்தைப் பார்த்து ‘எங்களின் விடுதலைக்கு ஏற்பாடுகள் செய்து விட்டீர்களா’ என்று கேட்டன.

‘இல்லை... நான் சொல்வதை யாரும் காது கொடுத்துக் கேட்க மாட்டேன் என்கிறார்கள். ஆகையால் நான் போராட்டம் செய்யப் போகிறேன்‘ என்றான் தயாளன்.

‘அச்சச்சோ... எங்களின் விடுதலைக்காக நீங்கள் உங்களைப் பாதிக்கும் எதையும் செய்ய வேண்டாம்’ என்றன விலங்குகள்.

‘அதெல்லாம் பாத்துக்கலாம், எனக்கு நீங்களும் ஒரு உதவி செய்யணும், என்னன்னா நான் இப்ப ஓரிடத்தில் பதாகை கட்டிப் போராட்டம் தொடங்கி

உட்கார்ந்திடுவேன். மக்கள் உங்களைச் சுற்றி பார்க்க வரும் பொழுது, அவங்களை மகிழ்விக்கிற எதையும் செய்யாமல் நீங்கள் உங்களோட கூண்டுல அமைதியா உட்கார்ந்துக்கோங்க... அது போதும்‘ என்றான். விலங்குகளும் ‘சரி...’ என்று சொல்லி தங்களின் கூண்டுக்குள் ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து கொண்டன. மக்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் விலங்குகள் அந்த இடத்தில் இருந்து அசையவேயில்லை. போராட்டம் தொடர்ந்தது. செய்திகளிலும் இடம் பெற்றது.

அப்போது அங்கு வந்த மாவட்ட ஆட்சியர் ‘இந்தப் போராட்டத்தை நீ கைவிட என்ன செய்ய வேண்டும்?’ என்று கேட்டார்.

‘வணக்கம் ஐயா, இந்த விலங்குகளை பாதுகாப்பாக மீண்டும் அவை வாழ்ந்து வந்த காட்டுக்குள் அனுப்பித்தர வேண்டும்‘ என்றான் தயாளன்.

‘அது முடியாதே... அந்தக் காடுகள் அழிந்து பெரும்பாலும் வீடுகள் ஆகி விட்டன. அதனால் இப்பொழுது இவை களை மீண்டும் அங்கே அனுப்ப இயலாதே’ என்றார் ஆட்சியர்.

சிறிது நேரம் சிந்தித்த தயாளன் ‘எனக்கு ஒரு சின்ன யோசனை ஐயா‘ என்றான்.

‘சொல்லுப்பா, சரியாக இருந்தால் செய்கிறேன்’ என்றார் ஆட்சியர்.

‘விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் சுதந்திரமாக இருப்பதற்கு ஏற்ற இடத்தினைத் தேர்வு செய்து சரணாலயம் அமைத்துத் தாருங்கள். அவைகள் இயற்கையோடு இயல்பாக வாழட்டும். அங்கு செல்லும் மக்கள் அவைகளை சீண்டாமல், புகைப்படங்கள், காணொளிகள் எடுக்காமல்... தூரத்தில் இருந்து அவைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடையட்டும்’ என்றான்.

அதைக் கேட்டதும் ‘உனது யோசனை மிகவும் பாராட்டுக்குரியது. நிச்சயமாக செய்வோம்’ என்று சொன்ன ஆட்சியர் உடனே அதற்கான ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார்.

மரங்கள் அடர்ந்து காடுகளாக, நீர் நிலைகளுடன் இருந்த இடத்தில் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் சரணாலயங்களை அமைத்து, இந்த மிருகக்காட்சி சாலையில் இருந்த விலங்குகளையும், பறவைகளையும் அங்கு பத்திரமாக அனுப்பி வைத்தார்.

விலங்குகளும், பறவைகளும் தயாளனுக்கும், ஆட்சியருக்கும் நன்றி சொல்லிச் சென்றன.

**சு.பிரவந்திகா**

பட்டாபிராம், சென்னை - 600072



எழுத்தாக்கம்

# பாத்திமா நளீபா



தொடர் - 15

# சிரிப்பால் மறைத்த சோகம்

என்ன கூறினான்

ஹ்ம்ம்..

இத கேக்குறதுக்கு நீங்க யாரு?

நீங்க என்ட உம்மா இல்லயே நீங்க சாச்சி (சித்தி) தானே....

என்ற வார்த்தையில் அவள் வாய்கள் மூடப்படுகிறது...

அடுத்த கணம் முஹம்மது அவனுடைய பொருட்கள் உடைகள் என அனைத்தையும் எடுத்துக் கொண்டு வெளியே வர எவ்வளவோ மன்றாடியும் எந்தப் பயனும் அளிக்கவில்லை. இருவரும் புறப்பட்டார்கள். அப்போது மரியமுக்கு வயது 15 ஒரு விடயத்தை நன்றாக புரிந்துகொள்ளக்கூடிய பக்குவம் கொண்டவள். சில மாதங்கள் உருண்டோடின. மரியம் தன் தாயிடம் சென்று இனி இதுக்கு ஒரு முடிவு வேணும் உம்மா என்று கூற இவ்வளவு காலமும் எது எல்லாம் நடக்கக் கூடாது என்று நினைத்து கொண்டு பொறுமையாக இருந்தனோ அது எல்லாம் நடந்து முடிச்சிட்டு இனி என்ட என்ட புள்ளகள்ட வாழ்க எனக்கு முக்கியம். என்று ஸைனப் கூறினாள்

மரியம் - உம்மா நீங்க வேலைக்கு போங்க நான் தம்பி தங்கச்சிய பாத்து கொள்ளுவன்.

ஸைனப் - இல்ல நீ படிக்கனும் படிச்சு முன்னுக்கு வந்து காட்டணும். அது தான் நீ எனக்கு தார சந்தோஷம்.

மரியம் - சரி உம்மா நான் படிச்சு முன்னுக்கு வருவேன். நீங்க நினைக்காத மாதிரி உங்கள நா பெருமை படுத்துவேன் என்று ஸைனபுக்கு அனைத்து விடயங்களிலும் துணை நின்றாள்.

சில நாட்களுக்கு ஒரு முறை பாரிஸ் வீடு வந்து செல்வான். முன்னர் பயந்து ஒதுங்கி மரியம் இப்போதெல்லாம் அவனை எதிர்த்துப் பேச ஆரம்பித்தாள். ஒரு நாள் பகல் வேளையில் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்தான். ஸைனப் வீட்டில் இல்லை சாரா பாடசாலை சென்று இருந்தாள் யாஹ்யா கைப்பிள்ளை ஸைனப் வேலைக்கு செல்வதால் மரியம் தம்பியை பார்த்துக் கொள்ள அடிக்கடி பாடசாலை

செல்லாது வீட்டில் இருந்து படித்தவாறு தம்பியையும் பார்த்துக் கொள்வாள்.

அவ்வாறு இருந்த ஒரு சமயத்தில் தான் பாரிஸ் வருகிறான் இவள் மனம் படபடக்க ஆரம்பித்தது. காரணம் பயத்தினால் அல்ல அவள் கையில் குழந்தையுடன் நின்றாள் என்ற காரணத்தால். அவன் முன் வாசல் வழியாக உள்ளோ வர மரியம் யஹ்யாவுடன் பின்வாசல் வழியாக வெளியே சென்று யஹ்யாவை ஸைனபின் தாயிடம் கொடுத்து விட்டு வர யஹ்யா அழ ஆரம்பித்தான் ஹ்ம்ம்.. பெற்றவள் ஸைனபாக இருக்கலாம் ஆனால் வளர்த்த தாய் அவள் தானே எப்படியோ சமாளித்து விட்டு வீட்டுக்கு வந்து பார்த்தாள் பாரிஸ் புத்தகம் வைக்கப்பட்ட ராக்கையை காலால் உதைத்து கீழே தள்ளிவிட ஓடிச்சென்று ராக்கை விழாது தாங்கிப் பிடித்து விட்டாள். கோபத்தின் உச்சிக்கே சென்ற மரியம் பொறுமை இழந்து அவனை திட்ட ஆரம்பித்தாள். இவளின் வார்த்தைகளில் கோபம் கொண்ட அவன் அருகில் இருந்த தும்புத்தடியை எடுத்து அடிக்க ஆரம்பித்தான். ஸைனபின் தம்பி இடையில் புகுந்து பாரிஸை தடுத்து நிறுத்தி அவ்விடத்தில் இருந்து அனுப்பி வைத்தார். பாவம் என்ன செய்வாள் அவள்.

மரியம் சாதாரண தரப் பரிட்சையை எதிர் நோக்க இருந்தாள். படிப்பதற்கான சூழலும் இல்லை சூழ்நிலையும் இல்லை.

தன் தாய்க்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணம் இலக்காக இருந்தது. திடீரென யஹ்யாவிக்கு சுகவீனம் காரணமாக மருந்து வாங்க அந்த நொடியில் கையில் பணம் இருக்கவில்லை ஸைனபிடம். மாலை நேரம் வைத்தியசாலை செல்வதாயின் நெடுந்தூரம் பயணம் செய்ய வேண்டும் என்பதால் வேறு வழியின்றி ஊரில் உள்ள செல்வந்தர் ஒருவரிடம் தன் பிள்ளையின் நிலை கூறி மருத்துவத்திற்கான உதவியை கடனாக கேட்கிறாள்.

அவன் உதவி செய்ய மறுத்து இருந் தால் கூட ஸைனபின் மனம் சற்று வேதனையுடன் அடங்கியிருக்கும். ஆனால் அவன் கூறிய வார்த்தை

'நீங்க எல்லாம் எதுக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற ஆச பட்றீங்க அதுக்கு தான் உங்கள மாதிரி உள்ளவர்களுக்கு அரசாங்கம் கட்டி போட்டு இருக்கு அங்க போங்க என்று கூறி அனுப்பி வைக்கிறான்'

அன்று இரவு முழுவதும் அந்த குழந்தை சுகயீனத்தால் அவதிப்பட்டு வந்தது. காலையில் வேலைக்கு செல்லாது விடு முறை பெற்று வைத்தியசாலை செல்கிறாள் ஸைனப். ஸைனப் வருவதற்கு இடையில் பகலுணவையும் சமைத்து விட்டு வீட்டு வேலைகளையும் முடித்து விட்டாள் மரியம். சமைக்கும் பக்குவம் கொண்டவளா என்று நீங்கள் நினைத்தால் நிச்சயமாக பக்குவம் கொண்டவள் அவ ளின் தாய் அவளுக்கு பத்து வயது இருக்கும் போதே இவற்றை சிறந்த முறையில் பக்குவப்படுத்தி உள்ளாள்.

வீடு பற்றி கூறும் போது. கைகளால் எட்டிப் பிடிக்கும் அளவிற்கு தகர்த்தினால் அமைக்கப்பட்ட கூரை,கதவு ஜன்னல்கள் அற்ற வீடாகவும், மழை நாட்களில் பீரிட்டு ஓடும் சேற்று நீர்கள் வீட்டினுள் நுழைந்து வீடு முழுவதும் நிறைந்து விடும். இவ்வாறான அமைப்பு கொண்ட வீடு தான் அவர்கள் வாழ்ந்த வீடு.

ஹ்ம்ம்..

கதைக்குள் செல்வோம்.

மருத்துவ உதவி மட்டுமல்லாது இன்னும் பல உதவிகளுக்காக ஊரில் உள்ள செல்வந்தர்களை நாடினார்கள்.

உனது கணவன் குடிகாரன்....

உனது கணவன் குடிகாரன்....

உனது கணவன் குடிகாரன்....

நாளாப் புரமும் இதே பதில் அவர்க ளின் வீட்டுப் படிகளை மிதிப்பது புன்னகையுடன். திரும்பி வருவது என் னவோ கண்ணீருடனாக இருந்தது.

அன்று ஒரு முடிவில் தீவிரமாக இருந்தாள் ஸைனப் அந்த முடிவு குறித்து மரியமுடன கலந்தாலோசித்து அந்த முடிவில் தெளிவு பெற்றாள். உறுதி கொண்டாள்.

வேதனைகளுடனும் வலிகளுடனும் கடந்து அவர்களது வாழ்க்கை தற்போது எடுக்கப்போகும் முடிவு ஒன்றினால் விடியலை நோக்கி செல்லுமா...



தொடர் - 16

# சிரிப்பால் மறைத்த சோகம்

என்ன முடிவாக இருக்கும்...

ஹ்ம்ம்..

விவாகரத்து..

ஸைனப் வீட்டிற்கு இது வரை இந்த பிரச்சினைகள் குறித்து எதுவும் கூறியதில்லை. முதல் முறையாக வீட்டில் அனைவருக்கும் இந்த விடயம் குறித்து கூறுவோம் என்று நினைக்கும் போது சற்று தயக்கம் கொள்கிறாள் காரணம் விவாகரத்து விடயம் பற்றி தீர்வானதும் கூறுவோம் என்று மறுத்து விட்டாள். ஸைனப் மரியம் இருவரும். விவாகரத்து தொடர்பாக ஒருவரை பார்க்கச் சென்று அவரிடம் அனைத்து தகவல்களையும் ஒப்படைத்து விட. குறிப்பிட்ட திகதியில் வருமாறு கூறினார்.

இருவரும் அவ்விடத்தை விட்டு வீடு நோக்கி நகர்ந்தார்கள். வரும் வழியில் பழங்களையும் காய்கறிகளையும் சந்தையில் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார்கள். வீட்டில் மரீனா யஹ்யாவை உறங்க வைத்தபடி வீட்டினுள் கட்டிலில் அமர்ந்திருந்தாள். ஸைனபும் மரீனாவின் அருகில் அமர்கிறாள். மரியம் வீட்டினுள் சென்று அவளது கற்றல் வேலைகளை செய்ய ஆரம்பித்தாள். ஹ்ம்ம்... ஸைனப் மெதுவாக தன் தாயிடம் பேச்சை ஆரம்பிக்கிறாள். ம் ம். உம்மா உங்கிட்ட ஒன்னு சொல்லனும் என்று ஆரம்பித்தவள் ஒரே மூச்சில் அனைத்தையும் சொல்லி முடித்தாள். மரீனா சற்று நேரம் கழித்து அவளது முடிவுக்கு ஒத்துழைப்பு வழங்கினால். இவ்வாறு நாட்கள் நகர்ந்து முதல் வழக்கு நடைபெற்றது பாரீஸூம் வருகை தந்திருந்தான் ஸைனபுடன் முதல் வழக்குக்கு மரீனா சென்றாள். சில மாதங்களின் பின்னர் இரண்டாவது வழக்கும் நடைபெற்றது. அதுவும் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இறுதி வழக்கிற்கு மரியத்தை அழைத்து வரும் படி கூறினார்கள். மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் வழக்கு நடைபெற்றது. மரியம் ஸைனப் மரீனா மூவரும் சென்றார்கள்.

விசாரணை நேரம் ஆரம்பிக்கப்பட்டது விசாரணைக் கூண்டில் ஒருபுறம் பாரிஸ் இன்னொரு புறம் ஸைனப். இதைப் பார்த்தவாறு அமர்ந்து இருந்தாள் மரியம். இருவருக்கும் இடையே விசாரணை நடைபெற ஸைனப் விவாகரத்தில் உறுதியாக இருப்பதாக கூறினாள் பாரிஸ் இன்னொரு வாய்ப்பு தருமாறு கேட்டுக் கொண்டான்.

ஆனால் ஸைனப் ஏற்கவில்லை தன் முடிவில் தீவிரமாக இருந்தாள் கோர்ட் உத்தரவு படி மரியம் அழைக்கப்பட்டாள் ஆனால் அதை யாரும் எதிர் பார்க்கவில்லை. என்ன என்று தெரியாமல் நெஞ்சு படபடக்க ஆரம்பித்தது ஏன் என்றால் இது முதல் தடவை அதுவும் தாயா தந்தையா என்ற தீர்ப்பு

தாயும் தந்தையும் இரண்டு கண்கள் என்பார்கள் ஒரு கண்ணில் காயம் என்றால் நிச்சயமாக மற்றைய கண்ணும் அல்லவா கலக்கம் கொள்ளும். எவ்வளவு பெரிய துரோகியாக பாரிஸ் இருந்தாலும் தன் தந்தை என்ற உறவு சற்று தடுமாறத் தானே செய்யும். இரண்டாவது முறையாக பெயர் கூறியதன் பிற்பாடே அவள் தன் இருக்கையில் இருந்து எழுந்து அவர்களை நோக்கி நடக்கின்றாள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு கால் அடித்தடமும் தைரியத்தை உண்டு பண்ணியது. இருவருக்கும் நடுவில் நிறுத்தப்பட்டாள்.

நீதிபதி - உங்கள் பெயர் கூறுங்கள்

மரியம் - எனது பெயர் மரியம்

- வயது 15

நீதிபதி - இவங்க யாரு உங்களுக்கு

மரியம் - பெற்றோர்

நீதிபதி - யார் கூட ரொம்ப பாசம்

மரியம் - இருவரும் இல்லை என்றால் இப்போது இந்தத்தருணம் நான் இல்லை இருவர் மீதும் எனக்கு அன்பு உண்டு

நீதிபதி - சரி உங்கட வாப்பா சொல்றாரு இன்னுமொரு வாய்ப்பு வேணும் நான் திருந்தி வாழ்வதற்கு என்று, உங்கட உம்மா சொல் றாங்க விவாகரத்து தான் வேணும் என்டு. அப்படி இருக்க நீங்க சொல்றதுல தான் தீர்வு இருக்கு. நீங்க என்ன சொல்றீங்க வாப்பா கூட வாழ விருப்பமா?..... மரியம் - மௌனம் கொள்கிறாள்...

இந்த மௌனத்திலும் சற்று அவளது பார்வை வெளிநோக்கி செல்கிறது. அவள் பார்வையில் ஒரு கோர முகம். மறைந்து நின்று நடப்பதை நோட்டமிட்டவாறு இருப்பதை பார்த்தாள்.. அவள் கீதா பாரிஸ் அவளுடனே அன்று வருகை தந்திருந்தான் என்பதை தெளி வாக புரிந்து கொண்டாள்..

இந்த மௌனத்தின் பின்னால் அவள் வழங்கும் பதில் என்னவாக இருக்கும்.



தொடர் - 17

## சிரிப்பால் மறைத்த சோகம்

மரியம் - மௌனம் கொள்கிறாள்.......... மௌனம்.....

மௌனம் சம்மதத்தின் அறி குறிகள் என்பார்கள். ஆனால் இங்கு மௌனம் அதற்கான ஒன்றல்ல.

நீதிபதி - மௌனமா இருக்கீங்க சம்மதமா

மரியம் - ஒரு கூறிய பார்வையில் தன் தந்தையை பார்க்கிறாள், பார்த்து விட்டு நீதிபதியை நேருக்கு நேராக நிமிர்ந்து பார்த்தாள். எனக்கு வாப்பா (அப்பா) வேண்டாம். அவர் தந்தை என்ற உறவு களுக்கு தகுதி அற்றவர் என்றாள்

நீதிபதி - ஒருவாய்ப்பு குடும்போமா மகள்

மரியம் - நீங்கள் ஒரு வாய்ப்பு தான் கொடுக்கும் படி கூறுகிறீர்கள். ஆனால் இது வரை என் தாய் பல வாய்ப்புகள் வழங்கி விட்டார் இனியும் வேண்டாமே இந்த வாழ்க்கை. என்று தன் முடிவை உறுதியாக கூறினாள்

நீதிபதி - சரி மகள் நீங்க போகலாம். என்று கூறிய நீதிபதி

மகள் என்று அழைத்தார்...

திரும்பிப் பார்த்தாள்..

உன் தைரியத்திற்கு உனக்கு சிறந்த எதிர் காலம் உண்டு சென்று வா என்று வாழ்த்தினார்....

(அவ்விடம் விட்டு நகர்கிறாள் தன் இருப்பு இடத்திற்கு செல்லும் போது தந்தையை கடந்த செல்ல வேண்டும் அவ்வாறு அவள் கடக்க முதல் அடி வைக்கும் போது பாரீஸ் அவளைப் பார்த்து 'நன்றி கெட்டவள்' என்ற வார்த்தை அவள் முகம் எதிரே கூற அவனை முதலும் இறுதியுமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு ஒரு புன்னகையுடன் கடந்து சென்று அவள் அமர்க்கையில் அமர்ந்து கொண்டாள்)

சில மணி நேரங்களில் வழக்கு நிறைவு பெற்று தலாக் கூறப்பட்டது. ஸைனப்,மரீனா, மரியம் அவ்விடம் விட்டு வெளியே வர மீண்டும் இவர்களின் கண் ணில் பாரிஸும் கீதாவும் ஒன்றாக முச்சக்கர வண்டியில் செல்வது காண்கிறார்கள். இனி அது அவர்களின் வாழ்க்கை என்று மனதிற்குள் கூறியவாறு வீட்டை நோக்கி நகர்ந்தார்கள்.

மரியம் மனதில் பாரிஸ் கூறிய அந்த

வார்த்தைகள் ரணமாகவே இருந்தது. இன்று வரை...

மாதங்கள் உருண்டோடின....

மரியம் சாதாரண தரப் பரிட்சையை எதிர் நோக்கினால். ஏதோ ஒரு மன நிலையில் அதையும் சிறந்த முறையில் எதிர் கொள்கிறாள். ஸைனப் பாரிஸை விவாகரத்து செய்ததால் (இத்தா) இருக்க வேண்டும். வேலைக்கு செல்ல முடியாது. ஸைனபின் சகோதரர்கள் அவர்களால் முடிந்த உதவிகளை செய்து வந்தார்கள். ஆனால் மரியம் பரீட்சையை முடித்து விட்டு வீட்டில் இருந்ததால் தாயின் அனுமதியுடன் பாடசாலையில் உதவி ஆசிரியராக பணியாற்றினால். அதன் மூலம் கிடைத்த வருமானத்தில் வீட்டுக்கும் கொடுத்து விட்டு. தாயின் வேண்டுகோள்க்கு இணங்க உளவியல் கற்கையை கற்பதற்கு ஆரம்பித்தாள். சில மாதங்களில் மீண்டும் ஸைனப் வேலைக்கு செல்ல ஆரம்பித்தாள்.

இவ்வாறு நாட்கள் கழிய சாதாரண தரப் பரிட்சை பெறுபேறுகள் வெளியானது. ஹ்ம்ம். அல்ஹம்துலில்லாஹ். உயர் தர கற்கையை தொடர முடியுமான நிலை காணப் பட்டது. சிறந்த முறையில் உள வியல் கற்கையை நிறைவு செய்தாள்...

வீட்டில் குடும்ப சூழ்நிலை வறுமை காரணமாக மிகவும் வாட்டியது. உயர் கல்வியை தொடர்வதா இல்லையா என்ற மனநிலையில் அவள் இருக்க அவள் தாய்க்கு வழங்கிய வாக்குறுதியும் நினைவில் எட்டி எட்டிப் பார்த்தது. அப்போது ஒரு குரல் அது ஸைனப் ஒன்னும் யோசிக்க தேவ இல்ல நீ படிக்கனும் படிச்சு முன்னுக்கு வந்து காட்டணும். நா எப்படியாவது உங்க மூனு பேரையும் நல்லா படிக்க வச்சி ஆளாக்குவன் இன்ஷா அல்லாஹ்.

தொடரும்...

# கொலுசொலி

எத்தனையோ
குழப்பங்களைச் சுமந்தபடி
நுழையும் போதும்
எத்தனையோ சிந்தனைகளில்
வெளிவராமல் தவிக்கும் போதும்
எத்தனை எத்தனை கோபங்களோடு
தலைகீழாகக் குதிக்கும் போதும்
இறக்கி வைத்து
வெளியே இழுத்து
நேராக்கி விடுகிறது
கேட்கலாமா வேண்டாமா என
இப்படியும் அப்படியும் அலையும்
உன் கொலுசொலி

**கி. கவியரசன்**
செங்கம், திருவண்ணாமலை



# வாழ்த்துப்பா



நாருடன் பூவாய்ச் சின்ன
நகத்துடன் விரலாய் ஒடும்
நீருடன் ஆறாய் வீழும்
நிழலுடன் உருவாய் வானக்
காருடன் மழையாய்ப் பாடுங்
கவியுடன் பொருளாய் மண்ணுள்
வேருடன் பயிராய் இன்பம்
விளைந்திட வாழ்த்து கின்றேன்.

கூடலும் பொங்கப் பொங்கக்
குதூகலத் திடையே சின்ன
ஊடலும் பொங்கப் பொங்க
உயிருடன் உளமுஞ் சேர்ந்துத்
தேடலும் பொங்கப் பொங்க
திகட்டிடா இன்பம் தேடி
வாடலும் பொங்க உங்கள்
வாழ்வெலாம் இனித்தி டட்டும்

மணமகள் இஷ்மா ரம்லி
மல்லிகை வாசந் தன்னை
மணமகன் ஆஷிக் ஹுசைன்
மஞ்சமிட்டாண்டு நாளும்
குணமகள் மகிழ்வுக் கெல்லாங்
குத்தகை இவரே ஆகிக்
கணமெலாம் பிரிந்தி டாமல்
களிப்புடன் வாழ்க் வாழ்க

பத்துடன் ஆறு செல்வம்
பதமுடன் பெற்றுத் திங்கள்
பத்துடன் பிள்ளை ஒன்றைப்
பாசமாய்ப் பெற்றெ டுத்து
முத்துடன் பூட்டி அந்த
முழுநிலா மழலை பேச
அத்துடன் ஒன்றும் கூட
அமின்நானும் வாழ்த்து கின்றேன்.



**தமிழ்நெஞ்சம் அமின்**
**பிரான்சு**

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

பெப்ரவரி 2025

